# வாழ்வினுள் வசந்தம்



காஞ்சனா ஜெயதிலகர்

## உள்ளே...!


1. வாழ்வினுள் வசந்தம்..! 5
2. நேசம் நறுமணமாய் 122


# வாழ்வினுள் வசந்தம்..!

## 1

அபூர்வமாய் கிடைப்பதில் ஆர்வம் மிகுவது சகஜந் தான்... இது அபூர்வமாய் வாய்த்த தனிமை.

ஆக அதை ஆசையுடன் அனுபவிக்க ஆரம்பித்தாள் வாஸந்தி. பள்ளி, கல்லூரி நாட்களில் அவளிருந்தது ஹாஸ்டலில். அங்கிருந்த கூட்டம், கலாட்டாவிற்குக் கேட்பானேன்?

அதை எல்லாம் ரசித்தாலும், அவ்வப்போது இவளே பங்கு பெற்றாலும்கூட சிறு பொழுதேனும் அமைதியும் தனிமையும் வாய்க்காதா என்றும் அவள் ஏங்கியதுண்டு.

ஆனால் அந்த ஏகாந்தம் ஏக்கமாய் தேடிய இவள் பிடிக்கு சிக்கவேயில்லை! விடுமுறைகளில் தன் தந்தை வாத்தியாராய் உத்தியோகம் பார்த்த கிராமத்திற்கு வாஸந்தி வர, அக்கம்பக்கத்தார் கிளர்ந்து எழுவார்கள்!

''அடடே, நம்ப வாத்தி வூட்டுப் பொண்ணு அதிகாலமே ஊரிலேருந்து வந்தாச்சு... தெரியுமில்ல?''

'ஏம்பூ படிப்பு சாஸ்தியோ...?'

'சாப்பாடு சுகமில்ல போல... குச்சா இளைச்சிருச்சே இப்படி முதலில் வந்து பிள்ளை..?' தோளைத் தடவி விசாரிப்பவர்கள், மறுமுறை பலகாரங்களுடன் படை எடுப்பார்கள்.

அப்பா மாற்றலாகிப் போகும் அத்தனை கிராமங்களும் அன்பில் ஒன்று போலவேத்தான் - தவிர தாயற்ற பெண் என்ற இளக்கமும் சேர, வாஸந்தியைத் தனியே விடுவதே கிடையாது.

'இப்படி' வூட்டுக்குள்ளயே அடைஞ்சு கிடந்தா எப்டி?' என்று தங்கள் வீட்டிற்கு கையோடு கூட்டிச் செல்வார்கள் - அல்லது அங்குள்ள இளம் வட்ட குட்டிகள் பல்லாங்குழி, தாயம், பரமபதம் ஆட இங்கே வந்து விடுவது.

அங்கு நேரம், நிமிஷங்கள் எல்லாம் பொக்கிஷங் களல்ல - போக்க வேண்டியவை! அதுவும் டவுன் பெண் ணோடு பேசி, ஆடி போக்கிவிட்டால் - அது போதுமான பெருமை!

பெருமிதமான விசேஷம்!

''அப்பா, நா வாசிக்க, நிறைய புத்தகங்களை இரவல் வாங்கிட்டு வந்திருக்கேம்ப்பா. ஒரே மணி நேரத்துல சமையலை முடிச்சுட்டு ஆற அமர வாசிக்கணும்னு இங்கே கொண்டு வந்தேன்...'' என்றிவள் கெஞ்ச, 'ஆகட்டும்ப்பா' என்பவர், பிறகு பாய்ந்து வரும் பெண்கள் கூட்டத்தைக் கண்டதும் ஒதுங்கி விடுவார்.



''என்னப்பா நீங்க? சொல்லலாம்ல - வாஸு வாசிக் கணும்னு?''

''அவங்க மனசு சங்கடப்படும்டா... ராத்திரி நேரமா வாசியேன்..'' நாள் முழுக்க மாறி மாறி வீடு வருபவர்களை உபசரித்து, பேசி, உடன் விளையாடி, காபி தரும் அவள் வீடு காலியானதும், ஒழித்து படுத்தால் கண்கள் சொக்கி விடும்!

கல்லூரி படிப்பு முடிந்து வேலை தேடி வாஸந்தி அலைந்தபோதும் கூட உறவுக் குடும்பங்கள் இருந்த இடமாகவே போய் வர, அப்பா அனுமதிப்பார்.

'அம்மா இல்லாத பெண்ணாச்சேடா - அப்பா நான் அதிஜாக்ரதையாய் இருக்கணுமில்லையா?'

அபூர்வமாகவே அவர் அம்மாவைப் பற்றி பேசுவார் - சும்மாவே அதிகம் பேசாத சுபாவி அவர்... அம்மாவைப் பற்றி இவள் பேச்செடுத்தால் மௌனியாகிப் போவார்.

வீடும் வரும், அல்லது தான் போய் தங்கும் உறவின ரிடம் தன் தாய் பற்றி கேட்டுத் தெரிந்து கொண்டதுதான் -

'உங்கம்மா கட்டியவருக்கேத்த புண்ணியவதி - வார்த்தையை விட அதிகங் குறுஞ்சிரிப்புதான் - எளிய வீட்டுப் பொண்ணுன்னாலும் வளப்பமாயிருப்பா - ஆனா ரெண்டாம் பிரசவத்தும் போது தாய் வீட்டில மகளைக் கூப்பிட்டுக்கலை... அந்த சம்சாரி வீட்டிலேயும் நாலும் பொண்ணுங்க... எத்தனை பிரசவத்தத்தாம் பாக்கன்ற அலுப்பு - உங்கப்பா அப்ப இருந்ததும் கிராமத்து ஸ்கூல்ல தான்... அங்க வைத்திய வசதி போதாம... பிரசவிக்க முடியாம உங்கம்மா இறந்தாச்சு..'

கண்களில் நீர் கோர்க்க கேட்டிருப்பாள் -

'அதுல உங்கப்பா மேலும் சுருண்டுட்டாரு.. ஒப்பாரி வைக்க உறவெல்லாம் வர, 'இந்த நாடகமெல்லாம் வேணாம் - கர்ப்பவதிக்கு கடைசி மாசமேனும் கூட இருக்க உறவிலே தலை நரைச்ச ஒருத்தரும் வரலியே?' என்று கண்டிச்சு பேசினதோட சரி... ஒதுங்கிட்டாரு... பிறகும் உதவ, வந்து உரச உறவுகளுக்கும் ஏது சமயம்? காலம் அப்படி அரக்கப் பரக்கல்ல பாயுது?'

வாஸந்தியும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

நான்கு நாட்களுக்கு மேல் விடுப்பு கேட்டால் 'புது ஆளை அமர்த்திக்கறேன் - போய்யா' என்று முதலாளிகள் முறுக்கிக் கொள்ளும் காலமிது. நல்ல வேலை அமைய இவளுந்தான் ஓடி சாடுகிறாள்...

'உங்கப்பாவைப் போல அரசாங்க உத்யோகம்ன்னா தேவலை...' என்றனர். ஆனால் அப்பா தன் வேலையை அலட்சியமாய் எண்ணியதில்லை. துல்லியமாய் வைத் திருப்பார் - கிராமத்து வாழ்வும், மக்களும் அவருக்குப் பழகி, பிடித்தும் போக, டவுன் பள்ளிக்கான மாற்றல்களைக் கூட நிராகரித்தவர் -

அது கிராமத்து பள்ளிக்கு மாற்றல் என்றாலே அலறிய மற்ற ஆசிரிய பெருமக்களுக்கு வசதியாய் போக, பண்ட மாற்று போல தங்கமணி வாத்தியாருடன் மாற்றல் மாற்றம் செய்து கொண்டனர்!

ஆனாலும் அப்பா, மகளை டவுனின் சிறந்த பள்ளியி லேயே சேர்த்து படிப்பித்தார்.

'நீ எங்கூடவே இருந்தா சந்தோஷந்தாம்மா வாஸு - ஆனா நாளைய பின்ன 'என் வாழ்வைப் பாழ் பண்



ணிட்டீங்களேப்பா'ன்னு நீ விரல் நீட்டிறக் கூடாதில் லடா?' - விளக்குவார்.

'நா அப்படி சொல்வேணாப்பா?'

'ல்ல - உனக்கு அப்படித் தோணுனாக்கூட ஒரு அப்பனுக்கு அது தோல்விதானடா? நாஞ் சரி, உனக்கும் பட்டணத்து வாசம், வசதியை நா ஏம் மறுக்கணும்...? தவிர...'

சிறு கூச்சத்துடன் நிறுத்தியவரை மகள் கெஞ்சுவாள்.

"சொல்லுங்கப்பா..."

"நல்ல செயலான குடும்பத்துப் பிள்ளையத்தான் உனக்குப் பாக்கணும்மா. சூட்டும் கோட்டுமாய் நாகரீகமான படிச்ச, பண்பான மாப்பிள்ளை அமையணும்... அதுக்குத் தோதாய் நீயும் இருந்தாவில்ல?'

"உங்களுக்குக் கிராமம் பிடிக்குமேப்பா..."

அவசரமாய் குறுக்கிடுவார் - "அதெல்லாம் என்னோட போகட்டும்பா - உனக்கு பட்டணத்து பிள்ளைதான் - ஸூட்டு போட்ட ராஜகுமாரன்."

நாசுக்கும் நாகரீகமுமாய் தன் மகள் வளர்ந்து நிற்பதில் அப்பாவின் பெருமை - அவரது முகத்திலே தகதகப்பாய் தெரியும். விடுமுறைகளில் வீட்டிலிருக்கும் மகளைத் தேடி ஊரார் வந்து குவியதிலும் பெருமிதம்தான்.

ஆனால் வாஸந்திதான் தனக்கான நேரம் கிடைக்காமல் தவிப்பாள். தவிர முன்னறையில் அப்பாவின் ட்யூஷன் வேறு.

கரிகால சோழன் கல்லணையை எந்த ஆண்டு கட்டினான் என்பதைப் பிள்ளைகள் இருபது முறை கத்திச்

சொல்ல, இரவில் இவளது கனவிலே கல்லணையும் சோழனும் தோன்றி விடுவார்கள்!

ஒரு வழியாய் அந்தத் தனியார் நிறுவனத்தில் தனக்கு வேலை கிடைக்க, வாஸந்திக்கு திருப்தி என்றாலும், அலுவலகத்தின் அருகிலேயே இருந்த அப்பெண்கள் விடுதியில் மூன்று பேராய் தங்கும் அறையை கிடைத்த தில் சிறு குறைதான். ஆனால் விளம்பரங்களை உரு வாக்கும் அந்நிறுவனத்தில் - வரவு, செலவு மாடல்களுக்கு அவர்கள் வேலை எங்கே என்று நினைவூட்டுவது, வரவேற்பு என்று சகல வேலைகளையும் பழகும் மும்முரத்தில் குறைபட நேரமில்லை.

ஓரளவு வேலை பிடிபட ஆரம்பித்த வேளையில் புதி தாய் முதலாளி தந்த வேலை அவளை பிரமிக்க வைத்தது -

மூன்று நாட்கள் தான் வெளியூர் - அதுவும் கோவா போய் வர வேண்டுமா?

''உன் தங்குமிடம் எல்லாம் ஏற்பாடாயிற்று - டிக்கெட்ஸ் கூட வந்து விடும் - வேறொன்றுமில்லை... தனிப்பட்ட என் பிஸினஸ் டீல் ஒன்றை நீ முடித்து விட்டு வரணும்... இங்கே இப்ப நான் நகரக் கூட முடியாத நிலைமை - உனக்குத்தான் தெரியுமே.. வாஸந்தி..''

பரணீதரன் தோள் குலுக்கினான்.

இவளது முதலாளி பரணி முப்பதை சமீபத்தில் தாண்டிய இளைஞன்தான்.

விளம்பரம் சம்பந்தப்பட்ட வேலை என்பதால் தோற றத்தில் அதிக அக்கறை காட்டியிருப்பான். சமீபத்தில் திருமணமும் நிச்சயமாயிருந்ததில் அந்தக் களை வேறு..



'எல்லா ஏற்பாடுகளையும் செய்துடலாம் - நல்ல ஹோட்டலில் ரூம் புக் பண்ணிடலாம் - சைட் - ஸீயிங் கூட ஹோட்டலிலேயே ஏற்பாடு பண்ணிடுவாங்க - நீ செய்ய வேண்டியதெல்லாம் அந்த இடத்தைப் போய் பார்த்துட்டு, என் சார்பாய் ஒரு கையெழுத்து போட்டுட்டு திரும்பணும். என் வக்கீல் மூலம் அந்த உரிமையை உனக்குத் தரவும் ஏற்பாடு செய்திடலாம்..'

'பவர் - ஆஃப் அட்டார்னி போலவா?'

'நீ கெட்டிகாரி - சரசம்மா எப்படியும் உடம்பு சுகமில்லைன்னு முனங்கிக் கிடக்கறா.. ஆக நீ போனால் இந்நேரம் எனக்கது - பெரிய உதவி..'

உதட்டை விரித்து கண்களைச் சுருக்கி முதலாளி கேட்க அவளுக்கு மறுக்கத் தோன்றவில்லை - இவளது வெலவெலத்த மௌனத்தையே சம்மதமாய் கொண் டவன் மறுநாளே இவள் கையில் பயணச் சீட்டையும் தந்து விட்டான்.

அது கையில் படபடக்க, மனசும் சற்று துள்ளியது.

கோவா - இந்தியாவிற்கு பல உலகத்தர சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் கடற்கரை - அங்கே மூன்று நாட்கள்... போட வேண்டியது ஒரு கையெழுத்து மட் டுமே... சொச்ச நேரம் ஊரின் அழகைப் பார்த்து, பின் விச்ராந்தியாய் புத்தகம் வாசிக்கலாம்...

'சென்னை திரும்புவதற்கு விமான டிக்கெட்டிற்குச் சொல்லியிருக்கேன் வாஸந்தி. அதை ஹோட்டல் ரிஸப்ஷனில் வாங்கிக்கொள்..'

அவளுக்கு அப்போதே பறப்பது போலிருந்தது..!

# 2

பயணம் மட்டுமல்ல, பயணத்தின்போது ஏற்பட்ட எண்ணங்களுமே கூட சௌகர்யமாகவே இருந்தன.

அப்பாவிடம் கூட தெரிவிக்காமல் கிளம்பியது முதலில் நெருடினாலும் இப்போது யோசிக்க அது சரியான முடிவென்றே பட்டது. சொன்னால்,

'தனியாகவா? எங்கே தங்குவாய்? அங்கே நம்ப உறவுக்காரங்க யாருமில்லையேடா' - என்று பதறுவார்.

முதலாளி சேர்ந்து சில மாதங்களே ஆன ஊழியர் தன்னிடம் நம்பித் தரும் முக்கிய வேலையை -

'என்னால் முடியாது ஸார்' என்று மறுத்தால், மட்டமாய் நினைக்க மாட்டார்?

பிறகு வேலையில் முன்னேறுவது எப்படி?

தவிர பரணி ஸார் இயலாமையின் காரணமும் இவளுக்குத் தெரியுமே.. அவரது வருங்கால மாமனார்க்கு மாரடைப்பு - முதலில் ஆஞ்சியோ ப்ளாஸ்டி செய்யலாம் என்ற மருத்துவர்கள், அடைப்பு அதிகம் அதை நீக்க அறுவை சிகிச்சை அவசியம் என்று விட, பரணி இங்கேயே வருங்கால மனைவியின் குடும்பத்துடன் - இருக்க வேண்டிய சூழல். மகனில்லாத அந்த குடும்பத்திற்கு தன் ஆதரவைக் காட்ட வேண்டிய சமயமிது.

இது வாஸந்தியின் முதல் வேலை அல்ல -



முன்பு ஏற்பட்ட சில வேலை - அனுபவங்கள் அவளுக்கு உத்யோகம் அமைவது அத்தனைச் சுலபமல்ல என்பதை உணர்த்தியிருந்தன -

தங்கும் விடுதி ஏதும் அருகில் இல்லாத அத்துவானத்திலிருந்து ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை.

''வாடிக்கையாளர்களை சமாளிப்பது உம்பொறுப்பம்மா'' என்றிருந்தார் அக்குறுந்தாடி முதலாளி -

ஆனால் யாரும் அவளை அங்கு தேடி வரவில்லை.

இவள்தான் அவர்களை நாடி ஓட வேண்டியிருந்தது - அவளால் முடியவில்லை.

மறு நிறுவனத்தில் இவளைப் பிழிந்தெடுத்த அளவிற்குச் சம்பளம் தரவில்லை. தன் செலவிற்கு அப்பாவை காசு கேட்க நேருமோ என்று அஞ்சினாள். அடுத்து வந்த ஒரு டிராவல் - ஆபீஸ் வேலையில் எட்டுக்கு எட்டு அறையில் முடங்கிக் கிடந்தவளுக்கு இதோ இந்த வேலை தேவலை என்று பட்டது.

இங்கும் ஆட்கள் அதிகமில்லை.. இவளைத் தவிர்த்து ஒரே பெண் ஊழியர் சரசம்மாதான் -

'ஒஃபீஸ் ஆரம்பிச்ச நாளிலேருந்து நான் இவிட உண்டு' என்று பீற்றிக் கொண்ட முதிர்கன்னி.

எண்ணெயிலேயே குளித்தது போன்ற கருகரு ஈரக் கூந்தல் - மதர்த்த மார்புகளை மேலும் எடுப்பாகக் காட்டும் சேலைக்கட்டுடன் இருக்கும் அவளுக்கு சுகமில்லை என்றதால் பரணி தன்னை அனுப்ப நேர்ந்திருக்கிறது -

'ஆம்பளைப் பயல்களை நம்பி அனுப்ப எனக்குப் பயம் வாஸந்தி, என் கையெழுத்தை வேறெதற்கும் பயன்படுத்தி

கம்பெனியையே எங்கிட்டேருந்து உருவிடுவானுங்க..' என்றும் சொல்லியிருந்தாரே பரணி... ஸார்.

ஆக நம்பி, உதவி கேட்கிறார் -

தட்டக் கூடாது.

ஆக, இதோ கோவா வந்தே விட்டாள்!

சென்னையைப் போலவே இதுவும் ஒரு கடற்கரை நகரம்தான் என்றாலும் எத்தனை வித்தியாசம்..?

சென்னை - அரிதாரம் பூசிய முதிர்கன்னி என்றால் -

கோவா - கடல் அலையில் காட்சி தரும் இளம் கடல் கன்னி..!

அந்த ஆச்சரியத்துடன் அதிசயமாய் பார்த்தாள்.

நகரில் ஒரு அடுக்குமாடி கட்டிடம் கூட இல்லை.. எளிய சிங்கார வீடுகள், கட்டிடங்கள்... அதற்குத் தோதான எளிய உடையில், குதூகலச் சிரிப்புடன் மனிதர்கள்..

டாக்ஸியில் விழி நிரம்பப் பார்த்தபடி அந்த ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தாள் - கடற்கரையை நோக்கிய நறுவிசான அந்நவீன ஹோட்டலில் அவளை,

'யெஸ் மாம் - உங்களுக்கான அறை புக் செய்யப் பட்டிருக்கிறது.'

'நம்பர் 104' என வரவேற்று கூடவே ஒரு இளநீரும் பருகத் தந்தார்கள் -

தன் அறைக்குள் நுழைந்தவளுக்கு பரவச நிலைதான் - இத்தனை அலங்காரமும் அம்சமுமான அறையில் அவள் இதுவரை தங்கியதில்லையே... அதுவும் தனியாக!



இரட்டை கட்டிலை, அலங்கார விளக்குகளை, நூதனமான ஒப்பனை மேஜை, கண்ணாடியை, மிரட்டிய நவீன குளியலறையை ஆர்வத்துடன் ஆராய்ந்தாள் -

ஒருவழியாய் குளிக்க எந்தக் குழாயை எந்தளவிற்குத் திருகுவது என்பது புரிந்ததும் கட்டிலில் பெட்டியை வைத்துத் திறந்து, தன் உடைகளைப் பரத்தினாள் -

நாளை காலைதான் வேலை - ஆக இப்போது பயண அலுப்பு தீர குளித்து விட்டு கடற்கரையில் நடக்கலாம்.

உடைகளை அங்கேயே களைந்து விட்டு ஒரு துவாலையுடன் குளியலறைக்கு ஓடியவளுக்கு அந்த அமைதி சற்று அசௌகர்யமாய் பட, டி.வி.யை உயிர்ப்பித்தாள் - தேடிப் பிடித்த 'ஸன்'னில் பாடல் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது -

**'ஒரு நாளும் உனை மறவாத இனிதான மனம் வேண்டும்...**

**எனை ஆளும் எஜமானே..'**

அவளையும் மீறி சிரிப்பு பொத்துக் கொண்டது.

கல்லூரியில் அவளது அறைத் தோழியான மலேஷிய பெண்ணிற்கு இப்பாடலின் ராகம் மிகப் பிடிக்கும் - 'டேப்'பில் அதை அனுபவித்து உடன் பாடியவள் கொச்சைத் தமிழில் -

'இந்த வேலைக்காரப் பொண்ணுக்கு எத்தனை எஜமான் விஸ்வாசம் இல்லை..' என்று சிலாகிக்கவும்தான். மற்ற பெண்கள் வாயார சிரித்த பின் எடுத்துச் சொன்னார்கள் -

'அது வேலைக்காரியுடையதல்ல - வீட்டுக்காரியின் பாடல்' என.

'சும்மா சொல்றீங்க... ஆளும் எஜமானேன்னு... எவ்வளவு ஃபீல் பண்ணி பாட்றா.'

அங்கிருந்த சீனியர் கிரேஸி விளக்கினாள் -

'மக்குப் பெண்ணே - எந்த வேலைக்காரி இப்படி உருகறா? எல்லாம் காதல் படுத்தும் பாடப்பா.'

'என்ன காதல் இது. ரெஸ்பக்ட்... சுய கௌரவம் இல்லாம...'

அப்பழைய ஞாபகங்களை அனுபவித்தபடி குளியலை ஆரம்பித்தாள் - இசை நுழைவதற்கு வசதியாய் குளியலறையின் கதவு திறந்தே கிடந்தது... இப்படி மூடாத அறையுள்ளிலிருந்து குளிப்பதும் கூட புது அனுபவம் தான்... வெதுப்பான ஷவரின் கீழே நின்று பாடியபடி குளிப்பது... அவள் அத்தனை ரசிப்பது பொறுக்காதது போல அறையின் கதவு தட்டப்பட்டது..

அது நாசுக்கான தட்டலுமல்ல...

அந்த அழைப்பில் அதிகாரமும் அவசரமும் தொனித்தன...

## 3

தலையில் தேய்த்த ஷாம்பூவை விளம்பரங்களில் தெரிவது போல நுரைக்கத் தேய்த்து, எதிரேயிருந்து விசாலமான கண்ணாடியில் அதை அழகு பார்த்திருந்தவளுக்கு அந்தத் தட்டல் எரிச்சலாயிருந்தது.



ஆனால் அவசரமாய் ஷவரைத் திறந்து கூந்தலை அலசியவள், அரை குறையாய் மேனியைத் துடைத்து, நைட்டிக்குள் புகுந்து, தோளில் ஒரு துவாலையையும் போர்த்துவதற்குள் - கதவு நான்கு முறைத் தட்டப்பட்டிருந்தது!

சற்று கடுகடுப்பாகவே கதவைத் திறந்தாள் -

எத்தனை நிம்மதியாய் அனுபவித்திருக்க வேண்டிய குளியல் - இப்படி குறை பிரசவம் போலாயிற்றே... என்ற கடுப்பு.

''ரூம் ஸர்விஸா - வேறு எதுமா? நா ஏதும் ஆர்டர் பண்ணலியே...'' சிடுசிடுத்தாள்.

''நான் - வேறு ஏதும்.''

வெளியே நின்று பேசியவனை குழப்பமாய் பார்த்தாள் -

''என்னது?''

''நான் ரூம் - ஸர்விஸில்லை - ஆக வேறு ஏதும் தானே?''

குறுஞ்சிரிப்புடன் விளக்கம் வந்தது.

''தப்பான அறையைத் தட்டிட்டீங்கன்னு...''

''அதுவும் இல்லை மிஸ் - வாஸந்தி... என்ன சரி தானே?'' அவன் கீழுதடு சற்று கிண்டலாய் மடிந்தது -

''அ... ஆமா.''

''தட்டினது சரியான அறையைத்தான் - நேரந்தான் கொஞ்சம் தப்பு.''

விஷமச் சிரிப்புடன் அவன் சொல்ல, வாஸந்தியின் விழிகள் மட்டுமல்ல புத்தியும் சற்று விரிந்து உள் வாங்கின.

தமிழ் பேசுகிறான்... தோற்றமும் தோரணையும் வெகு மிடுக்குதான். ஹோட்டல் ஊழியனாய் தெரியவில்லை... ஒரு வேளை பரணிக்குத் தெரிந்தவரா..? நாளை தான் சந்திக்க வேண்டியது இவரைத்தானா? இல்லையே மிஸஸ். ஸில்வியா என்ற எழுபது வயது ஆங்கிலோ இந்தியப் பெண்மணியையும் அவரது மகளையும் அல்லவா?

''ரொம்ப யோசிக்காதீங்க... நா உங்களிடம் ஒரு சிறு உதவிக்காய் வந்து நிற்கிறேன்..''

உபத்திரவப்படுத்தி உதவி கேட்டால் கிடைத்தாற் போலத்தான் -

என்று இவளுக்குள்ளே பொறுமல்!

பாதி திறந்த அறைக் கதவின் வழியே அவன் பார்வை போய்த் துழாவியது -

''வந்து கால் மணி நேரத்திற்குள் அறையில் செட்டிலாயிட்டீங்க..''

கட்டிலில் பரத்தப்பட்ட உடைகளும் - களைந்தெறிந்த தன் உள்ளாடைகளும் நினைவு வர, இவளது முகம் சூடானது.

கூச்சம் கலந்த எரிச்சலில் -

“இதோ பாருங்க... நீங்க வம்பு பண்ணவே வந்திருப்ப தாய் படுது. குளிக்கவும் விடாமல்... வந்த விஷயத்தையும் சொல்லாமல் - நான் ரூம் - பாயைக் கூப்பிடப் போறேன்.''

கதவை மூட முயன்றாள் -

அறையில் இவளது பெட்டிகளைக் கொண்டு வைத்த பணியாள் அப்படித்தானே சொன்னான் - 'ஏதேனும்



தேவைன்னா பெல் அடிங்க மேம்' என்று... இப்போதைய தேவை இந்த ஆசாமியைத் துரத்துவது ஒரு கையால் கதவை நாசுக்காய் மூடாதபடி தடுத்தவன் -

''பாவம் - அவனை ரொம்ப இக்கட்டான நிலைமை யில் நிறுத்திடுவீங்க...'' வாஸந்தியின் குழப்பத்தை சற்று ரசித்த பின் தொடர்ந்தான் -

''தன் முதலாளியையே துரத்த வேணும்ன்ற உங்க கோரிக்கையைக் கேட்டால்... அவன் நிலை இக்கட்டு தானே... ம்ம்?''

விஷமமாய் அவனது கீழுதடு மடங்கியதை விநோத மாய் பார்த்திருந்தாள் - பார்க்க பார்க்க அவனது வசீகரம் கூடுவது போலிருந்தது. வேண்டிய உயரமும், வடிவமும் கூடவே இளமையும் செல்வமும் சேர்ந்தால்... ஆனால் இவனிடம் கூடவே நிறைய திமிரும் கலந்திருக்கிறதே...

''ஒரே நிமிஷம்... உங்க உதவி எனக்குத் தேவை.''

''இந்த ஹோட்டலின் அதிபதிக்கு என் உதவியா?''

''இந்த 104ம் அறை ரொட்ரிகோ தம்பதிகளுக்கு புக்கானது - அவர்கள் எங்களது வாடிக்கையாளர்கள்... வயதான அந்தத் தம்பதிகளின் திருமண பொன் விழாவும் கூட இங்கேதான் கொண்டாடப்பட்டது..''

அதற்கும் எனக்குமென்ன என்றதுபோல பொறுமை யிழந்து கால் மாற்றி நின்றாள் - தவிர முழுக்க துவட் டாததால் குளிர்ந்தது - ஒரு ஆணின் முன் முறையான உடையோடு தானில்லை என்ற குறுகுறுப்பு வேறு...

“இந்த அறையில்தான் அவர்கள் வழக்கமாய் தங்குவது - அமைதியானது, தவிர சாப்பாட்டு அறையை ஒட்டியதால் அவர்களுக்கு வசதி... ரிஸர்வேஷன் சார்ட்டை சரியாய் பார்க்காம குழறுபடி பண்ணிட்டாங்க... ப்ளீஸ்.''

"ஒரு பத்து நிமிஷம் பொறுக்க முடியுமா?"

"இத்தனை அருமையாய் ஒத்துழைப்பீங்கன்னு நினைக்கலை... கொஞ்சம் கடுப்பாகவே கதவைத் திறந்தீங்களா?..."

"உடை மாற்றிட்டு மீதி கதையைக் கேட்கறேன்."

"தாங்க்ஸ்..." பணிவாய் சொன்னவனின் விழி நிரம்ப விஷமம். குளிர் போக மறுபடி சற்று நேரம் வெந்நீரில் நின்றவள் துடைத்து, உடுத்தினாள்... ஈரக் கூந்தலை விரியப் போட்டபடி தன் உடைகளை மறுபடி பெட்டிக்குள் திணித்தாள்.

மறுபடி தட்டப்பட்ட கதவைத் திறந்தபோது பணியாள் காபியும் டோஸ்ட்டும் கொண்டு வந்திருந்தான் -

இவள் அவர்களது விஷம முதலாளியைப் பற்றி ஏதும் கேட்கும் முன் அவசரமாய் விலகியும் போனான்.

பசிக்கத்தான் செய்தது - ஆக சாப்பிட்டு தலை முடியை கோதி, ஆற்றி கட்டிய போது மறுபடி வந்தவன்...

"தாங்க்ஸ்" என்றபடி இவளது பெட்டியை எடுத்துக் கொள்ளும்படி பணியாளுக்குச் சைகை செய்ய, இரண்டாம் நிமிடம் அவள் அந்த பெரிய காரில் உட்கார்ந்திருந்தாள் -

"இவ்வளவு ஒத்துழைப்பு தந்த எங்க கெஸ்ட்டை நாங்களும் கௌரவிக்கணுமில்லையா? இதே 'ஸன் ஸீ' ஹோட்டலின் கிளை கொஞ்சம் தள்ளி, இன்னும் பிரமாதமான இடத்தில், அமைப்பில் இருக்குது - அங்கேப் போறோம்..."

வரவேற்பிடத்தில் நின்ற இளைஞனை முறைக்க முயன்றாள் - இவளது அஜாக்ரதையால் தனக்கு எத்தனை



அவஸ்தை. ஆனால் அவனோ வெகு சிங்காரமாய் சிரித்தான் -

அது இவளது கோபத்தை மேலும் கிளற, வாயே திறக்காமல் அவன் கதவைத் திறந்து விட்ட காரினுள் ஏறினாள்.

இது போன்ற தடங்கல் ஏதுமின்றி மறுநாள் தான் வந்த வேலை முடிய வேண்டுமே என்ற கலக்கம் வேறு புதிதாய் உள்ளே குமிழிட்டது. காலை பதினொன்றிற்கு திருமதி. ஸில்வியாவை சந்திப்பதாய் ஏற்பாடு -

'நீ தங்கியிருக்கும் ஹோட்டல் அவர்களது அலுவலகத்திற்கு மிக அருகே நீ நடந்தே போய்விடக் கூடிய தூரம்' என்றிருந்தார் பரணி... ஆனால் கார் அதிவேகத்தில் பத்து நிமிடங்களாய் ஓடுகிறதே... தொலைவாய் போனால் நாளை காலை டாக்ஸிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் - இங்கு ஆட்டோக்கள் வேறு கண்ணில் தட்டுப்படவில்லை.

"என்ன யோசனை?"

"இவ்வளவு தூரம்னா... நாளை ஆட்டோ கிடைக்குமா?"

"ஜோடியாய் வரும் டூரிஸ்ட்ஸ் பைக்கை வாடகைக்கு எடுத்துக்குவாங்க - மற்றபடி டாக்ஸிதான்.."

"இவ்வளவு தூரம்... உங்க அடுத்த ஹோட்டல்னு நீங்க சொல்லலை... எனக்கு இது பிரச்சனை... நான் போக வேண்டிய இடத்திற்கு சமீபம்ன்றதாலதான் என்னை அங்கே என் பாஸ் தங்க வச்சது."

"ம்ம்... பரணீ அதிலெல்லாம் சமர்த்தன்."

ஒரு கணம் திகைத்து... பின்பு திடுக்கிட்டாள்.

''உங்... உங்களுக்கு என் எம்.டி.யைத் தெரியுமா?''

''பேர் மட்டுமல்ல... அவரைப் பற்றியும் அநேகம் தெரியும்.''

அவளுக்குள்ளே கலவரம் ஆரம்பமானது.

''ஞாயிறு மதியம் நீ கோவாவை விட்டுக் கிளம் பணும்னு கூட தெரியும்.''

''எ... எப்படி?''

''உன் ஏர் - டிக்கெட் ரிஸப்ஷனில் காத்திருந்ததே - அதைப் பார்த்து தெரிஞ்சுகிட்டேன்.''

''அதை நான் வாங்கிக்கலையே'' அவளது குரலில் சுரத்தில்லை.

''எங்கிட்ட பத்திரமாயிருக்குது - நாட் டு வொரி.''

தன் சட்டைப் பையைத் தட்டிக் காட்டினான்.

''அதை எங்கிட்ட தந்துட்டு, காரையும் நிறுத்துங்க.''

''ஏம் பதறுற வாஸந்தி?''

வேண்டுமென்றே மிக இயல்பாய் கேட்டான்.

''ஏன்னா... இதில் ஏதோ... தப்பிருக்குது... ஏதும் சரி யில்லை.''

''சரியாய் கண்டு பிடிச்சுட்டியே.. நாம இப்ப எந்த ஹோட்டலுக்கும் போகலை.''

உலர்ந்த நாவால் வார்த்தைகளை உச்சரிக்க முடியாத தால் அவளது கண்கள் அச்சத்துடன் வினவின -

''எனக்கிங்கே ஒதுக்குப்புறமாய் ஒரு வீடுண்டு - அங்கே போறோம். இங்கே உள்ளவங்களுக்கு என்னை



நல்லாத் தெரியும் - ஆக நீ என் தூரத்து முறைப் பொண்ணு... குடும்பத் தகராறுல முறைச்சிட்டு வீடு வராமல் ஹோட்டல்ல தங்கியிருக்கேன்னு நான் ரீல் சுற்றியதை ஸாம்ராஜ் நம்பிட்டான்.''

''அது... யாரு.''

''நீ தங்கிய ஹோட்டலின் மேனேஜர் - அவன் சொன்ன தால் ரிஸப்ஷனிஸ்ட்டும் எதையும் கண்டுக்கலை.''

''இது... அப்ப கடத்தல்.. யூ ஆர் எ கிரிமினல்.'' அவளது நடுங்கும் உதடுகள் உச்சரித்தன.

''அப்படியும் வச்சுக்கலாம் - ஒரே விஷயம்தான் நான் கேட்டுக்கறது - கொஞ்சம் பொறுமையாயிரு வாஸந்தி - அவசரமாய் எந்த முடிவுக்கும் வர வேண்டாம். வார்த்தை களையும் கொட்ட வேண்டாம்.''

எவ்வளவு முட்டாளாய் இருந்திருக்கிறாள்?

நேர்மையான ஆறு நண்பர்களை எப்போதும் என் உடன் வைத்திருந்தால் எந்தப் பிரச்சினையையும் தீர்த்து விடலாம் - அவை -

ஏன்?

எப்போது?

எதற்கு?

யார்?

எப்படி?

எங்கே? என்ற கேள்விகள்தான்' என்றவர் கிப்ளிங். அதை ரசித்து வாசித்ததோடு நிறுத்திக் கொண்ட தான் கடும் மட்டி! எந்தக் கேள்வியுமின்றி இதோ இவனோடு காரில் சவாரி செய்யும் மடப்பெண்!

செப்பு போன்ற சிங்கார, சிறு வீடுகளிலிருந்த பகுதியைத் தாண்டி கார் விரைந்து கொண்டிருந்தது - ஆட்களோ, அரவமோ இல்லாத தனிமை - இதற் குத்தானே அத்தனை ஆசைப்பட்டாய்? என்று வாழ்க்கை தன்னைக் குரூரமாய் சீண்டிப் பார்க்கிறதோ?

ஏன் இவன் தன்னைக் கடத்திப் போகிறான்?

எதற்காய்..?

அது பற்றிய கற்பனைகள் வாஸந்தியின் புத்திக்குள் விரிய, அவளது முகம் அஞ்சி வெளுத்தது.

''ரிலாக்ஸ் வாஸந்தி... நான் செய்வது தப்புன்னாலும்... நான் தப்பானவன் இல்லை... முக்கியமாய் காமக் கொடூரனில்லை.''

''தராதரம் இல்லாத செயல் இது - அதிலும் தரம் பிரிக்கிறீங்களா?''

அவளது பதில் அவனை அழுந்தக் கடித்ததில் முகம் சுளித்தான் -

''நீ இப்ப என் பிடியில் இருக்கேம்மா - இத்தனைத் துடுக்காய் பேசக் கூடாது... பணிவாய் போனால் வேலை சுலபமாய் முடியும்.''

''என்ன வேலை என்று...''

''சும்மாயிருப்பதுதான் இப்ப உனக்கான வேலை... சொகுசான மூன்று நாட்கள்... அலட்டிக்காம அமைதியா யிருந்தால் வந்தது போல திரும்பிடலாம்.''

அவன் மூடுமந்திரமாய் பேசுவது எரிச்சலாயிருந்தது.

பார்க்க மிக கண்ணியமாய் தெரிந்தவன் இப்படி ஒரு காரியத்தில் இறங்குவானென்று கண்டாளா?



அவன் தோற்றத்தில் முரட்டுத்தனமில்லை.,

கைவிரல்கள் கூட நாசுக்கான மிருதுத் தன்மை யுடனிருந்தன -

பார்வையில் கபடமில்லை... அடிக்கடி உதடு மடித்துச் சிரித்தான் எனினும் அதிலிருந்தது விஷமம் மட்டும் - விகல்பமில்லை...

பரணீ ஸாரைத் தெரிந்திருக்கிறது - ஆக தன் வேலை சம்பந்தப்பட்டது போலும் இந்தக் கடத்தல்.

அவள் ஒரு முடிவிற்கு வந்த போது காரும் அப்பழைய வீட்டின் முன் நின்று விட்டிருந்தது - பிரதான சாலையி லிருந்து உள்ளடங்கிய தென்னை மரங்கள் சூழ்ந்த அழகிய வீடு...

மாலை நேரம் இரவுக்குத் தன்னை விட்டுத் தந்திருந்த வேளை... அவளை இறக்கி கைபற்றியே நடத்திச் சென்றவனை - ஒரு அறைக்குள் அவளை விட்டுப் பூட்டிய பின்னே போய் இவளது பெட்டியை எடுத்து வந்து சேர்த்தான் -

''ஸாரி - உனக்கு இப்போதிருக்க கோபத்துல ஓடிடுவி யோன்னு ஒரு எச்சரிக்கை... அறையில காபி மேக்கர் உண்டு - சீனி, பால், தூள் எல்லாம் பக்கத்திலேயே இருக்கு - ரொட்டி, பழங்கள்தான் உன் டின்னர் - சமாளிச்சுக்கோ வாஸந்தி - நாளைக் காலைல பார்ப்போம்.''

அவள் கண்கள் யோசனையாய் தனது கைப்பையில் பதிவதைக் கண்டவன் -

''மறுபடியும் ஸாரி - உன் மொபைல் போனை அங்கிருந்து எடுத்துட்டேன்... குட் - நைட்.''

''இத்தனை மோசமான உங்களுக்கு எந்தப் பொழுதும் நல்லதாய் அமைய முடியாது - நிச்சயமாய் உங்களுக்கிது 'பேட் - நைட்'தான் பயங்கர கனவுகளாய் வந்து...''

''நல்லது - அந்த பட்சத்தில் நான் உன்னோடு வந்து படுத்துக் கொள்வேன்... பயமேயிராது... ம்ம்?''

அதே விஷமச் சிரிப்புடன் கதவை மூடிப் போனான் அவன்!

# 4

சில அல்லது பல ஏக்கர்களைப் பார்வையிட்டு ஒரு சொத்தை வாங்கப் போகும் தான் எப்படி உடுத்த வேண்டும் என்று நிதானமாய் யோசித்து வாஸந்தி அச்சேலையை தேர்ந்தெடுத்திருந்தாள். ஜரிகை இழையோடாத நூல் வேலைப்பாடுள்ள கம்பீரமானப் பட்டுப் புடவை - வழக்கமாய், வசதியாயிருக்கிறதே என்று தைக்கும் குட்டைக் கை ரவிக்கையைப் போலல்லாமல் அதற்கானதை நீளமாகவே தைக்கச் செய்திருந்தாள் - வயதோடு கண்ணியமும் கூடித் தெரியட்டும் என்ற எண்ணம்!

காலையில் எழுந்ததும் ஒரு பன்னும் காபியும் உண்ட பின் அடுத்து என்ன செய்வதென்று அறியாமல், குளித்து தயாராகியும் விட்டாள். அறையின் கதவு பூட்டப்பட்டிருந்தது.



இந்நாள் வரை ஆவலாய் காத்திருந்த அதே தனிமை இப்போது கொடுமையாயிருந்தது!

தன் புத்திசாலித்தனத்தில் அசந்து போய் பரணி தன்னை இவ்வேலைக்கு அனுப்பியதாய் நினைத்து உள்ளூர கர்வப்பட்டது கூட தப்புதான்...

வந்த வேலையை இந்த அரக்கன் செய்து முடிக்க விட மாட்டானோ? எந்த முகத்தோடு பரணி ஸாரை போய் எதிர் கொள்வது? இங்கிருந்து முதலில் முழுசாய் ஊர் திரும்புவோமா?

அந்த எத்தன்... அவன் பெயரென்ன?

எதுவும் கேட்காமல் ஆட்டுக் குட்டி போல அவனைத் தொடர்ந்து வந்து விட்டாளே... வந்த பின் துள்ளலாய் துடிப்பாய்ப் பேசி என்ன பயன்?

'துள்ளாதே துள்ளாதே ஆட்டுக்குட்டி

எங்கையில் இருக்குது சூரிக்கத்தி' என்கிறதே அவன் புன்னகை!

கதவு தாள் திறக்கப்படும் ஓசையில் அவசரமாய் கையில் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு அமர்ந்தாள்.

நுழைந்தவன் பைஜாமா ஜிப்பாவில் இருந்தான் - உயர்ரக ஸில்க்கிலான அதில் அவன் உயர் குடும்பத்தில் பிறந்தவனே என்ற நிச்சயமிருந்தது - மிக மிருதுவான லெதர் காலணிகள்.. குளித்து, முழுக்கக் காயாத கேசம்... பளபளப்பான முகத்தில் அதை விட மின்னும் புன்னகை.

''நல்லாத் தூங்கினேன் வாஸந்தி... கெட்ட கனாக்களே வரலைன்றதுதான் குறை..''

நேற்றைய இடக்கு மடக்கைத் தொடருகிறானாக்கும்?

வெறுப்பாயிருந்தாலும் தன் பார்வை அவனது தோற்றத்தை வெகு விருப்பாய் உள் வாங்குவதும் உணர்ந்து திணறினாள்.

முகம் சிவந்து கனிந்தது.

அவனது கண்களும் தன்னை விலாவாரியாய் அளவெடுப்பது புரிய புத்தகத்தை மூடி வைத்து விட்டு கம்பீரமாய் நிமிர்ந்து உட்கார்ந்தாள் -

''எனக்கும் ஒரு காபி'' என்றபடி அவன் பர்குலேட்டரிடம் போக, வேறு வழியின்றி மறுபடி அதே புத்தகத்தை கையில் பிரித்து வைத்தாள்!

பரணியின் நிறுவனம் விளம்பரங்களை உருவாக்குவதில் இவளுக்கு நேரடியான தொடர்பில்லை - வெறும் கணக்கு, வரவேற்பு, தகவல் பரிமாற்றம்தான் -

அங்கும் இதே போல அசமந்தமாய் வேலையில் சேர்ந்த பிறகே விடுதியிலுள்ள சக பெண்களிடம் அந்நிறுவனம் பற்றி விசாரித்தாள். எதிர் அறை அமுதாவிற்கு ஓரளவு தெரிந்திருந்தது - மேலும் விவரங்களையும் சேகரித்துத் தந்தாள் -

'பரணி சபலப் பேர்வழிதான்...'

'ஐயோ...'

'இப்போதைக்கு பயமில்லை வாஸந்தி. தற்சமயம் அவருக்கு ஒரு நல்ல குதிரை அமைஞ்சிருச்சு.'

'அப்படின்னா..'

'ஆசாமிக்கு கல்யாணம் நிச்சயமாயிருச்சு - இந்த குதிரையில ஏற்றுனா கைலாசத்துக்கேப் போயிடலாம்ற மிதப்புல இருக்கார் - பொண்ணு ஷீலா ரத்னம் -



அவங்கப்பா ட்ரான்ஸ்போர்டில் கொடி கட்டினவர் - அவளோடு குறைந்தது ஒரு கோடி வரும் - அதுல தன் பிஸினஸை பிரமாதப்படுத்திடலாம்னு பரணிக்கு ஆசை.'

'ஆக வேலை பாக்கற நாம ஸேஃப்?'

'சில மாசம் இல்ல, ஒரு வருஷத்துக்கு ஐயா கை கட்டிட்டு இருப்பாரு..'

''பிறகு நான் வேலைய மாத்திக்கறேன்.. பாவம் சரசம்மா சில வருஷங்களாய் அதே ஆபீஸில் எப்படி சமாளிக்கறாங்களோ?'

'பாவம் பரணீன்னு சொல்லு. அந்தளவுக்கு சரசக்கா அவரைப் பயன்படுத்திக்கிட்டதாய் கேள்வி..!'

'ஐயைய்யோ... அப்ப இந்த வேலையும் எனக்கு நிலைக்காதா?'

'இப்படி பயந்தால் ஸிட்டியில் காலந்தள்ள முடியாது வாஸந்தி -

'எட்டியே நில்'லுங்கற தோரணையில நாம நின்னுடணும். பயந்தால் பிராஞ்சிடுவானுங்க...'

ஆரம்பத்தில் இவள் கேட்ட தகவல்களைத் தந்தவர்கள் பிறகு இவளது அன்றாட வாழ்வில் மூக்கை நீட்டவில்லை. இதுவும் பட்டணத்து வாழும் முறைதான் என்பது புரிய, இவளும் அதே வேகத்தில் ஓடலானாள்.

கோவா போவது பற்றி கூட வாஸந்தி யாரிடமும் பகிரவில்லை. அமுதாவிடம் மட்டும் விவரம் சொன்னவள், அறைத் தோழிகளிடம் -

'ஊருக்குப் போறேன் - மூணு நாளாகும் திரும்ப' என்றதோடு சரி.

ஓரிருவர் - 'ஊருல என்ன விசேஷம்?' என்று கண் சிமிட்டியதோடு சரி - தொடர்ந்து தோண்டவில்லை!

சொன்னது போல திங்கட்கிழமை தான் சென்னை திரும்பவில்லையெனில் எத்தனை பேர் பதறுவார்கள்?

யோசித்தவளின் பதற்றம் கூடியது.

காபி கோப்பையோடு வெளியேறியவன் கதவைச் சாத்தவில்லை... மூச்சை இறுக்கியபடி இருந்தவள் பத்தாம் நிமிஷம் அறையை விட்டு வெளியே வந்தாள் -

அக்கம் பக்கத்து அறைகளை ஆராய்ந்தவளின் முன் திடும்மென வந்து நின்றான் - புஜங்களுக்கு ஜிப்பாவின் கை மேலேறியிருக்க, அவன் புறங்கையிலிருந்த சிவப்பு அவளது பார்வையைப் பிடுங்கியது -

அதென்ன ரத்தமா?

இவளது ரத்தம் உறைந்து நின்றது!

இங்கு அடைபட்ட இன்னுமொரு பெண் இன்று இவன் கையில் உயிரை விட்டு விட்டாளோ?

"பசிக்குதா? ஆம்லெட் தயாராக்கிடலாம்... அதற்கு முன் - நீ பத்திரமாய் கோவா வந்து சேர்ந்தது பற்றி அமுதாவுக்கும் உங்கப்பாவிற்கும் எஸ்.எம்.எஸ். அனுப்பிடறேன்."

"ஐயையோ."

"என்னாச்சு?"

"அப்பாக்கு நா இங்க வர்றதே தெரியாது."

"ஓ.கே. - அப்போ அவரது நம்பருக்கு வேண்டாம் - அமுதாக்கு அனுப்பிடறேன்."



'எத்தன்' - என்று மனசுக்குள் கறுவினாள்.

"லேண்ட் - லைன் போனில் அப்பாவோடு பேசிடு - நீ பேசின பிறகு நான் அதைப் பூட்டிடுவேன்... பரஸ்பர நல விசாரிப்பு - மறுபடி ரெண்டு, மூணு நாளில் பேசுவதாய் சொன்னால் போதும் - பாவம், அவரோடு அப்பப்ப பேசறதுண்டா?"

எரிச்சலோடு மறுபுறம் திரும்பி நின்றாள் - இவனென்ன தன் தகப்பனைப் பற்றி பரிதாபப்படுவது?

அது புரிந்தது போல இவளெதிரே வந்து நின்றான் -

"அவருக்கு மகள் எங்கே இருக்கான்னு கூடத் தெரியலியே... அதான்."

"நான் அவர்ட்ட பேசறப்ப இந்த ஆபத்தைப் பற்றிச் சொல்லிட்டேன்னா?"

"பாவம் - அவருக்கு அநாவசிய பதட்டம்... இனி இப்படி அசட்டுக் கேள்விகளைக் கேட்காதே..."

அவன் குரலில் சற்று அதட்டலிருக்க, இவள் மிரட்சியாய் ரத்தக் கறையுடனான அவன் கையைப் பார்த்தாள் -

அதை கவனித்தவனின் உதடுகள் இளப்பமாய் மடிந்தன.

அவள் 'செல்'லில் பத்திரப்படுத்திருந்த எண்களைப் பார்த்து அவன் மற்ற போனில் எண்களை சுழற்றித் தர, அவன் சொன்னதையே முடிந்தளவு இயல்பாய் பேசினாள் -

'உடம்புக்கு ஏதும் முடியலியாடா?' என்று ஏதோ யூகத்தில் தந்தை விசாரிக்க, 'மளுக்'கென மகளின் கண்கள் தளும்பின.

இங்கு நிரம்பிக் கிடந்த அசாத்திய அமைதி அச்சுறுத்தியது.

விடுதி இந்நேரம் எப்படி கலகலவென்றிருக்கும் - கிராமத்தில் இப்படி ஒரு பெண்ணை யாரும் அடைத்து வைத்து விடக் கூடுமா?

'யாரது' - 'என்னா விவரம்' என மொய்த்து அவளை மீட்டிருப்பார்களே.

தவிர கடத்திய தடியனை மொத்தியெடுத்திருப்பார்கள்.

கடலின் நீலம் கூட தெரியாத இது எந்த இடம்?

பக்கத்தில் வீடுண்டா... தெரியவில்லை.

டெல்லிக்கு அருகிலுள்ள நொய்டாவில் பல பெண் குழந்தைகளை இரு அரக்க ஆண்கள் சிதைத்துப் புதைத்தது பல மாதங்கள் யாருக்குமே தெரிய வராதது போல... இவள் இங்கு சமாதியானால்...?

பெருமூச்செறிந்தாள் -

இனி அப்பாவோ, தோழியோ கூட இவள் ஆபத்தை உணர மாட்டார்கள் - யாரிடமும் தினம் பேசும் ஆளுமில்லை இவள்.

திடீரென வாஸந்தியின் கண்கள் மின்னின.

"முக்கியமான ஒன்றை நீங்க மறந்தாச்சு மிஸ்டர்..?"

"என் பெயர் ரொம்ப அவசியமில்லை... ஆனாலும் நீ ஆர்வமாயிருக்கிறதால் சொல்றேன் - வசந்தன்."

"பொருத்தமில்லாத பெயர்."

"ஆனா நேற்று நாம சந்தித்தபோது இதே பெயரைச் சொல்லியிருந்தால் பொருத்தமாய் தோன்றியிருக்கும்."



"ஏன்?"

"வசந்தம் போல உன் அறை வாசலைத் தட்டினேனில்லையா -

ஒரு வசீகரமான ஆண் உன்னைத் தேடி வர்றது சுகமானது தானே?"

"செய்கிற செய்கையின், நேர்மையில் இருக்குது ஒரு மனிதனின் வசீகரம் - வெறும் தோற்றத்திலல்ல" என்றாள் மிடுக்காய்.

"சபாஷ் - சரியான கணிப்பு - இப்படி துல்லியமாய் கணித்துதான் பரணியின் அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தியா - வாஸந்தி?"

## 5

"நான் சொல்ல வந்தது வேற மிஸ்டர். வசந்தன்.. அதாவது நான் இங்க வந்தது ஆபீஸ் வேலையாய்... அது பற்றி பரணி, ஸாருக்கு, அலுவலகத்திற்கேனும் நான் தகவல் தெரிவிக்கணும்.. இல்லைன்னா.."

மிரட்டலாய் இழுத்தாள்.

"சரசம்மாவின் செல் நம்பருக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பியாச்சு - தவிர பிரயாணத்தின் போதே உன் மொபைல் போன் காணாமற் போய் விட்டதால், காலை மிஸஸ். ஸில்வியாவை சந்தித்த பிறகு தகவல் தெரிவிப்பதாயும்... செய்தி போயாச்சு."

வாஸந்தியின் முகம் வெளிறியது.

இவனுக்குத் தெரியாத விவரம்தான் என்ன? இன்று காலை தான் சந்திக்கப் போகும் அம்மையார் பற்றிக் கூட தெரிந்திருக்கிறதே...

''அப்ப நா மிஸஸ். ஸில்வியாவை சந்திக்கலாமா?''

''ஓ.. அதற்குத்தான் இந்த தினுசில் உடையா?'' கண்கள் கேலியாய் சுருங்கின.

''எதற்கு இத்தனை பொருந்தாத ஒரு உடைன்னு நினைச்சேன் - இறுகப் பிடிச்சு ஒரு கொண்டை வேறு... பொறுப்பான நபர்தான்னு உன்னைக் காட்டிக்கற முயற்சியா?''

அவனது கிண்டலை ஒதுக்கி விட்டுக் கேட்டாள் -

''நீங்க யார்?''

''ஒரு கணம் தன் கைகளை நீவிக் கொண்டவன் தன் புருவங்களை உயர்த்தினான் -

''அடடா... முக்கியமான கேள்வியைக் கேட்டுட்ட.... சொல்றேன். இந்த பிஸினஸ் டீல் நடக்கக் கூடாதுன்னு நினைப்பவன்.''

''அதை நேரேச் சொல்றது? முதுகில் குத்தற இந்த வேலை கீழ்த்தரமாய் படலை?''

''நியாயமானவங்களிடம் நேரடியாய் பேசலாம் - பரணியிடம் அது நடக்காதுங்கறதால் அவனுக்குப் புரியற விதத்தில் இப்ப காயை நகர்த்தறேன்.''

''அப்ப மிஸஸ். ஸில்வியாட்ட நேரடியாய், நேர்மையாய் எடுத்துச் சொல்லலாமே...'' அவனது கண்கள் அவளை மரியாதையுடன் பார்த்தன!



''அவங்க முன் நாங்க பங்காளிகளாய் மோத வேண்டாம்ன்ற எண்ணம். பரணியின் பிரதிநிதி - அதாவது நீ போகலைன்னா... அவங்க அடுத்ததாய் யார்னு நிமிரும் போது நான் போய்... நின்று பிஸினஸை முடிக்கலாம்.''

''அது ஏமாற்று..''

''உண்மைகளை எடுத்துச் சொன்னால் ராசாபாசம் இல்லாமல் போகும்.. தவிர அந்தம்மாவின் மகன் உடனிருப்பார்... அவர்களுக்கு விற்கும் நிலத்தைப் பற்றிய விவரங்கள் தெரியாது... அவங்களுக்கு இந்தியாவை விட்டுக் கிளம்பும் அவசரம்... நிதானமாய் கேட்க பொறுமை இருக்குமான்னு கூட தெரியாது.''

''பரணி ஸார் ஒரு இக்கட்டான நிலைமையில் இருக்கும் போது... அதாவது.''

''தெரியும் - அவன் வருங்கால மாமனாருக்கு பை - பாஸ் ஸர்ஜரி.''

''வேறு துணை - ஆதரவில்லை அவருக்கு... பரணி ஸாருக்கு பெற்றவங்க கூட உயிரோடில்லை.''

''நல்ல வேளை - அவங்க இருந்து தங்களது மகனின் குல்மால்களைப் பார்க்கலை.''

''எனக்கும் கூடத்தான் தாயில்லை... ஆக நான் பாவி என்பீங்களா?'' அவளது கேள்வியில் அவன் கண்கள் மிருதுவாயின.

''ஸாரி - நான் சொன்னது தப்புத்தான் - ஏன்னா என் அப்பா கூட உயிரோடில்லை...'' சிறு மௌனத்தின் பிறகு தொடர்ந்தான் - ''விஷயத்திற்கு வருவோம் வாஸந்தி. நீ இப்ப வெளியே போக முடியாது. நாளை மறுநாள் அதே விமான டிக்கெட் மூலம் நீ சென்னை போகலாம்.''

''வந்த வேலையை செய்ய முடியலைன்னா நா இப்பவே சென்னை திரும்ப என்ன தடை?''

''நோ... பரணி இங்கே டீல் முடியலைன்னு கண்டு பிடிச்சிருவான்.''

''ஏன் ஸில்வியாம்மாவின் மகன் அல்லது வேறு யாரோ பரணியிடம் பேசி - 'ஏன் உங்க சார்பில் யாரும் வரலை?'ன்னு கேட்டாலும் உங்க குட்டு வெளியாயிடுமே.''

''அவங்க சார்பில் ஒருவர் 'டீல் முடிந்தது'ன்னு தகவல் அனுப்ப ஏற்பாடாயிடுச்சு.''

''ஆக அந்த நிலம் உங்களுக்குத் தேவை - உங்க சூதாட்டத்தில், என்னை, சரசம்மா போல வேறு சிலரும் இஷ்டத்துக்கு நகர்த்தப்படறாங்க?''

''கூல் டவுன் வாஸந்தி நீ கொண்டு வந்த ஜெயகாந் தனின் நாவலை படிக்க ஆரம்பி...''

''அதெப்படி உங்களுக்குத் தெரியும்?''

''உன் ஸெல்போனை எடுக்க உன் பையைக் குடைந்த போது பார்த்தேன்.''

''ரொம்ப மோசமான கேடி நீ...''

''ஆமா - அதைப் புரிஞ்சு நடந்துக்கோ!''

மிரட்டினாலும் அவளது அறையை அவன் பூட்ட வில்லை. தனிமையும், வேண்டிய புத்தகமும் இருந்தும், அமர்ந்து மனதை ஒருமுகப்படுத்த இயலாமல் தவித்தாள் -

அவனுக்கு மற்றொருவனை ஏமாற்ற நூறு நியாயங்கள் இருக்கலாம் - ஆனால் அந்த சேற்றில் தன்னை இறக்கு வானேன்? ஓரளவு விளக்கி விட்டதால் பட்சி பறக்காது என்ற திண்ணக்கம் வேறு.



வாசல்புறம் வந்து படியிறங்கினாள்...

சுற்றிலும் நோட்டமிட்டவளின் கண்களில் புது பிர காசம் - வலதுபுறமாய் சற்று தாழ்வான இடத்தில் பல தென்னைகளின் ஊடாய் தெரிவது ஒரு வீடேதான்!

இது ஆளண்டா பிரதேசமாயிருந்தாலும் அங்கு யாரே னும் வசிக்கலாம். போய் கதவைத் தட்டிப் பார்த்தா லென்ன?

கதவு திறப்பவரைக் காப்பாற்றச் சொல்லி கெஞ்சலாம்... அங்குள்ள போன் மூலம் சென்னைக்கு, அல்லது கோவாவின் காவல் துறைக்குத் தகவல் தரலாம்...

புது உத்வேகத்துடன் வலப்புறமாய் நடந்தாள் - பக்கத்தில் போய் பார்க்கவும் அது கடும் சரிவெனப் புரிந்தது.

பருத்த கூழாங்கற்கள் பரவிய சரிவில் மெள்ள இறங் கினால், சின்னதாய் ஓடும் ஓடையையும் தாண்டுவது சுலபம்தான்.. பத்து நிமிஷங்களுக்குள்... விடுதலை!

இப்படி அதிகம் யோசித்தபடி நிற்பதும் சரியில்லை என்ற முடிவுடன் அவள் இறங்க எத்தனிக்கையில் அந்த சத்தம் கேட்க, பதறி திரும்பினாள்... ஓடி வந்திருந்தவன் வசந்தனேதான்...

ஆக தன்னை கண்காணித்தபடிதான் இருந்திருக் கிறான் - அவன் கையில் ஏனிந்த நீண்ட கழி? சற்று முன் அவனது கையில் படிந்திருந்த ரத்தக் கறை ஞாபகத்திற்கு வந்து மிரட்டியது!

தன்னை அடித்தே அழித்து விடுவானோ..?

ஆனால் முகத்தில் அத்தனை ரௌத்திரமில்லை... பின்னே இத்தனை விரைவாய் ஏன் ஓடி வரவேணும்?

அவன் கை வாஸந்தியை நோக்கி நீண்டது...

விறைத்த விழிகளில் வினாவுடன் அவனை ஏறிட்டாள் -

இன்னும் மூச்சு வாங்கியவன் வாய் திறவாமல் ஜாடை காட்ட, நீட்டிய கழியை தன் கையில் வாங்கினாள் -

அதைத் தழைத்து ஒரு உருண்டை கல் மேல் அவன் தொட்டதுதான் தாமதம்... அக்கல் நழுவ, சரிவிலிருந்த மற்றவையும் பள்ளி முடிந்ததும் வாசல் நோக்கிப் பாயும் சிறுவர்களைப் போல ஓடையை நோக்கி பரபரவென்று உருண்டன.

இவளுக்குப் புரிய ஓரிரு வினாடிகளாயின -

புரிந்த பிறகு அவனை ஏறிடத் துணிவில்லை.

''உன் ஐம்பது, ஐம்பத்து நாலு கிலோ ஒரு கல்லில் பதிஞ்சிருந்தால், இதை விட வேகமாய் கற்கள் நழுவி யிருக்கும்... இசகு பிசகாய் விழுந்தால், உயிர் போயிருக் கும் - குறைந்த பட்ச தண்டனை... அதாவது இங்கிருந்து தப்பிக்க முயன்றதற்கு - கால் கைகளில் காம்பௌன்ட் பிராக்ச்சர் நிச்சயம்.''

கடும் சரிவுதான் - ஆக அவன் சொன்னதை வெறும் மிரட்டலென ஒதுக்க முடியாது... ஆனாலும் நன்றி தெரிவிக்க மனமில்லை. உலர்ந்த உதடுகளும் அசைய வில்லை.

''பாவம் ரெண்டு, மூணு நாட்கள் இங்கிருக்கவே யோசிக்கிற நீ - காலொடிந்து சில மாசங்கள் படுக்கையில் இருக்கணும்னால்... ம்ப்ச் யோசிக்கவே தாளலை வாஸந்தி... அதான் இத்தனை வேகமாய் ஓடி வந்தேன்... உன்னைக் காப்பாற்ற...''



அவனது உதடுகள் மறுபடி மடிந்தன - கிண்டலாய்... ஒரு சிநேகச் சீண்டலுடன்..

இம்முறை அந்த அசைவு வாஸந்திக்கு அத்தனை வெறுப்பாய் படவில்லை... ஏன்... சற்று வசீகரமாய் கூடப் பட, அவனையே நூதனமாய் பார்த்திருந்தாள்..!

## 6

**வீ**ட்டின் நீள்சதுர தாழ்வாரத்திலிருந்த பிரம்பு நாற் காலியில் இவளை அமரச் செய்தவன் எதிரே ஓடிய சுவரில் வாகாய் சாய்ந்து கொண்டான் -

''சிலதை சாதிக்க எந்த வழியிலும் போகலாம்ற அனுமதி உண்டு...'' அவன் ஆரம்பிக்க, அவசரமாய் குறுக்கிட்டாள் வாஸந்தி -

''குறுக்கு வழியில் போனால் சீக்கிரமே போகலாம் - போகக் கூடாத ஊருக்கென்பதைக் கேள்விபட்ட தில்லையா?''

''எனக்கு உன் துணிச்சல் பிடிச்சிருக்குது - க்யூட்.''

''நீங்க என்னைக் கடத்தி வந்திருப்பதும் கூட துணிச்சலான வேலைதான் - ஆனால் அது எனக்கு சுத்தமாய் பிடிக்கலை - ஐ ஹேட் இட்.''

''ஆனால் நீ பயப்படலை - ஏன்?''

நீயே சொல்லித் தொலை என்பதாய் முறைத்தாள்!

''ஏன்னா உன் உயிருக்கோ, அழகான உடம்பிற்கோ கூட என்னால் எந்த பாதகமும் வராதுன்ற நிச்சயம்.''

அவன் சொன்னது உண்மைதான். பட்டுப் புடவையை மாற்றுவதற்காய் தன் அறைக்குப் போனவள், சுற்றிலும் ஒரு நோட்டமிட, தூண்டமிடப்பட்ட கோழிக் கறி கண்ணில் பட்டது. ஆக மதிய உணவிற்கான ஏற்பாட்டில் இறங்கிய போதுதான் ஐயாவின் கையில் ரத்தக் கறை பட்டிருக்கும் என்பது புரிந்தது - அடுப்பில் வெங்காயம் வதங்கும் மணம். தனக்கும் சேர்த்துதான் சமைக்கிறான் என்ற தெம்பில் கெத்தாகவே அவன் எதிரே உட்கார்ந்திருந்தாள். ஆக இப்போது தன் செய்கையை நியாயப் படுத்தும் முயற்சியில் ஐயா இறங்கப் போகிறார் - அதற்கு இடம் தரக்கூடாது என்ற கடுப்பில் மிடுக்காகவே சொன்னாள் -

''ஒரு பெண்ணை இப்படிக் கடத்தி வந்து அடைச்சு வைக்கிறது - பெரும் கிரிமினல்... குற்றம்.''

''அவசரப்பட்டு தீர்ப்பு சொல்ல வேண்டாம்... ஏன், எதற்குன்றது தெரிந்தால்.''

புலவர் நக்கீரனைப் போல தோளை நிமிர்த்தினாள் -

''தப்பான முறையில் செய்யும் எதுவும் தப்புதான்...''

''அப்படி பொதுப்படையாய் தீர்மானிக்க வேணாம். ஏன்னா உன்னை இப்படி ஏமாற்றி இங்கே அழைத்து வந்ததை நானும் ரசிக்கலை.''

''அப்படி வருந்தக்கூடிய செயலை பின்ன ஏன் செய்யணும்?''

''சொல்றேன்... உடனே இல்லைன்னாலும் நீ இங்கேருந்து போகிறதற்கு முன் சொல்றேன்.''



''எனக்குக் கதைகளை கேட்கும் 'மூட்' இல்லை ஸார் - உடனே என்னை போக விட்டீங்கன்னா நல்லது - மறுபடி அதே ஹோட்டலில் போய் இறக்கி விட்டுட்டீங்கன்னா, போலீஸில் புகார் செய்யாமல்... விலகிடறேன்... இனி நாம ஒருத்தரை மற்றவர் பார்த்துக்கவே வேண்டாம்.''

''தோ... நீ இப்படி பேசறது எனக்கு வருத்தமாயிருக்குது வாஸந்தி - ஏன்னா உன்னைப் பார்க்கறது, பேச, பழக எனக்குப் பிடிச்சிருக்குது. அதுவும் இந்த ஷிபான் சேலையில் நீ அமர்க்களமாயிருக்கே... அந்த பட்டுப் புடவை, நீளக் கை ரவிக்கை, இறுகின கொண்டையில் உன்னைப் பார்க்க கொஞ்சம் பயம்...மாயிருந்தது - காலேஜ் பிரின்ஸிபால் போல...''

''நீங்க விபரீதம் புரியாமல் ஜாலியாய் பேசறீங்க மிஸ்டர். வசந்தன் - நான் போலீஸில் புகார் தந்ததும் - உங்களுக்கு எத்தனை வருஷம் ஜெயில் களின்னு.''

''இப்ப வாரத்துல ரெண்டு நாள் கோழியாம் - பத்திரிகைகளில் அது பற்றி நிறைய ஜோக்ஸ்.''

''களியோடு பாதி வெந்த கோழிக்கறி எவ்வளவு ருசிக்கும்ன்றது எனக்குத் தெரியலை.''

''எனக்கும் அந்த அனுபவம் தெரியாமலேயே போகட்டும் - வாஸந்தி'' பேச வாயெடுத்தவளை கை தூக்கி அமர்த்தினான் - ''ஏன்னா நான் உன் உயிரைக் காப்பாற்றியவன்... குறைந்தது ஒரு கடும் விபத்து ஏற்படாமல் காத்த ரட்சகன்... அந்த தயவை எனக்கு நீ காட்டலாமில்லையா?''

குழைந்த அவனது குரலை குழப்பமாய் கேட்டிருந்தாள் -

இதென்ன விளையாட்டுத்தனம் போல... வினையைச் செய்கிறான்?

''அரை மணி நேரத்தில் சாப்பாடு தயாராகிடும் வாஸந்தி - அதுவரை நீ உன் புத்தகத்தை வாசிக்கலாம்.''

அவன் விலக, ஒரு பெருமூச்சுடன் வீட்டினுள் நுழைந்தாள் - இங்கிருந்து அரை மைல் தொலைவிலிருக்கும் மெயின் கேட்டிற்கு ஓடலாம்தான்... ஆனால் அதை இவள் வசதிக்காய் திறந்தா வைத்திருப்பான்? அடுத்த தப்பும் முயற்சியை சற்று ஒத்தி வைக்க வேண்டியதுதான்.

அவன் நாற்காலியை வாசல்புறமாய் நகர்த்தி அதில் உட்கார்ந்து விட, இவள் தனது அறைக்குள் நுழைந்தாள் - காவலாய் தடுத்து நிற்கிறானாம்... வயிறு வேறு பசியில் உறுமியது. இனி அதற்கு சற்று உணவிட்டால்தான் புத்தியால் யோசிக்கக் கூடும் - உடம்பும் அந்த யோசனைக்கு ஒத்துழைக்கும்.

புத்தகத்தைப் பிரித்து வைத்தவளுக்கு கருத்து அதில் பதியவில்லை. அப்பாவின் முகமும், கிராமத்து கலகலப்போடு கூடிய வீடும் ஞாபகத்திற்கு வந்து தொண்டையை இறுக்கின. கண்களை இறுக மூடியவளின் காதுகளுக்கு அந்தச் சத்தம் கேட்டது... வீட்டின் உட்புறம் யாரோ தட்டு முட்டுகளை நகர்த்துவது போல... நுனிக்காலில் ஓடி வாசற்புறம் பார்க்க, வசந்தனின் அகண்ட முதுகு தெரிந்தது - ஆக வீட்டினுள் இருப்பது மற்றொருவர் - தன்னை ஒண்டியாய் சமாளிக்க முடியாதென துணை சேர்த்துக் கொண்டானா என்ன? துணைக்கு வந்திருப்பவன் எப்படிப்பட்டவன்? பலக்கத் துடித்த நெஞ்சுடனேயே பின்புறமாய் நகர்ந்தாள் - சமையலின் வாசனை மூக்கைத் துளைத்தது - ஊறிய எச்சிலை விழுங்கியபடி எட்டிப் பார்த்தவளுக்கு கிடைத்த காட்சி ஆச்சரியந்தான்.

உள்ளே பாத்திரங்களை அலம்பிக் கொண்டிருந்தவரும், தன்னை யாரோ நோட்டமிடுவது உணர்ந்து



திரும்பினாலும் அந்த விழிகளில் வியப்பில்லை - மேலும் கீழுமாய் ஓடி அவை வாஸந்தியை அளவெடுத்ததோடு சரி -

உடைத்த ஆங்கிலத்தில் வரவேற்றார் அப்பெண் -

''வா வாஸன்டி - பசிக்கிறதா?'' - போர்த்துகீசிய சாயல் கலந்த ஆங்கிலத்தில் கேள்வி வந்தது.

''என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரிஞ்சுது?''

''வசந்த் சொன்னான் - துவைக்க ஏதும் துணி இருந்தால் சொல்லம்மா - பழைய வாஷிங் மெஷினுண்டு - அவனுடையதோடு சேர்த்து அலசி போட்டுடறேன்...''

இளையவளின் திகைப்பைக் கண்டு புன்னகைத்தாள். அம்மூதாட்டி. அவருக்கு வயது எழுபதுகளில் இருக்கக் கூடும். வெளுத்த மிருதுவான சருமம் காய்ந்து சுருங்கியிருந்தது. முழு வெளிநாட்டு ரத்தமல்ல, இந்திய ஜீன்களும் கலந்திருந்ததை கறுப்பு கண்களும், முக பாவனையும் காட்டித் தந்தன.

அசம்பாவிதமாய் ஏதுமே நடக்காதது போல எத்தனை அன்பான வரவேற்பு - உபசரிப்பு?

ஆக வசந்தன் இவரிடம் உண்மையை மறைத்திருக்க வேணும்.

'என்னைக் காப்பாத்துங்கம்மா - ஆபத்தில் இருக்கேன்' என்று கத்தி கெஞ்சினால்..?

''நீ இங்கே இருக்கும் மூணு நாளும் நல்லா சாப்பிடணும்மா வாஸன்டி - உன் பருவத்திற்கு நீ கொஞ்சம் மெலிவுதான் - கோழிக் கறியோடு பிரட் புட்டிங் செய்றேன்... ஆனா உன் கண்ணில் பசி தெரியுதே - முதல்ல சாப்பிடு - ஒரு மணி நேரத்துல இனிப்பு - சரிதானே?''

காலம் கடந்து விட்டது...

'என் பெயர் எப்படி உங்களுக்குத் தெரியு'மெனக் கேட்டு, முதியவரின் பேச்சை சகஜமாய் கேட்டிருந்து விட்டு இனி, கத்தி 'காப்பாற்றுங்கள்' என்று கதறினால் கேலி கூத்துதான்!

அதற்குள் வெளேரென்ற பாஸ்மதி சாதத்தை சைனா தட்டில் பரிமாறிய மூதாட்டி, நடுங்கும் கைகளால் அதன் மீது குழம்பையும் வார்த்தார் - கிழங்கு, கேரட் துண்டு களோடு நாவூறச் செய்தது அந்த ஸ்டூக் குழம்பு - கோவா வந்ததிலிருந்து தான் சரியாகச் சாப்பிடவில்லையே. மெல்லிய வெங்காய, தக்காளித் துண்டுகளில் மிளகு தூவி, அதையும் பரிமாற, அவசரமாய் பிசையலானாள். பசி ருசியைக் கூட்டியது.

''ரொம்ப நல்லாயிருக்குது... நீங்க?''

''வசந்த் சொல்லலியா? அவன் அப்படித்தான். என்னிடமும் நீ வர்றது பற்றி நேற்றே சொல்லியிருந்தால் மீன் வாங்கிட்டு வந்திருப்பேன். கோவாவின் மீன் சொதி பிரம்மாதமாயிருக்கும் - நாளை வாங்கினால் போச்சு... நான் வசந்த்தின் அம்மா காலத்திலேருந்து இங்கே வேலை பார்க்கறேம்மா - ஹவுஸ் - கீப்பர் எனலாம். அடிக்கடி சென்னை போய் வரும் குடும்பம் என்பதால நாந்தான் வீட்டைப் பராமரிப்பேன். வசந்தனைத் தூக்கி வளர்த்திருக் கேன்... இன்னும் கொஞ்சம் குழம்பு விடட்டா?''

வாஸந்திக்கு இப்படி யாரும் அருகே நின்று பார்த்துப் பரிமாறியது அபூர்வம்.

''தாங்க்ஸ்... வித்தியாசச் சுவையிலிருந்து உங்க சமையல் - உங்க பேர்?''



''ரோஸலின்ட்... ரோஸ்னுவாங்க பொதுவாய். இந்தக் குடும்பத்தார் எல்லோருமே எங்கிட்ட அத்தனைப் பாசமாய் பழகுங்கம்மா - சம்பளத்துக்கு வந்தவதானேன்ற அலட்சியமே கிடையாது - நானும் பாசங்காட்டறதில்லை வஞ்சனை பண்ணினதில்லையே? கோவா மக்கள் எளிமையும் இனிமையுமானவங்க - எங்க இயல்பே அப்படி... ஆனா...''

''சொல்லுங்க.''

''கதிர் மேல எனக்குத் தனி பிரியம். அவன் வசந்த னுக்கு மூத்தவன் என்றாலும் அப்பாவிக் குழந்தை. அவன் பிறக்கும்போது ரெண்டே கிலோ எடைதான். பாலை உறிஞ்சிக் குடிக்கவும் வலு இல்லாத சவலைக் குழந்தை. ஆக பாலாடையால் பால் புகட்டுவோம். ரோஸி மிஸின்னு என்னைச் செல்லமாகக் கூப்பிடுவான். நாலு வயசுலதான் அவனை ஸ்கூலில் சேர்த்தோம் - வசந்த் அளவிற்கு சுட்டிகையாய் படிக்கலை... ஆனாலும் அந்த நோஞ்சான் பிள்ளை மேல எனக்குத் தனிப் பரிவு...''

தொளதொளப்பான முழங்காலுக்குக் கீழே சற்று நீண்ட தனது உடுப்பைத் துழாவி சிறு பர்ஸை எடுத்த ரோஸலின்ட், அதைத் திறந்து வாஸந்தியின் பக்கம் நீட்டினார்.

''இது... இவர்தான் கதிரா?''

''அவனுக்குப் பதினாலு வயசிருக்கும் போது பீச்சில் நாங்க சேர்ந்து எடுத்துக்கிட்ட படமிது.''

சொன்ன முதியவளின் குரல் தளுதளுத்தது -

படத்திலிருந்த சிறுவனின் முகத்தில் நாலைந்து வயதேயுள்ள சிறுவனின் வெகுளிச் சிரிப்பு. சற்று

இளமையாய் தெரிந்த அவன் ரோஸி மிஸியின் இடுப்பை இறுகக் கட்டிக் கொண்டிருந்தான்.

''வசந்தனின் சின்ன வயசுப் படமில்லையா?''

''காட்டறேன்'' ஆவலாய் மூத்தவள் தலையாட்டவும் தான், அப்படி ஒரு கேள்வியை ஏன் கேட்டோமெனக் குழம்பினாள் இளையவள்!

''இந்த போட்டோவை எடுத்ததே வசந்த் தம்பிதான் - என்னைப் போலவே தம்பிக்கும் அண்ணன் மேல பரிவான அக்கறை. கடலில் காலை நனைக்கக் கூட விடமாட்டான். அலை கொஞ்சம் சீறி எம்பினாலும் அலறும் பூஞ்சை மனசும், சட்டுனு ஓடி சமாளிக்கவும் முடியாத பூஞ்சை உடம்பும் கதிருக்கு.''

''அவர் இப்ப எங்கே?''

''இல்லையேம்மா... மை லிட்டில் பாய் இந்த உலகத்தி லேயே இல்லையே. வாழ்வின் கொடூரங்களைத் தாங்கும் வலிமை இல்லாத செல்லப் பயல் அவன்...''

சுருங்கிய கன்னங்களை கண்ணீர் நனைக்க, எழுந்து அவசரமாய் கை கழுவினாள் வாஸந்தி.

''ப்ளீஸ்... அழாதீங்க... மிஸி... ஸாரி.''

''நீயும் என்னை மன்னிக்கணும் மகளே... முப்பது வருஷங்களாய் நானும் இந்தக் குடும்பத்தின் ஒரு அங்கம் - அதான் உணர்ச்சி வசப்பட்டுடறேன். தவிர, இப்ப இந்த வீடு 'ஹோ'ன்னு கிடக்கறதைப் பார்க்கத் தாளலை - சிரிப்பும், ஆட்டமுமாய் தளும்பிக் குலுங்கிய வீடிது - அப்போ மேலும் நாலு வேலைக்காரங்க - எல்லாருக்கும் சதா வேலையுமிருக்கும்... இனி மறுபடி அது போல இந்த



வீட்டைப் பார்க்கணும் நான்... பிறகு நான் கண்ணீரே விட மாட்டேன்.''

''அடடே நம்ப விருந்தாளிக்குக் கதை சொல்லி சாதம் ஊட்டியாச்சா ரோஸி மிஸி?''

கேலியான சன்ன விஸிலுடன் சமையலறையுள் நுழைந்த வசந்தன் முதியவளின் தோளில் கை போட்டு அணைத்தான்.

''ல்லல்ல... நானாத்தான் சாப்பிட்டேன்'' வாஸந்தி அசடு வழிய சொல்ல, ''பாவம்ப்பா... பொண்ணு கண் ணில் பசி தெரிஞ்சுது - அதான் சாப்பிட வைத்தேன்'' விளக்கினார் ரோஸலின்ட்.

வசந்தனின் அணைப்பில் அவரது முகம் மலர்ந் திருந்தது -

கடத்தி வந்தவனின் வீட்டில் கதை கேட்டு, கசிந் துருகி, விருந்தும் சாப்பிட்ட தன் முட்டாள் தனத்தை மறைக்க, தன் தட்டை எடுத்துக் கழுவியவள் - அவ னுக்கும் பரிமாறலானாள் -

''சாப்பிடறீங்களா?''

''எனக்கும் பசிதான்...'' கைகழுவி விட்டு அமர்ந்தான். அவ்வீட்டில் கழித்த மகிழ்வான நாட்களை மற்ற இரு வரும் நினைவுகூர, வாஸந்தி கேட்டிருந்தாள் -

''அம்மா எப்போ வருவாங்க வசந்த் தம்பி? வாஸன் டியை உன் அம்மா சந்திச்சாச்சா... அப்படியே பூரிச்சிருப் பாங்களே?''

''ல்ல ரோஸிமிஸி - அதற்கு முன் சமாளிக்க வேண்டிய சிக்கல்கள் சிலது இருக்கே.''

அதைத் தொடர்ந்து அவர்கள் பேசிய சிலது இவளுக்குப் புரியவில்லை - அல்லது அவள் மிக அழுந்தக் கவனிக்கவுமில்லை.

போன் ஒலிக்க, சாப்பிட்டு முடித்திருந்த வசந்தன் முன் பக்கம் விரைய, வாஸந்தி சமையலறையை ஒழிக்க உதவினாள்.

''நீங்களும் சாப்பிடலாமே?''

ரோஸலினின் முதிய விரல்கள் இளையவளின் இளங் கன்னத்தைப் பாசமாய் வருடின -

''இப்படி ஒரு குணவதி இந்த வீட்டிற்கு வரணும்னு நான் தினம் பிரார்த்தனை பண்ணினேன் - அது வீண் போகலை..'' கண்களை மூடி நெற்றிக்கும் மார்பிற்குமாய் சிலுவை அடையாளமிட்ட ரோஸலினின் திறந்த கண்களில் குறும்பு மின்னியது -

''அந்த நமீதா இந்த வீட்டின் எஜமானியாய் வந்திருந் தால் - பாவம் வசந்த் - கர்த்தர் பயலைக் காப்பாத்திட்டார்.''

''யாரது நமீதா?''

''அவனது மாமாப் பெண். இந்தக் காலப் பெண்களைப் போல நிறைய படிப்பு - படபடன்னு பேசுவா... ஆனா பெண்மை இராது. கருணையும் கனிவும்தானே ஒரு வீட்டிற்குப் பெண் வந்து ஏற்றி வைக்கும் விளக்குகள்? என்ன நான் சொல்றது?''

ரொட்டி புட்டிங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்தபடியே பேசினார் ரோஸலின்.

ஆக தான் இவ்வீட்டிற்கு விளக்கேற்ற வந்ததாய் தப்பர்த்தம் செய்து கொண்டவர்களை திருத்துவதா



அல்லது காணாதது போலிருப்பதா என்ற குழப்பத்தில் வாஸந்தி இருக்க, பதிலை எதிர்பாராமல் முதியவரின் பேச்சு தொடர்ந்தது -

''சார்ட்டட் - அக்கௌண்டன்ட் நமீதா. ஆக எல்லாம் அவளுக்குப் பண மயம். எந்த வியாபாரத்தில் பணம் கொட்டும், அதை அள்ளி எதில் போட்டால் இரட்டிப் பாகும்னு ஏதேதோ தகவல்கள் சொல்வா - வெளி வேலை களோடு அவள் நின்று கொள்வது நல்லது - வீட்டுக் குள்ளே அவ கொடி பறந்தால்... அது யாருக்கும் நல்ல தில்லை. என்னையும் அதட்டுவா - 'ஏன் வீடு இத்தனை தூசாயிருக்கு - தோட்டத்திலே பூவில்லைன்னு?' ஒண்டி யாளாய் என்னால் இயன்றதைச் செய்றேன் - கோவாவில இப்ப நூறு ரிஸார்ட்ஸ். ஆக இளவட்டப் பசங்க, பொண் ணுங்க எல்லாம் அங்கே வேலைக்குப் போயிடறாங்க - அடைச்சு கிடக்கற வீட்டுக்கு யார் வர்ரா? தவிர, நம் பிக்கையான ஆட்களும் கம்மி. சம்பளத்தை ஆயிரங்களில் எதிர்பார்க்கறதுங்க வேலையத் தொட்டும் தொடாமல் ஓடிடுதுங்களே..''

வாஸந்திக்குள் குற்ற உணர்வின் குறுகுறுப்பு. தன்னையும் பரணி ஸார் - தன் முதலாளி இப்படி அலுக் கும்படியான நிலையில் தானே தான் இருக்கிறோம் என்ற தவிப்பு.

அனுப்பிய வேலையை முடிக்காமல் விட்ட பொறுப் பற்றவள் என்றவன் நினைத்தால் அதிலென்ன தப்பு..?

''வர்றேம்மா வாஸன்டி - நாளை பார்ப்போம்'' என்று ரோஸலின் கிளம்பியதும் இவளது புத்தி சுறுசுறுப்பாய் மறுபடி தப்ப வழி தேடியது -

# 7

சில அவசர நேரங்களில் ஒருவரின் புத்தி அதீதமாய் யோசிக்கறது அல்லது அப்படியே மரத்து முழிக்கிறது. அப்படி தன் மூளை எந்நிலையில் இருந்தபோது, தான் அம்முடிவை எடுத்தோம் என்று வாஸந்திக்கு இன்னும் விளங்கவில்லை.

வசந்தனுக்கு போன் வந்ததே - ஆக தொலைபேசி தொடர்புள்ள வீடு இது என்ற ஆவலுடன் முதலில் 'பேசி' கருவியைப் பார்த்தவளுக்குக் கடுப்புதான் அந்தப் பழங்கால கறுப்பு 'பேசி' கருவி ஒரு பொடி பூட்டால் பூட்டப்பட்டிருந்தது. ஏற்கெனவே அவன் சொன்னது போல. மணியடிக்க, எடுத்து பேசலாமேத் தவிர, 'டயல்' செய்து இங்குள்ளோர் பயன்படுத்த முடியாது - அதாவது இப்பூட்டிற்கான சாவி இன்றி!

அவளது கண்கள் வீட்டின் அங்கும் இங்குமாய் தத்தித் தடவின. அங்கு வசந்தன் இல்லாதது வசதியாய் போனது - அவன் வாசித்த செய்தித் தாளின் மேல் மறைந்தும், தெரிந்தும் கிடந்த அது என்ன..? ஆவலாய் போய் பார்த்தவளின் கண்கள் பிரகாசித்தன அது அவனது கார் சாவி!

'வா - வந்து என்னை எடுத்துக்கோ' என்பதாய் சிறு கள்ள மினுங்கலுடன் கிடந்தது அது.



இதை எடுத்து காரின் கதவைத் திறந்து, அதற்கு உயிரூட்டி உருட்டிக் கொண்டு கிளம்பி விடலாமே?

சற்று தொலைவிலிருந்தது பழைய மர கேட் - ஆக அதை மோதித் திறந்து தப்பி விடலாம்...

யோசித்து முடிக்கும் முன் அதைச் செயல்படுத்தினாள் - காரின் கதவை நலுங்காமல் மூடியதும்தான் அதன் உட்புறம் வேறு மாதிரியாயிருப்பதை உணர்ந்தாள் - ஸ்டியரிங்கிலிருந்து துருத்திக் கொண்டிராமல் இடது கையின் கீழ்ப்புறமாய் இருந்தது கியர் - கார்களைப் பற்றி அரை குறை ஞானமே கொண்டவளுக்குக் கண்களை இருட்டியது.

'ஸ்கூட்டி ஓட்டக் கத்துக்கோ வாஸந்தி - எனக்கு டூ - வீலர் வந்த பிறகு புது சுதந்திரம்... இல்லை சுதந்திரம்னா என்னவென்றே பிறகுதான் புரிந்தது - பஸ்ஸின் நெரிசல், உரசல், காத்திருத்தல், புலம்பலெல்லாம் கிடையாதே - இனி கார் வாங்கிடலாம்னு ஒரு யோசனை - என்ன அப்படி வாயைத் திறக்கறே? ஆபீஸில் லோன் கிடைக்கும் - செகன்ட் - ஹான்ட் காரும் உண்டு - பிறகென்ன? என் ஏரியாவில் வேலை பாக்குற நாலு ஹாஸ்டெல் - மேட்ஸை உடன் ஏத்திக்க வேண்டியது - ஆளுக்கு மாசம் முந்நூறு தந்தால் போதும் - பெட்ரோலுக்காச்சு..' என்று விலா வாரியாய் விளக்கிய தோழி அமுதா, வாஸந்தியையும் தன்னுடன் ட்ரைவிங் ஸ்கூலுக்குக் கூட்டிப் போனாள் - அங்கு ஓரளவு பாலன்ஸிங் பழகி, ஸ்கூட்டியில் ஒரு ராணி போல ஆள் நடமாட்டம் குறைந்த சாலையில் உலா வந்த வாஸந்தி, அவ்வப்போது அமுதாவோடு காரிலும் அமர்ந்து கவனித்ததுண்டு -

இவர்களுக்கு அவ்வப்போது கற்றுத் தந்த இளம் குரு ஒருவன்,

'ஹிஹி... நீங்களும் ஒட்டிப் பாருங்களேன் வாஸந்தி மேடம் - நீங்க எதையும் சுளுவாய் பழகிடுவீங்க' என்று ஸ்டீயரிங்கை இவள் கையிலும் தர, கற்ற ஆரம்பப் பாடம்.

ஆனால் பலர் பழகித் தேற என்றேயிருந்த அந்த டப்பா வாகனத்திற்கும், பளபளவென்று மின்னிய இந்த நவீன காருக்கும் சம்பந்தமேயில்லை.

ஆனாலும் தப்ப வேண்டிய நிலையிலிருக்கும் தான் ஏதேனும் ஒன்றில் ஏறிப் பறக்க வேண்டியதுதானே என்ற வேகத்தில் யோசிக்காமல் செயல்பட்டாள் -

இங்கிருந்து எங்கே போவது..?

அங்கே என்ன, எப்படி புகார் தருவது என்று எதுவும் தெரியாத நிலை.

சாவியை உத்தேசமாய் எதனுள்ளோ விட்டு திருக, பேனலின் விளக்குகள் ஒளிவிட்டன -

'கிளட்சை அழுத்தி... ரிவர்ஸ் கியர் போட்டு, இடது காலை மெள்ள கிளட்சிலிருந்து விலக்கியபடியே வலது காலை அழுத்தினால் போதும்-' தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள் -

இடது கை கியரில் தடுமாற, கார் உறுமியது.

பதட்டத்தில் வலது காலை அழுத்திய கணம் அது நிகழ்ந்தது! பழைய காரின் தேய்ந்த பாகங்களுக்கு அதீத அழுத்தம் வேண்டியிருக்க, இந்நவீன காரின் ஆக்ஸில ரேட்டர் வெண்ணெயாய் அமுங்கி வாகனத்தை உலுக்கி முன்னேத் தள்ளியது...

என்ன நேர்ந்தது என்று புரியும் முன்னமே அவளுக்கு வலித்தது - ஸ்டியரிங்கில் அழுந்திய மார்பும் நெற்றியும் தெறித்தன -



ஏன் கார் பின்னோக்கி நகராமல் முன்னே பாய்ந்தது?

அதிகம் யோசிக்க முடியாமல் முணங்கியவளை, யாரோ அள்ளித் தூக்குவது புரிந்தது... தடுக்க முடியாமல் கண்களை மூடிக் கொண்டாள்.

தன் நெஞ்சு படபடப்பது அவளுக்கேக் கேட்டது -

"ஒண்ணுமில்லை வாஸந்தி - லேசான அடிதான்."

"கார்... காருக்கு.." குழறினாள் -

"அதன் நிலைமை கொஞ்சம் மோசந்தான் - ஆனா அது சமாளிச்சுக்கும்."

அவனா இத்தனை இதமாய் பேசுவது... மேலும் யோசிக்க முடியாமல் மயங்கிப் போனாள்.

தன் ஆடை தளர்த்தப்படுவது புரிந்தது -

வாயில் இளஞ்சூடாய் ஊற்றப்பட்டது என்ன? ருசி அறியாமலேயே விழுங்கினாள். மூடிய கண்களுக்குப் பின்னே நட்சத்திரங்களாய் தெறித்தன - மல்லாந்து படுக்கும் வழக்கமில்லாததால் தன்னிச்சையாய் புரண்டது அவளுடல்.

"ஸ்ஆ..."

"அசைய வேணாம் வாஸந்தி - நேராகவே படு..." மிக மிருதுவாய் விரல்கள் அவளது நொந்த நடுநெஞ்சை நீவின - பின் வியர்த்த அவளது நெற்றியை.

அரை விழிப்பு தட்டிய போது வேற்று குரலும் அந்த அறையில் சேர்ந்திருந்தது புரிந்தது.

"நோ போன்ஸ் ப்ரோக்கன் - ஒரு வாரம் படுத்திருந்தால் சரியாகிடுவா.." சிரமப்பட்டு கண்களைப் பிரித்தாள் -

''ஒரு... ஒரு வாழமா?''

''ஆமாமா... திரும்ப ஊர் சுத்தணும்னால், சமர்த்தா வசந்தனின் பக்கத்துல உட்கார்ந்து போம்மா - வம்பு தும்பெல்லாம் பண்ணாதே - என்ன?''

''யாரு... நீங்க?''

''டாக்டர்.. இப்படிக் கூப்பிடற இடத்துக்கெல்லாம் ஓடி வந்து ஊசி போடற ஓல்ட் டாக்டர்... கைய அசைக்காதே.''

''ஸ்ஸ் ஆ..''

''தேச்சு விடு வசந்த்.. வரட்டா..? ஒரு வாரம் இந்தப் பொண்ணை படுக்கையை விட்டு இறங்க விடாதே...''

டாக்டரை அனுப்பி விட்டு வந்தவனைக் கண் சுருக்கிப் பார்த்தாள் -

''ஒரு... வாழமா?''

''முழு ரெஸ்ட் எடுத்தால் மூணே நாளில் எழுந் துக்கலாம் நீ..''

''மூண்ணு நாளா?''

அழுவது போலானது அவள் முகம்.

''உனக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு நினைச்சேன் வாஸ்... பேசாம அறையில் ஜெயகாந்தனை ரசிச்சபடி இருந்திருக்கலாம்ல?''

''அது... அதென்ன வாஸ்?''

''உன் பேர்தான் - பிடிச்சிருக்குதானே?''

''பிடிக்கலை.''

''உன் பேர் சுருக்கத்தையா - என்னையா?''



''ரெண்டையும்.''

''பொய் வாஸந்தி - எங்கூட தங்குவதை நீட்டிக்கத் தானே இப்படி தப்பற நாடகமாடி, உன்னையே காயப் படுத்திக்கிட்டே?''

அவன் உதடுகளின் ஏளன மயக்கத்தை அரைக்கண் ணால் பார்த்தாள்...

''நான்சென்ஸ்..''

''சரி நீ இனி சென்ஸிபிள் பெண்ணாய் ஓய்வெடு... சீக்கிரம் சரியாயிடும் - என்ன?''

குழந்தையிடம் பேசுவது போல பேசியவனின் இடது கை மென்மையாய் அவள் தலையை வருடியது.

''எனக்கு... மய... மயக்கமாய் வருது.''

''அது மயக்கமில்லை - தூக்கந்தான் - டாக்டர் போட்ட ஊசியால்கூட இருக்கலாம் - மனசை அலட்டிக்காம தூங்கு.''

ஆனால் மறுநாள் அதிகாலையே விழிப்பு தட்டியபோது தான் வாஸந்திக்கு உறைத்தது.

எத்தனை பெரிய முட்டாளாய் இருந்திருக்கிறாள் -

கையில் காசு, அல்லது கைப்பை ஏதும் இல்லாமல் ஏனப்படி காரில் ஏறி உட்கார்ந்தாள்? போதாதற்கு அதைக் கிளப்பும் - அதிலும் பின்னோக்கிக் கிளப்பும் முயற்சி வேறு!

அத்தனைப் பெரிய காரை ஓட்டியபடி அவள் இந்த கேட்டைக்கூட எட்டியிருக்க முடியாது - அதில் கேட்டை மோதி பறந்து விடுவதான வீரசாகச கற்பனை வேறு..!

நடந்தே வெளியேறியிருந்து, எதிர்பட்டவர்களிடம் விசாரித்து காவல் நிலையத்திற்குப் போயிருந்தாலும்...

அங்கு போய் என்ன புகார் செய்திருப்பாள்? வசந்தன் தன்னைக் கடத்தி வந்ததாகவா?

ஏதோ நெருடியது...

ஏன் அவனைக் காட்டித் தரக்கூடாது என்கிறது மனசு? பரணிக்கு எதிராய் செயல்பட தனக்கு வலிய காரணங்கள் இருப்பதாய் வசந்தன் சொன்னதாலா?

அல்லது தனது உடலை, உயிரை அவன் காப்பாற்றி, சிசுருஷை செய்வதாலா?

ஒரு பெண்ணைக் கடத்துவது பெருங்குற்றம் - அதற்கான தண்டனையை வசந்தன் அனுபவித்தால் என்ன?

தன்னை இப்படி அடைத்து, அலைபாய விடுபவனுக்கு தானும் அதே தண்டனையை ஏன் வாங்கித் தரக்கூடாது?

"ரொம்ப யோசிக்காதே வாஸந்தி - இன்னும் கொஞ்சம் தூங்கு - எழுந்தபின் பிரகாசமாய் புதுத் திட்டங்களைத் தீட்டலாம்" - அவன் குரல் சிரித்தபடி சீண்டினாலும் விரல்கள் மெதுவாய் அவளது நெற்றிப் பொட்டை நீவின - தோள்பட்டையையும் வருடின.

ஏதோ மாயம் போல மறுபடி ஒரு கிறக்கம் அவள் கண்களை மூடியது - உடலும் உள்ளமும் மிக ஆறுதலடைந்து, தளர்ந்தன.

"போயிராதீங்க..." - குழறினாள்.

"ல்ல... இங்கயே, உன்கூடவே இருக்கேன்" - அவன் சொன்ன வார்த்தைகளும், சொன்ன விதமும் அவளுக்குப் பிடித்திருந்தன -

மேலும் சில மணி நேரங்களில் விழித்து, முகம் கழுவி காபி குடித்த பின், அதிர்ச்சி மிகவும் குறைந்து போனது -



முன்னறையில் டாக்டரின் உரத்த உற்சாகக் குரலைக் கேட்டவள் புன்னகைக்கக் கூட முடிந்தது.

"என்ன - மயக்க மங்கை எப்படியிருக்கா?"

"இப்பதான் முழிச்சா - வலி குறைஞ்சிருக்குது போல - முகம் தெளிவாயிருந்தது" - விளக்கிய வசந்தனின் குரலில் பெரும் நிம்மதியிருந்தது.

"ஆனா உன் கார் தேற அதிக நாளாகும்... பாவம் - பன்னிரெண்டு லட்ச ரூபாய் பொருள்."

"அரை லட்சம் செலவழிச்சால் போதும் - வலியோ வேதனையின்றி எங்கார் சரியாயிடும்-"

"புரியுது புரியுது - அந்தப் பொண்ணு உனக்கு ரொம்ப ஸ்பெஷல் ம்ம்?"

கேட்டிருந்தவளுக்கு முகம் சிவந்தது -

ஸ்பெஷல் என்ன? இப்படி இழுத்து வைத்து அவளை காரை நொறுக்குமளவிற்கு விட்டு விட்டோமே என்ற குற்ற உணர்வில் அந்த வசந்தன் அல்லாடுகிறான் - அவ்வளவேதான்.

ஆக அறையின் உள்ளே நுழைந்த மருத்துவரிடம் அவள் இன்முகமெல்லாம் காட்டவில்லை. பரிசோதித்து விட்டு -

"நேற்றே தந்த மாத்திரைகளை மேலும் மூணு நாட்கள் எடுத்துக்கலாம் வசந்த் - ஷி இஸ் யெங் அன்ட் ஸ்ட்ராங் - தவிர இப்படி தவிப்போடு கவனிக்க நீ - வேறென்ன - சீக்கிரமே தேறிடுவா."

நன்றி சொல்லி அவரை அவசரமாய் வெளியேற்றினான் வசந்தன் - தாமதித்தால் நோயாளியின் வெப்பப் பார்வையில் கிழவர் பஸ்பமாகி போவாரென்ற பயம் அவனுக்கு!

வஸந்திக்கு எரிந்தது - வசந்தனின் பொய்களுக்கு அளவேயில்லை - ரோஸலின்டிடமும் இம்மருத்து வரிடமும் தன்னை அவனது காதலி என்ற ரீதியில் ஏதோ புளுகியிருக்கிறான் -

தன்னைப் பார்த்தால் திருமணத்திற்கு முன்பே தேனிலவு கொண்டாடத் துணிந்தவளைப் போலவா இருக்கிறது?

எழும்பிய கோபத்தில் பல்லைக் கடித்தாள் -

''வெட்கப்பட, உன் அழகு மேலும் சோபிக்குது வாஸ்.''

சல்லாபமாய் தலை சரித்து புன்னகைத்தவனை முறைத்தாள் -

''என்னைப் பற்றி இவங்களிடம் என்னென்ன பொய் களைச் சொல்லியிருப்பீங்கன்னு யோசிச்சேன்.''

''ஆனால் என் புளுகுகளைக் காட்டிக் கொடுக்காமல் ஒத்துழைத்ததற்கு நன்றி... உன்னை முதன் முதலாய் பார்த்ததுமே தோணுச்சு - ரொம்ப நல்ல பெண் நீ என்று.''

முதலில் தன்னை வசந்தன் பார்த்தது எப்போது? அரை குறையாய் குளித்து அவன் முன் நின்ற போதா? அப் போதே சுடச்சுட தன் தனிமையை, இனிமையைக் குலைத்தவனைத் திட்டி விட்டு, ஹோட்டல் நிர்வாகத் திடமும் முறையிட்டிருந்தால் இந்நிலை நேர்ந்திருக்காது. தான் ஹோட்டலின் அதிபர் என்ற அவனது முழுப் பொய்யை, நம்பி, மூட்டையைக் கட்டிக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்த மட்டியல்லவா - அதைத்தான் 'நல்லவள்' என்று நாசூக்காய், நக்கலாய் பாராட்டுகிறான் போலும்.



இவன் இவ்வூருக்குப் பரிச்சயமானவன் என்பதால் ஹோட்டலிலும் பொருத்தமான பொய்களை ஊதி விட்டிருக்கிறான்.

''புருவத்தைச் சுருக்கி அப்படி ரொம்பக் கஷ்டப்பட்டு யோசிக்காதே வாஸு... நெற்றியில் அடிபட்டிருக்கில்ல?''

டோஸ்ட், பழரசத்தோடு அவ்வேளைக்கான மாத் திரையையும் அவள் கையில் தந்து விழுங்க வைத்தவன் தொடர்ந்தான் -

''முதல் தரம் நம் சந்திப்பைத் தானே நினைத்துப் பார்த்தாய்? இல்லை. நான் உன்னை முதலில் பார்த்தது உனக்கு எப்போன்னு தெரியாது - ஏன்னா அப்ப நீ என்னைப் பார்க்கலை.''

குழப்பமாய் நிமிர்ந்தவளின் வாயோரம் ஒட்டியிருந்த துண்டு டோஸ்ட்டை, நாப்கின் கொண்டு துடைத்தெடுத் தான்.

''அது ஒரு நகைக்கடை... அதன் வாசலில் பரணி யோடு ரொம்ப உல்லாசமாய் நின்றிருந்தே - ஆக நீயும் சரசம்மாவைப் போல ஒரு சரச சல்லாபப் பேர்வழின்னு நினைச்சேன்.''

''உளறாதீங்க..'' - சீறினாள்.

கை உயர்த்தினான் - ''அந்த நினைப்பை உடனே மாற்றியும் கொண்டேன் வாஸு... ஏன்னா அப்ப உன்னிடம் கையேந்திய ஒரு பிச்சைக்கார பெண்ணிடம் கோபமாய் ஏதோ பேசினே. அவ கையில் அழுக்கான ஒரு குழந்தையுமிருந்தது.''

அந்தக் குறிப்பிட்ட நாளின் சம்பவம் 'டக்'கென பிடிபடவில்லை. ஆனால் பொதுவாகவே கைக்குழந்தை

யோடு. அதைக் காட்டி பிச்சை எடுக்கும் பெண்களை அவளுக்குக் காணப் பொறுக்காது. ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் திறனும் ஆரோக்கியமும் உள்ள வளுக்கு அதை வளர்த்தெடுக்க மட்டும் அவையில்லாது போவானேன் - என்ற காட்டம்!

''பக்கத்திலிருந்த பழக்கடையில் சிலது வாங்கி அந்தப் பெண்ணின் கையில் கொடுத்துட்டு நகைக் கடைக்குள் போயிட்டே - உன்னிடம் அந்த ஓரிரு நிமிஷங்களில் தெரிந்த, கண்டிப்பும் அதைத் தொடர்ந்த கருணையும் அதை நீ கண்ணியமாய் வெளிப்படுத்திய விதமும் எனக்குப் பிடிச்சுப் போச்சு.''

அவனது பாராட்டின் உண்மையில் மனம் நெகிழ்ந் தாலும் விடாமல் சீண்டினாள் -

''ஓஹோ...? அதுதான் என்னைக் கடத்தக் காரணமா?'' அவனது உதடுகள் மீண்டும் ஒரு ரகசிய சிரிப்பில் மடங்கின -

''ல்ல வாஸு - இப்படிப்பட்ட பெண்ணுக்கு பரணி யுடன் இங்கே என்ன வேலைங்கற கரிசனம் தோணுச்சு.''

''அவர் வருங்கால மனைவிக்குப் பரிசாய் ஒரு நகை வாங்க பிரியப்பட்டார்.'' என்றதோடு நிறுத்திக் கொண்டாள்.

'இதில் உனக்கு ஏதும் பிடிச்சால் வாங்கிக்கோ வாஸந்தி - கடையின் முதலாளி நமக்கு வேண்டியவர்தான்' என்று பரணி அன்று அதிகப்படியாய் நான்கு பற்களைக் காட்டி யதை இந்த வம்பனிடம் சொல்லுவானேன்?

''கூடவே கவலையுந்தான் - பரணியின் ஆபீஸ் சரசம் மாவை லஞ்சம் தந்து சமாளிக்கலாம் - இந்தப் பெண்ணை - அதாவது உன்னை நம் திட்டத்திற்கு எப்படி சரிக்கட்



டறதுன்ற யோசனை... நீயோ படு கறார் பேர் வழிங்கறது புரிஞ்சு போச்சு.''

''கறார், கருணை, கண்ணியம் - இதெல்லாம் என்னை விவரிக்க நீங்க பயன்படுத்தின வார்த்தைகள் மிஸ்டர். வசந்தன். அப்படிப்பட்டவளைக் கடத்திடலாங்கறது தானா உங்க கோட்பாடு?''

அடிபட்ட நெற்றியில் பிளாஸ்திரியும் ஒரு நெஞ்சில் வலியும் இருந்தாலும் மிக கம்பீரமாகவே கேட்டாள் -

மறுப்பாய் ஒரு தலையசைப்புடன் அவனிடமிருந்து பதில் மிக மிருதுவாகவே வந்தது -

''ஒரு பெரிய மனிதன் யார் மனதையும் புண்படுத்த மாட்டான் - காரணமில்லாமல்!''

# 8

மனதிற்குள்ளாய் அவன் சொன்னதை ஒருமுறை ஓட்டிப் பார்த்தவளுக்கு, மொட்டு விட்ட சின்ன சிரிப்பை அடக்க முடியவில்லை.

''ரொம்ப ஜாலமாய் பேசறீங்க.''

''அது ஆஸ்கார் வைல்ட்டின் ஜாலம். நான் நினைவு வச்சு அதை தக்க சமயத்தில் உபயோகிப்பதோடு சரி.''

''அதுவும் கூட ஒரு சாமர்த்தியந்தான்.'' என்று சிலாகித்தவள் ''இவ்வளவு பேசுறோமே - ஆக நான் ஏன்

கடத்தப்பட்டேன்ற காரணத்தைச் சொன்னா திருப்தியா யிருக்கும்'' என்று முடித்தாள்.

''நான் தகுந்த காரணமில்லாத இதைச் செய்யலை வாஸந்தி - அதை நீ நம்பணும் - நம்பிக்கை இல்லாத வாழ்வு நரகமல்லவா?''

''சாத்தான் வேதம் ஓதுவதுன்றது இதுதான் போல?''

அவனைப் போலவே நக்கலாய் உதட்டை மடித்துச் சொல்ல முயன்றாள்.

''அவசரப்படாதே வாஸு - நான் சாத்தானா சாதாரண மனுஷன்தானான்றதை என் பக்க கதையை முழுக்கக் கேட்டுட்டு முடிவெடு.''

நிச்சயம் நியாயமான காரணமிருக்கும் என்ற ஆர்வத்தில் அவள் நிமிர்ந்து உட்கார, இடையூறாய் போன் அழைத்தது.

வசந்தன் தாழ்ந்த குரலில் பேசினாலும் - 'அம்மா' என்று குழைவாய். அடிக்கடி சொல்ல, பேசுவது அவனது தாய் என்று யூகித்தாள். அவனிடம் மொபைல் போன் உண்டா, அல்லது கார் சாவியை வைத்தது போல சற்று அஜாக்ரதையாய் வைத்து விட்டால், இவள் எடுத்துப் பேசி விடுவாளோ என்று மறைத்து வைத்திருக்கிறானோ?

மறுமுறை போன் ஒலிக்கும்போது தான் அதை எடுத்துப் பேச முடிந்தால்?

'அம்மா - தங்களின் தவப் புதல்வன் ஒரு கன்னிப் பெண்ணைக் கடத்தி, அடைத்தும் வைத்திருக்கும் இழி செயலில் ஈடுபட்டுள்ளார்' என்று அழுந்த திருந்தச் சொல்லிவிடலாம்...!

ம்ஹூம், அது சந்தேகந்தான்.



இங்கு நேரேயிருக்கும் ரோஸி மிஸியிடமும், டாக்டரிடமுமே வாயைத் திறக்காத தான் அவரிடம்தான் கொட்டிக் கவிழ்க்கப் போகிறோமா?

எது தன்னைத் தடுக்கிறது?

வசந்தன் முறை தவறிய முரடனல்ல - என்பதா?

அவன் தன் செயலுக்கான காரண - கதை என்னவென்றுதான் கேட்டு விடுவது - அது சரியா, முறையற்றதா என்பதெல்லாம் பிறகு...

கிரேக்க புராணத்தின் 'பான்டோராவின் பெட்டி' வாஸந்திக்குப் பிடித்த கதை.

இங்குள்ள இந்திரனை ஒத்த கிரேக்க ஸீயெஸ், ஆண்களின் கொட்டம், கர்வத்தை அடக்க என்றே பான்டோரா எனும் அழகியை உருவாக்கி, ஒரு மாயப் பெட்டியுடன் அவளை உலகிற்கு அனுப்பினாராம். 'உனக்கு வேண்டிய ஆயுதங்களை எல்லாம் நான் உனக்குள்ளேயே வைத்திருக்கிறேன் - ஆக இந்தப் பெட்டியை நீ திறந்து பார்க்கும் தேவை இராது - இதை நீ திறக்காமலிருப்பது நல்லது' - என்ற ஸீயெஸின் உபதேசம் அப்பெண்ணை உறுத்தியது. அது தாளாமல் பெட்டியைத் திறக்கும் பான்டோரா அதிலிருந்து ஊர்ந்து, பறந்து வெளியேறியவற்றைக் கண்டு திகைக்கிறாள் - பெட்டியைக் கூட மூட முடியாத படி. உலகின் அத்தனைப் பிரச்சனைகளும் வந்தன அதிலிருந்து! கடைசியாய் பெட்டியின் ஒரு மூலைக்குள் எஞ்சி பதுங்கிக் கிடந்தது - நம்பிக்கை மட்டுமே.

'எந்தப் பிரச்சனை வரினும் உலகத்தை நான் காப்பாற்றி காத்து நிற்பேன்' என்றதாம் நம்பிக்கை!

நம்பிக்கை மட்டும் இல்லாதிருந்தால்... மனிதனின் கதி..?

''நீ சிறந்த எழுத்தாளராகக் கூடும் வாஸ்...''

சீண்டியது வசந்தன்தான்.

''எப்படிச் சொல்றேன்னு பார்க்கறியா? நீ எடுத்து வந்த புத்தகத்தை நீ பிரிச்சும் கூட பார்க்கலை. ஆனா சதா சிந்தனையில் ஆழ்ந்திருக்கே - நீயே ஒரு புத்தகம் எழுதிடலாம்னு எனக்குப் படுது.''

''நம்பிக்கை பற்றி, நேற்று சொன்னீங்க... அதனால 'பான்டோராஸ் பாக்ஸ்' பற்றிய ஞாபகம்.''

''அதில் மிச்சமிருந்தது நம்பிக்கை மட்டுமே - அது தான் பொல்லாத உலகில் நம்மைப் பாதுகாக்கிறது என்று சொல்லும் கதை - ம்ம்?''

சற்று வியப்புடனேயே அவனைப் பார்த்திருந்தாள்.

சாம்பல் நிற காஷுவல் பான்ட்டும், கருநீல டி-ஷர்ட் டும் அவனது வயதைக் குறைத்துக் காட்டின.

தொழிலில் இவன் எப்படியோ ஆனால் விசாலமான வாசிப்பும், உலக அறிவும் இருக்கிறதுதான்.

''ஆக அந்த நம்பிக்கை உனக்கு என் மீது பெருகிடுச்சு. அப்படித்தானே வாஸ்?''

''ஏதோ காரணங்களைச் சொல்றேன்னு சொன்னதோடு சரி - அதற்குள்ளே எப்படி எனக்குள் நம்பிக்கை ஊறும்?''

''அதற்கு முன் இன்னொரு அடிப்படை, அவசியமான நம்பிக்கையை நான் உனக்குத் தரணும். வாஸந்தி.''

''இது தேவலை.''

''எது?''

''வாஸ்ஸை விட என் முழுப் பெயர் தேவலைன்னேன்.''



''இருக்கறது நாம ரெண்டே பேர் - அதான் ஒரு நெருக்கத்திற்காய் சுருக்கினேன்.''

''கருகலாயிடுச்சு.''

''மன்னிக்கணும் மேடம்'' சலாமிட்டான்.

''ஏதோ நம்பிக்கைத் தர்றதாய் சொன்னீங்க?'' - கையேந்தி ஞாபகப்படுத்தினாள்.

''யெஸ் - இங்கிருந்து சென்னை திரும்பும் நீ தொடர்ந்து பரணியிடம் வேலை பார்க்க முடியாது - அவனுக்கான நிலத்தின் டீலை நீ முடிக்காத கோபத்திலிருப்பான் - நீ ஏமாற்றியதாய் கூட குற்றஞ்சாட்டுவான் - ஆக உனக்கு வேறு ஒரு வேலை தேவை.''

''ஓஹோ - ஆக என்னை உங்க கடத்தல் தொழிலில் கூட்டாளி ஆக்கத் திட்டமா? நீங்க யாரையோ ஏமாற்றி கூட்டி வர, நான் உங்க காரோட்டியாய்...'' நக்கலான அவளது பேச்சு போக, அதை விட இடக்காய் மடிந்த உதடுகளுடன் வசந்தன் தொடர்ந்தான் -

''காரியங் கெட்டது போ! காரை நீ வேகமாய் எதிர் சுவரில் முட்ட, காரும் போச்சு - கடத்தலும் போச்சு.''

இருவரும் சிரித்து விட்டார்கள்.

''எனக்குப் பல நிறுவனங்களுடன் தொடர்புண்டு.''

''எப்பேர்ப்பட்ட தொடர்போ?''

''சிபாரிசு செய்யுமளவிற்கு.''

''ஆக எனக்கு மறைமுக லஞ்சம் தர்றீங்க? சரசம்மாவை எப்படி சமாளிச்சீங்களோ, எனக்குத் தெரியலை - நான் ஊர் திரும்பியதும் போலீஸில் புகார் செய்யாமலிருக்க, என் தலை தப்ப பரணி ஸாரிடம் உங்களைப் பற்றி சொல்லாம லிருக்க இது எனக்கான லஞ்சம் - ம்ம்?''

பேசப் பேச எகிறிய அவளைச் சற்று காட்டமாகவே பார்த்தான். ''அதைவிட ஸிம்ப்பிள் அண்ட் ஸ்வீட் லஞ்சம் கூட இப்ப கைவசம் உண்டு - தரவா?''

கேட்டவனின் உதடுகள் இப்போது ஏளனமாய் மடியவில்லை - இறுகியிருந்தன.

தான் வரம்பை மீறி விட்டோமோ என்று இவளுக்குள் சின்ன தவிப்பு - தன் காரியம் ஆக, இவளைக் கூட்டி வந்து அடைத்தவனின் ஆத்திரத்தை இப்படி, இத்தனைக் கிளறினால் ஆபத்துதானே என்ற அச்சம்... தவிர ஏன் தன்னை இவ்வளவு நெருங்கி வந்து நிற்கிறான்? ஒன்றரை நாளில் விபத்தால் விளைந்த உடல் வலி வெகுவாய் குறைத்திருந்தது - ஆனால் ஓடி சாடி தப்புமளவு உடல் தேறவில்லை -

ஆக மிரட்சியுடன் அவனை ஏறிட்டாள் -

அவளது தோள்களைச் சுற்றின அவனது கைகள்.. விறைத்த அவளது உடம்பைத் தன்புறமாய் சாய்க்க, மேலும் மிரண்டாள் -

ஆனால் திமிறுவதற்குள் குனிந்து அவளை முத்தமிட்டான் வசந்தன். உதட்டோடு உதடு அழுந்தும் காட்சியைத் திரையில் கூட காணாமல் மூடும் அவளது விழிகள் இப்போது படபடத்து இறுக மூடின.

அம்முத்தம் மூர்க்கமாயுமல்ல... மிருதுவானதுதான்... ஆனால் இனி இப்படி வாயடிக்க மாட்டாயே? என்பது போன்ற ஒரு மிரட்டலுடன் அவளைத் தின்றது!

மிக அந்தரங்கமான அச்செயலில் திகைத்தவள் - எவ்வளவு நேரம் திகைத்திருந்தாளோ - தெரியவில்லை. ஏனெனில் திடீரென அதில் பரவசமும் தித்திப்பும்



புகுந்திருந்தன. அவனது கைகள் மிக நேசத்துடன் அவளது முதுகைத் தழுவ,

'எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்' என்ற தயாளத்துடன் இவள் உடம்பு குழைந்தது.

சிறகு முளைத்து வேறு ஒரு உலகத்திற்குள் பறந்து நுழைந்தது -

தொடர்ந்து பறந்தபடி இருக்க ஆசைப்பட்டது.

முத்தத்தை ஆரம்பித்தது போல அதை முடித்ததும் அவன்தான் -

அணைப்பிலிருந்தவளை விடுவித்து விலக்கி நிறுத்தினான்.

சிவந்த முகத்தைத் தாழ்த்தியவளுக்கு வார்த்தைகளும் பிடிபடவில்லை. ஆனாலும் ஆழ மூச்செடுத்து விட்டுச் சொன்னாள் -

''என்னைப் பற்றி உங்களுக்கு எல்லாத் தகவல்கள்... எதுவும் தெரியாது... நான் வேற ஒருவருக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணாயிருக்கலாம்...''

அவன் விரல்கள் அவளது உதட்டில் லேசாய் பதிந்தன.

''ஆனா உன் உடம்பிற்கு அந்த நிச்சயமில்லை போல வாஸந்தி நம் முத்தத்தை ரொம்பவே ரசித்து அனுபவித்ததே..''

அவன் கண்களில் படக்கூடாது என்றே வாஸந்தி சமையலறைக்குப் போனது. தவிர ரோஸி மிஸியின் கதைகளும் சுவாரஸ்யமாயிருந்தன - அவற்றைக் கேட்டபடி இருந்ததைக் கொண்டு ஏதேனும் சமைத்தாள் -

''எஜமானியம்மாளின் அறையை வந்து பாரம்மா'' என்ற ரோஸலின்ட் அவளை வீட்டின் மற்ற பகுதி களுக்கும் கூட்டிப் போனார்.

'இதுதான் கதிரின் அறை - அவனுக்குப் பிடிச்ச ஆரஞ்ச் வர்ணந்தான் அறை முழுக்க - 'அந்தி நேரம் ரொம்ப அழகு மிஸி - இது அந்தியின் நிறம்' என்பான் - அவன் வாழ்வு அழகின்றி இவ்வளவு சீக்கிரம் அஸ்தமிக்கும்னு நினைக் கலையே...' கைக்குட்டையில் மூக்கைச் சிந்தினார்.

அறையின் ஜன்னலைத் திறக்கவும்தான் உள்ளேப் படிந்திருந்த தூசு தெரிந்தது - ''வசந்த் தூசியைக் கிளப்ப வேண்டாம்னு வாக்வம் க்ளீனர் கூட வாங்கித் தந்தான். வாஸன்டி - எனக்குத்தான் அதன் சீறலும், பொத்தான்களும் சரி வரலை...''

''அப்ப நான் இந்த வேலையை முடிக்கறேன்'' என்று அறையைச் சுத்தப்படுத்த முனைந்தாள் வாஸந்தி.

அன்று மதியம் ரோஸி மிஸியிடம் மீன் மோலி வைக்கக் கற்றுக் கொண்டாயிற்று. இப்போது அடைக்கப் பட்ட வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருக்கிறாள்! காரில் ஏறி முட்டிக் கொள்ளாதிருந்தால், இன்று விமானம் ஏறியிருக்கலாம்! பயணத்தை ஓரிரு நாட்கள் தள்ளி வைக்கிறேன்' என்று வசந்தன் சொல்ல இவளும் தடுத் தாளில்லை.

அறையில் தொங்கிய புகைப்படங்களை ரசித்தபடி சுத்தப்படுத்தினாள் - இது ஒரு ஆனந்தமான குடும்பம் -

அதன் மூத்த வாரிசான கதிரினுடையது இயற்கை மரணமாய் தோன்றவில்லை. போனவன் இக்குடும்பத்தின்



இன்பத்தை, நிம்மதியை வாரிச் சுருட்டி எடுத்துப் போய் விட்டதைப் போலொரு சூன்யம்தான் மிச்சப்பட்டிருந்தது. வர வர ரோஸி மிஸி வேறு -

'இப்படியொரு தேவதைக்காகத்தானம்மா இந்த வீடு இந்நாள் வரை காத்திருந்தது' என்று 'சென்ட்டிமென்ட்' பேச, தாளாமல் வாஸந்தி சொல்லி விட்டாள் -

'நான் வேலை விஷயமாய் கோவா வந்தேன்... நீங்க நினைப்பது போலில்லை' என்று. ஆனால் ரோஸலின்ட் அதை நம்பினாற் போலில்லை.

அவரையும் குறை சொல்ல முடியாதே - வந்ததி லிருந்து வெளியேவே போகாதவள், தான் எந்த வேலைக் காய் வந்ததாய் சொல்ல? தவிர வசந்தனும் தன்னை விழுந்து தாங்குவதைக் கவனிப்பவருக்கு நம்ப முடியாது தான் -

'இந்தக் குடும்பத்தின் சிரமங்கள் எல்லாம் இனி விலகிடும்னு நம்பறேம்மா வாஸன்டி - இனி அம்மா, வசந்தின் முகங்களில் சிரிப்பு மீண்டு விடும்னு தோணுது..' கொச்சை ஆங்கிலத்தில் முணங்கியபடி வேலைகளைச் செய்யும் ரோஸலின்டிடம் முழு உண்மையைச் சொல்ல, இளையவளுக்கும் தயக்கம்தான். பன்டோராவின் பெட்டியில் எஞ்சிய நம்பிக்கையாய் அம்மூதாட்டிக்கு ஆறுதல் தருவதை, ஆதாரமாய் நிற்பதை தான் ஏன் பிடுங்க வேண்டும்... என்ற இரக்கம்.

ஏறக்குறைய வேலை முடிந்த நேரம் - வெகு மிடுக் கான அந்தக் காலடியோசைக் கேட்டது. குதியுயர்ந்த காலணியில் ஒரு பெண் நடப்பது போல - வியப்புடன் திரும்பிய வாஸந்தியின் கண்கள் மேலும் விரிந்தன -

ஆனால் புதிதாய் வந்தவள் அலட்சியமாகவே இவளை நோட்டமிட்டாள்.

''குட் கடைசியாய் ரோஸலின்ட் வேலைக்குப் புது ஆளை நியமிச்சாச்சா? தூசும் தும்மலும் மற்றபடி என்னைப் படுத்திடும்...''

''நீங்க யார்னு தெரியலியே - வசந்த் இங்கே விருந்தாளி யாரையும் எதிர்பார்ப்பதாய் என்னிடம் சொல்லலியே?''

தோரணையுடன் வாஸந்தியும் சொல்ல, புதியவள் தடுமாறினாள் -

''ஓ... அப்ப நீ இங்கே வேலைக்கு வரலியா?'' குரல் தழைந்தது.

''வந்த இடத்தில் வேலையும் செய்றேன்'' - வாஸந்தியின் குரலில் மிடுக்கேறியது.

இந்தப் பேச்சு சத்தத்தில் அங்கு வந்த வசந்தன் அவசரமாய் அறிமுகங்களை செய்தான்.

''இது என் மாமாவின் மகள் நமீதா - அம்மா போனில் நமீ வர்றதாய் சொல்லியிருந்தும் இவ்வளவு சீக்கிரமாய் வருவான்னு எதிர்பார்க்கலை - அதான் சொல்ல மறந்துட்டேன்.''

''எங்கிட்டயும் சொல்ல மறந்துட்டே வசந்த் - இது யாரு?''

''என் தோழி - வெரி ஸ்பெஷல் பெர்ஸன் - வேலை விஷயமாய் வந்த வாஸந்தி சில நாட்கள் இங்க தங்கறாங்க.''



வழக்கமாய் நையாண்டியாய் பேசுபவன் இப்போது தடுமாறுவதை, சமாளிப்பதை வாஸந்தி ரசிக்கவே செய்தாள்!

''இங்க தங்கறாங்களா?'' நமீதா இழுத்தாள் -

''ம்ம்... உன்னைப் போலத்தான்.''

இப்புதியவளை குடும்ப உறுப்பினரான தன்னுடன் ஒப்பிடுவது நமீதாவிற்குப் பொறுக்கவில்லை போலும் - மூக்கின் நுனி சிவந்தது -

தானும் திடும்மென முளைத்த இந்தக் காளானும் ஒன்றா என்ற ஆத்திரம்.

ஆளுக்குத் தகுந்த வேஷமாய் தன் அறிமுகமும் மாறும் போலும் என்ற எரிச்சலுடன் வாஸந்தி நகர்ந்தாள். வேக்வம் க்ளீனரைச் சுருட்டி அதற்கான டப்பாவினுள் இட்டு மூடியவளைப் பின் தொடர்ந்திருந்தான் வசந்தன்.

''ஸாரி - வஸந்தி - நமீதாவைப் பற்றி உன்னிடம் சொல்லியிருக்கணும்.''

''ரோஸிமிஸி இவங்களைப் பற்றி பேசினாங்க..''

''ஓ? உண்மையைச் சொல்லணும்னா... அந்த... நம்... முத்தத்தில் என் மூச்சு மட்டுமல்ல மூளையே கொஞ்சம் ஸ்தம்பித்துதான் போச்சு...''

எதில்தான் சீண்டல் என்பது கிடையாதா இந்த ஆண்களுக்கு.. வெட்கங்கெட்ட அப்பேச்சைக் கேட்கவும் தனக்குக் கூசுகிறதே..?''

தலைகவிழ்ந்திருந்தாள் வாஸந்தி...

# 9

"'வெட்கம் - எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது என்பதின் முதல் சமிக்ஞை' - தெரியுமா அது உனக்கு வாஸு?"

இப்போதும் அவனது உதடுகள் அப்படி வசீகரமாய் சுழிக்கின்றனவோ? ஆனால் நிமிர விடவில்லை அவளது கூச்சம்.

ஆனால் அவனது உதடுகள் தன்னைத் தொட்டு மாய் மாலம் செய்தபோது எங்கே போயிருந்தது இந்த கூச்சம்?

முதலில் திகைத்தாலும் அப்புது அனுபவத்தில் அவளது மொத்த உடலும் திளைத்தது அல்லவா?

நினைப்பிலேயே அவளது உடம்பு கூசியது.

"அது... அது வெட்கமில்லை... அவமானம்!"

அவள் மிக மெள்ளவே சொன்னாலும் சூடு பட்டது போல இரண்டு எட்டுக்கள் பின்னடைந்தன அவனது கால்கள்.

"நமீதா கொஞ்சம் முந்திரிக் கொட்டைத்தனமாய் செயல்படுவா, பேசுவா... அதை நீ கண்டுக்க வேண்டாம் வாஸந்தி."

சுருதி குறைந்திருக்க, தகவல் தந்தான்.



"அது குடும்பப் பழக்கம் போல.." - விடாமல் மட்டந் தட்டினாள். தொடர்ந்து பேசாமல் வசந்தன் விலக, ஏனோ மனசு பொறுமியது. முந்திரிக் கொட்டைத் தனம்தான் - அறையை சுத்தம் செய்த தன்னை ஒரே நொடியில் வேலைக்காரி என்று கணித்தவள்தானே அந்த நமீதா?

இக்காலத்தில் வீட்டு வேலைக்கு வரும் பெண்களும் அல்ப சொல்பமாய் வருவதில்லை எனினும் -

"யார் நீ? புதிதாய் பார்க்கிறேன்?" என்றொரு புன்னகை யுடன் தன்னை விசாரித்திருக்கலாம் -

இனி அந்தப் பெண் தன்னைத் தேடி வந்து பேசுவாளா என்பதே சந்தேகம் - ஏதேதோ பரந்த வரை படங்களை விரித்து வைத்தபடி அப்புது பெண் உட்கார்ந்திருந்தாலும் வாஸந்திக்கு அவள் இருப்பதே ஏனோ உறுத்தியது.

ஒரு அந்நிய ஆணுடன் தனித்து இருந்த இரவுகளும் உறுத்தவில்லையே - ஏன்?

நமீதா இங்கே இருக்க உரிமையுள்ள உறவுப் பெண் - அவளது வருகை ஏன் தனக்கு எரிச்சல் மூட்ட வேணும்?

வசந்தனுடன் விதண்டாவாதம் பேசினாலும் அவனைத் தன் மனம் விரும்பத் தொடங்கியிருந்ததோ என்ற கசப்பான ஐயம் அவளுக்குள் வேப்பங்கொழுந்து போல துளிர் விட்டிருந்தது!

அவன் பார்வை, பேச்சு, உதட்டை மடித்து புன்ன கைக்கும் விதம் எல்லாமே ஏதோ ஒரு வகையில் தன்னை ஈர்க்கிறதுதான் -

காரோட்டும் முயற்சியில் முட்டி படுக்கையில் படுத் திருந்த சமயம் தன்னருகேயே இருந்து அவன் கவனித்த

பாங்கு... அப்பா கூட அருகில் அமர்ந்து அப்படி தன் தலை கோதியதில்லையே. அந்த வருடலில் வலியும் மாயமாய் மட்டுப்பட்டதே! இப்படியே இருந்து விட மாட்டோமா என்று அசட்டுத்தனமாய் கூட ஒரு கணம் தான் யோசிக்கவில்லை?

முதல் நாள் வரம்பு மீறி பேசியவன்... பிறகு கண்ணிய மாகத்தான் நடந்து கொண்டான் - அந்த ஒரு முத்தத்தைத் தவிர... ஆனால் அந்த ஸ்பரிசத்தை தானுமல்லவா ரசித்துக் குழைந்தாள்?

இந்த நமீதாவையும் வசந்தன் அப்படி அணைத்து முத்தமிட்டிருப்பானோ? இருக்காது என்று கூவியது உள் மனசு!

இறந்த அவனது அப்பா, அண்ணன் பற்றி ரோஸலின்ட் சொன்ன தகவல்களில், தாயை வெகு இக்கட்டான துக்க நேரங்களில் வசந்தன் பொக்கிஷமாய் பாதுகாத்தது பற்றியெல்லாம் அறிந்த மனம் வாஸந்தி இளகியிருந்தாள். ஆக அவனை வெறுப்பதாய், இங்கிருந்து கிளம்பத் தவிப்பதாய் காட்டிக் கொள்ள, முயற்சி தேவையா யிருந்தது!

அதிலும் முந்தின இரவு - கடற்காற்று வருட, நட்சத் திரங்கள் மின்னிய வானத்தைப் பார்த்தபடி அவன் சொன்னதையெல்லாம் கேட்ட மனம் முழுதும் கரைந்தே விட்டது..

வெளியே இழுத்துப் போட்டிருந்த மூங்கில் நாற்காலி யில் மிக வசதியாய் சாய்ந்தபடி பேச்சை ஆரம்பித்தான் -

''வாஸந்தி - எங்கண்ணா கதிர் உடம்பில் மட்டுமல்ல மனசளவிலும் பலமற்றவன்.''



ரோஸி மிஸி அது பற்றி தன்னிடம் சொன்னதைக் காட்டிக் கொள்ளாது கேட்டிருந்தாள்.

''உன் முதலாளி பரணி ஒரு வழியில் எங்களுக்கு சொந்தம். அப்பா அப்போதே வெளிநாட்டு ஏற்றுமதி யெல்லாம் ஆரம்பித்து குடும்பம் செழிப்பாகவே இருந் தோம். ஏற்றுமதி செய்தது எதைன்னு கேட்டால் நீ ஆச்சரியப்படுவே - கொட்டாங்கச்சி! தேங்காய் ஓடுகளை, மண்டியிலிருந்து மொத்தமாய் வாங்கி, நார் உரித்து விளிம்புகளை சீர்ப்படுத்தி - ரெண்டு நாட்கள் தண் ணீரில் ஊற விடணும். பிறகு சுரண்டி, மழமழப்பாக்கி வெவ்வேறு வடிவங்களில் உருவாக்குவாங்க...''

''ஷோ - பீஸ் போலவா?''

அப்படி சொல்ல முடியாது. இவை உபயோகமானவை யும் கூட - ஆஷ் - ட்ரே, பேனா - ஸ்டான்ட், கரண்டி, கப் என உருப்பெறும் - வெளிநாடுகளில் பெரிய வரவேற்பு அதற்கு... பரணியின் அப்பாக்கு இதில் பார்ட்னராய் சேர ஆசை.

ஆனா எங்கப்பா அதற்குச் சம்மதிக்கலை. ஆக வெறுப்பும் பொறாமையுமாய் எட்டி நின்னு கவனிச்சார் - அவர் முயன்ற சில குறுக்கு வழிப் பாய்ச்சல்கள் அவரைக் குழியில் தள்ளிய ஆத்திரம் வேறு - ஆக 'ஒரு நோஞ்சாம் பயலை மகனாய் பெற்றும் தவமணியின் திமிரைப் பாரு'னு ஏளனம் பேசினார். அதுதான் அண்ணாவிற்கும் சேர்த்து இளையவனான என்னைப் படிக்க வைக்க நினைத்த அப்பா என்னை உயர் கல்விக்கு வெளிநாடு அனுப்பினார். அது பரணியின் அப்பாக்கு வசதியாய் போச்சு - ஏற்றுமதி விஷயமாய் அப்பாவும் மும்முரமாய் இருக்க, அவர் கதிரை -

'புது பிஸினஸ் ஆரம்பிக்கலாம், காசாய் கொட்டும்'னு ஆசை காட்டியிருக்கார். தன்னால் ஏதும் சாதிக்க முடியலையே என்ற சின்ன ஏக்கத்தோட இருந்த கதிர் ஆர்வக் கோளாறில் அவர் காட்டிய சில பேப்பர்களில் கையெழுத்துப் போட, ஆரம்பிச்சது வினை.''

நட்சத்திரங்கள் கண் சிமிட்டி கேட்க, அதுவும் கூட யின்றி அவன் பேச்சை உன்னிப்பாய் கவனித்திருந்தாள் வாஸந்தி.

'இதே வீட்டில்தான் அப்போது இருந்தோம். பக்கத்து நிலத்தையும் அப்பா தொழிற்சாலையை விஸ்தரிக்கும் நோக்கில் வாங்கிப் போட்டிருந்தார். சென்னையிலும் ஒரு யூனிட் இருந்ததால் - குடும்பம் இங்கும் அங்குமாய் இருப்போம்.

'எதற்கிந்த அலைச்சல்? ஏற்றுமதி செய்ய சென்னை யூனிட்டே போதும் - கோவாவிலுள்ள வீட்டைத் தவிர்த்து மற்ற இடங்களை விற்று காசை புது வியாபாரத்தில் போடலாம்னு.. அண்ணன் கதிருக்கு ஐடியா தந்தார் பரணியின் அப்பா.'

''அப்படி அது என்ன பிஸினஸ்?''

''கடவுளுக்குத்தான் தெரியும். ரியல் எஸ்டேட் போல இருந்திருக்கலாம் - அல்லது அண்ணனை முழுசாய் ஏமாற்றும் முயற்சியாய் கூட இருந்திருக்கும் - விற்க சம்மதித்து கதிர் கையெழுத்திட்டிருக்கான்.''

''சொத்து அவர் மேலா இருந்தது?''

''அம்மாவும் அண்ணாவும் பார்ட்னர்ஸ் - தன் மேல் கதிருக்கு சுய பச்சாதாபம் வந்துடக் கூடாதுன்னு அப்பா எதையும் அவன் பேரில்தான் வாங்குவார்.''



''அப்ப உங்கம்மாவின் கையெழுத்தும் தேவைப்பட்டிருக்குமே.''

'வெற்று பத்திரங்களில் கதிர் மூலமே அம்மாவின் கையெழுத்து வாங்கிட்டாங்க. மூத்த மகன் ஏதோ சாதிக்கப் போறான் - தன் கணவருக்கு அது இனிய அதிர்ச்சியாயிருக்கும்னு எண்ணி அம்மாவும் கையெழுத்திட...'

''பெரிய ஏமாற்று வேலை நடந்திருக்குது. ஆக விற்கப்பட்டது இதே இடந்தானா?''

''ஆமா வாஸந்தி - என்ன தொகைக்கு விற்றார்களோ... அதில் பெரும்பகுதியைக் கமிஷனாய் அடித்து தன் பையில் போட்டுக் கொண்டு எஞ்சிய சொற்ப தொகையையும் 'இதோ அதோ' என்று ஒன்றுமில்லாமல் ஆக்கி விட, அப்பாவிற்கு விவரம் போயிடுச்சு... அம்மாக்கு கோவாவின் இந்த வீடு, இந்த ஏரியாவின் அமைதி மிகப் பிடிக்கும் - பிஸினஸ் போக இங்கு ஏதேதோ செய்ய திட்டமிட்டிருந்தாங்க - அது நம்ம கையை விட்டுப் போனதுகூடத் தெரியாமல் அம்மா இருக்க, அப்பா வந்து பயங்கர டென்ஷனில் கத்தியிருக்கார் - அண்ணனைக் கை நீட்டவும் செய்துட்டார்... சிறு வயதிலிருந்து பொத்தி பாதுகாத்து வளர்த்தவர் முதல் முறையாய் அடித்த அதிர்ச்சி அண்ணனை ரொம்ப பாதிச்சிருச்சு... தவிர, சொத்தை விற்ற பணமும் போய் கடனும் வாங்கச் செய்திருக்கார் பரணியின் அப்பா - அதுவும் கந்து, மீட்டர் வட்டி போல... உனக்கு அது பற்றியெல்லாம் தெரியுமான்னு தெரியலை.''

''கொடூரமானவைன்னு தெரியும் - அவசரத்தில் வாங்கிட, அது அவசரமாய் நம்மையும் வாங்கின முதலையுமே முழுங்கிடும்னு கேள்விப்பட்டிருக்கேன்.''

''லேசாய் விழுங்காது - கடிச்சு கொடூரமாய் விழுங்கும் - அதைக் கதிரால் தாள முடியலை - சொத்தும் போய், கடனிலும் தான் மூழ்கியது அப்பாக்குத் தெரிஞ்சால் என்னாகும்ன்ற பதைப்பில்... ம்ப்ச்.. அண்ணா தற்கொலை செய்துகிட்டான்...''

''அப்போ நீங்க இங்கே... அதாவது இந்தியாவில் இல்லை?''

''இருந்திருந்தால் கதிரும் இப்ப உயிரோடு இருந் திருக்கக் கூடும். பரணி குடும்பத்தின் கோல்மால்களைக் கண்டுபிடிச்சு கதிரைக் காப்பாற்றியிருக்கலாம். அம்மா நொறுங்கிட்டாங்க. அம்மாவின் நிலையைப் பார்த்த அப்பாவுக்குக் குற்ற உணர்ச்சி. தான்தான் கதிரின் சாவிற்கும், மனைவியின் துக்கத்திற்கும் காரணம்னு அவருக்குள் புழுக்கம்... அது தாளாமல் அவர் இதயமும் நின்னிடுச்சு...''

''ஐ'ம் ஸாரி.''

''கதிரின் சாவிற்கு வந்த நான் என்ன, ஏதுன்னு விசாரித்து நிலைமையைப் புரிஞ்சுக்கிறதற்குள் எல்லாம் முடிஞ்சிடுச்சு... எனக்கு அம்மாவையும் இழந்திடுவோன்ற பதட்டம்.''

''புரியுது - கணவனையும், கண்ணாய் பாதுகாத்து வளர்த்த மகனையும் ஒருங்கே இழப்பது பெரிய அதிர்ச்சி.''

''அம்மாவை விட்டு விலகலை நான் -

'அம்மா எனக்காய் நீங்க வாழணும் - நீங்களும் உலகத் தில் இல்லாமல் என்னால சமாளிச்சு வாழ முடியாது'ன்னு



கெஞ்சி அவங்களைச் சாப்பிட வைப்பேன்... மறுபடியும் நம் கோவா வீட்டை வாங்கிடலாம்னு.'

''அப்ப இந்த வீடு - உங்களுடையதில்லையா?''

''நல்லவேளை இது நம் கையை விட்டுப் போகலை - ஆனா அம்மாவின் ஆசை... இல்லை எதிர்காலத்திற்கான திட்டங்கள் வேறு. அதற்காய் அப்பா, அதோ அந்த வீட்டையும் வாங்கினார். அதாவது நீ தப்பி தஞ்சம் புக நினைத்த பக்கத்து வீடு.''

இளமுறுவலுடன், பிறை நிலவின் ஒளியில் முத்துப் போல நின்ற அவ்வீட்டைப் பார்த்தான் -

''ஆக அந்த வீடும் - நம்ப வீட்டைச் சுற்றிலும் அப்பா வாங்கிப் போட்டிருந்த இடங்களும் போச்சு...''

அவன் 'நம்' என்று தன்னையும் தன் குடும்பமாய் கருதி, காட்டிப் பேசியதில் அவள் மனம் பூரித்ததுதான்! ஆக பரணியின் குடும்பத்தாருக்குக் கொஞ்சம் கருணை இருந்திருக்குது - மொத்தமாய் சுருட்டலையே?''

தலையாட்டிச் சிரித்தான் - ''ஏன்னா இந்த வீடு என் பேரில் பதிவானது - இதையும் ஸ்வாஹா செய்ய, என் கையெழுத்தும் தேவை. அதைக் கேட்டால் முதலுக்கே மோசமாச்சே?''

''புரியுது - அப்படீன்னா இப்ப இந்த சொத்தை மறுபடி தான் வாங்க பரணி முடிவு பண்ணி, என்னை அனுப்பிய திலும் ஏதும் கோல்மால் இருக்குமோ.''

''கண்டிப்பாய் - ஆக உன்னை ஒரு பாவம் செய்வதி லிருந்து காப்பாற்றினேன் என்று கூட வைக்கலாம்.''

முழுசாய் இல்லாமல் பாதியாய் முறைத்தாள் வாஸந்தி!

"நான் கிளம்பும்போது ஒரு கவரில் ஒரு 'செக்'கையும் தந்தார் பரணி. அட்வான்ஸாய் இதை அவர்களது கையில் தந்திடுன்னு..."

"அதுவும் ஒரு ஏமாற்று வித்தைதான் - சட்ட நுணுக்கங்களைத் தெரிந்து, அதன் ஓட்டைகளைத் தனக்கு சாதகமாக்கிக் கொள்ளும் குதர்க்கம் தெரிஞ்சவங்களாச்சே."

"புரியலையே?"

"அட்வான்ஸ் தந்து, ஒப்பந்தமும் கையெழுத்தாச்சுன்னால், சொத்து முடங்கிடும். வேறு யாருக்கும் விற்க முடியாது. பரணியோ பேசிய தொகையைத் தராமல் இழுத்தடிப்பான் - அதுவும் வருஷக் கணக்கில்."

"ஐயோ - அந்த ஸில்வியா அம்மா வெளிநாடு போகணுமே?"

"அவசரப்பட்டாங்கன்னா, பாதித் தொகையில் சொத்தை வாங்கிடுவான். இல்லைன்னா வருஷக் கணக்கில் விஷயம் இழுத்தடிக்குமே - ஏன்னா கோர்ட், அட்வான்ஸ் தந்தவருக்குத்தான் சாதகம்.. அதான் நான் உன்னைத் தடுக்க வேண்டியதாயிடுச்சு.. தவிர..."

"சொல்லுங்க."

"எங்கம்மாவின் கனவை நனவாக்கும் வேகமும். இப்ப உற்பத்தி, ஏற்றுமதி எல்லாம் நின்றிடுச்சு. நான் ரியல் எஸ்டேட், கான்ட்ராக்ட்டுன்னு ஆரம்பிச்சிருக்கேன். ஆக அம்மாக்கு இங்கே, ஓய்ந்த வயசாளிகளுக்கு ஒரு இல்லம்



ஆரம்பிக்கணுமாம் - அடுத்த வீட்டில் பெற்றவர்களை இழந்த அல்லது அவர்களால் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான ஒரு விடுதி. முதிர்ந்தவங்களும் தளிர்களும் ஒருவருக்கொருவர் ஆதரவாய் இருந்தால் இங்கே தனிமையோ ஏக்கங்களோ இராதுங்கறது..."

"உண்மைதான். குழந்தைகளுக்குத் தேவையான அரவணைப்பு, பாச வழிகாட்டல் பெரியவங்களிடமிருந்து கிடைக்க, குட்டீஸின் உற்சாக அண்மை வயசாளிகளுக்குப் பெரும் தெம்பாச்சே? பிரமாதமான கான்ஸெப்ட்!"

உற்சாகமானவளை நிலவொளியில் கண்ணெடுக்காமல் பார்த்திருந்தான் வசந்தன்.

# 10

நட்சத்திரங்களைக் காவலுக்கு வைத்துவிட்டு நிலா சுருண்டு படுத்து விட்டிருந்த வானத்தின் கீழே அமர்ந்து வசந்தன் தன் வாழ்வை அவள் முன் திறந்து வைக்க - வாஸந்தி கட்டுண்டிருந்தாள் -

'இந்த நிலத்தை வாங்கிய ஸில்வியாம்மா, மறுபடி இதை விற்க நினைத்தது தெய்வாதீனம்தான் - அது கடவுள் அம்மாவின் மீது காட்டும் இரக்கம்னு எனக்குத் தோன்றுது. நானும் நிலம் வாங்கி விற்கும் தொழிலில் இறங்கியிருந்ததால் எங்காதிற்கு விஷயம் எட்டியது.'

'ஆனா அதற்கு முன்னமே பரணி ஸார் அதைப் பற்றி கேள்விப்பட்டு விலையும் பேசியாச்சு - இல்லையா?'

'தன்னிடம் நிலத்தை விற்றது பரணியின் அப்பாங்கறதால், அந்தம்மா மரியாதை நிமித்தம் அதைத்தான் விற்பது பற்றி குறிப்பிட்டிருக்கக்கூடும்.'

''ஆமா - கல்யாணச் சீர் பணம் கையில் இருக்கும் தெம்பில் அவரும் விலை பேசிட்டார்.''

''ஆனால் அட்வான்ஸ் கொடுத்து, நிலத்தை முடக்கிப் போட்டு, பிறகு அதையே அடிமாட்டு விலைக்குக் கைப்பற்றுவது அவங்க ஸ்டைல். தவிர அவன் நோக்கமும் முற்றிலும் மாறுபட்டது. முன்னே சென்னையில் கள்ளிச் செடியோடு கருவேலம் புதராய் மண்டிய பொட்டலிலும் கூட இன்னைக்கு தேன்கூடு போல குடியிருப்புகள்.'

''ம்ம்... சாக்கடை ஓடும் குடியிருப்புகள்!''

''ஆக கோவாவின் ஒதுக்குப்புறத்தில் - இந்த ரெண்டரை ஏக்கரில் நூறு சிறு குடில்களாய் எழுப்பினால், வேண்டாத பழக்கங்களுள்ள சிலர் வந்து சில நாட்கள் தங்கிப் போவார்கள் என..''

''ஆக இது ஒரு தப்பான வியாபார ஸ்தலமாகப் போகுது?''

''ஆமா, போதையும் களியாட்டமும் சுற்றிலுமிருக்க, இந்த வீடும் கூட நமக்குப் பயனில்லாமல் போகும். அம்மா வந்து தங்கவும் முடியாதே.''

''அவங்களுக்கு மட்டுமல்ல பலருக்கும் நிழல் தரும் ஆலமரமாய் இந்த இடம் இருக்காது - இதெல்லாம் தெரியாததால்தான் நான் உங்களை மட்டமாய் பேசிட்டேன்.''



''என்னையும் நீ மன்னிக்கணும் வாஸு - நான் உன்னை இங்கே இட்டு வந்த விதமும் அப்படித்தானே? முதல் நாளே உன்னிடம் இத்தனை விலாவாரியாய் எதையும் சொல்ல முடியாது. நீ பொறுமையாய் கேட்கவோ, நம்பவோ தேவையில்லை..'

உண்மைதான். அவனது குணம் பற்றி ஓரளவு அறிந்து, இது அவனது வீடுதான் என்றும் அவன் குடும்பத்தையும் பற்றித் தெரிந்து கொண்டதால் விளைந்த நம்பிக்கையில்தான் தன் மனம் மாறியிருக்கிறது.

''இனியும் உன்னை நான் இங்கேயே வைத்திருப்பது... தப்புதான்.''

நாளை மறுநாள் காலை நான் விற்ற நிலங்களை, பக்கத்து வீட்டை மறுபடி ஸில்வியாம்மாவிடமிருந்து வாங்கப் போறேன். அதுவரை நீ இங்கே இருக்கணும்ர ஆசை... அதுக்குள்ளே சொல்லச் சொல்லக் கேட்காமல் நமீதா வேறு வந்து இறங்கிட்டாள்..

திடும்மென 'நமீதா சொல்வதை எல்லாம் நம்பி விட வேண்டாம்' என்ற ரீதியில் வசந்தன் எச்சரித்தது நினைவிற்கு வந்தது - ஏன் அப்படி சொன்னான்?

மனம் அவனை நம்ப விரும்பினாலும் சர்க்கரைப் பொங்கலிற்கு இடையே வாயுள் தட்டுப்படும் பொடி கற்களைப் போல நெருடல்களும் இருந்தன.

சூடான பொங்கலை உள்ளங்கையில் இட, அது தரும் அவஸ்தையைப் போல -

மணம் நாவூறச் செய்தாலும் உள்ளங்கை பொசுங் குமே.. அப்படி.

வசந்தன் மீது எழும்பிய அன்பினாலும், சூழ்நிலையின் அவஸ்தையுமாய் அன்றிரவு அவளுக்கு உறக்கமில்லை.

'இரவு கருணை மிக்கது - சோர்வுற்ற மனிதர் மீது தன் கருநீலச் சிறகை போர்த்தி குஞ்சைப் பாதுகாக்கும் கோழி போலாகிறது - இத்தகு இரவின் மீது பரிதாபப்பட்டு காதலர்கள் அதற்குத் துணையாய் கண் விழித்திருப் பார்கள்.'

முன்பு வாசித்து, ரசித்துப் புன்னகைத்த வரிகள் நினை விற்கு வந்தன. கூடவே சின்ன திடுக்கிடலும்....

அப்படியானால் தனக்குள் காதல் ஊடுருவி விட்டதா என்ன?

ச்சேச்சே... இது வெறுமே அனுதாபமும் அபிமானமுமே -

வசந்தனின் நிலை என்ன?

சகலரிடமும் தன் வாழ்க்கை - கதையைப் பகிருபவ னல்ல அவன். இளம் பெண்களிடம் சல்லாபமாய் பேசி, ஆதரவாய் தடவி தழுவுபவனும் இல்லவே இல்லை!

ஆக தனக்காய் அவன் நெஞ்சில் தனியிடம் உண்டு போலத் தான் படுகிறது.

ஆனால் அது ஒரு நாடகமாய் ஏன் இருக்கக் கூடாது?

தன்னைப் பற்றி போலீஸிடம் இவள் புகார் தந்து விடாமலிருக்க, இதெல்லாம் ஒரு தந்திரமாய் கூட இருக்கலாமே?



அந்த ரீதியில் யோசிக்க மனம் முரண்டியது - வசந்தன் சொன்னது அத்தனையும் நிஜம் என்றது - ஆனாலும் உலகம் அத்தனை வெள்ளையானது அல்ல என்றது அவளது புத்தி!

திங்கட்கிழமை காலை - இவளது குழப்பங்களுக்கெல் லாம் அவசியமே இல்லை என்பது போல - 'பளிச்'சென விடிந்தது.

காபியை உறிஞ்சியவன் வாஸந்தியின் முன் நின்று கேட்டது -

''வலி முழுக்க போயிருச்சில்ல - லேசாய் இருக்கா?''

''இல்லை..''

''மேலும் ஓரிரு நாள் பயணத்தைத் தள்ளி வைக் கவா?''

''அநாவசிய சந்தேகங்களும் பயங்களும் முளைக் குமே? இன்னைக்கு நீங்க ஸில்வியாவைப் பார்த்து டீலை முடிக்கப் போறீங்க இல்லையா - பிறகும் எனக்கிங்கே என்ன வேலை?''

அவன் விழிகள் அதற்கு பதிலாய் ஏதோ பேசின... ஆழ்ந்து அவற்றை வாசித்திருந்தால் இவளுக்குப் புரிந்திருக்கும் - அந்தத் துணிவின்றி படுக்கை விரிப்பை சீராக்குவதில் முனைந்தாள் -

''வாசன்ங்கறவர்தான் இந்த நிலம் மறுபடி விற்பனைக்கு இருப்பதை நமக்குச் சொல்லியது. அவரே உண்மையை, அதாவது நம் முதுகிற்குப் பின்னே பரணியின் குடும்பம் இதை விற்க ஏற்பாடு பண்ணியது பற்றி எல்லாம் ஸில்வி

யாம்மாவிற்கு எடுத்துச் சொல்லியிருக்கார். தவிர அவங்களுக்கு இந்த இடம் நல்ல முறையில், தேவை யுள்ளவர்களுக்குப் பயன்படப் போகுதுன்ர திருப்தி வேற."

''அவங்களும் இதை ஒத்த காரணத்திற்காய்தான் இப்படி ஒதுங்கியிருந்த இடத்தை வாங்கினாங்க - இல்லை?''

''அதை மிக அழகாய் விவரிச்சாங்க -

'ஒரு தேவாலயத்தில் எத்தனைக் கூட்டமிருந்தாலும் அமைதி நிலவும் -

ஒரு சாராயக் கடையில் நான்கே பேரிருந்தாலும் அமளி தான்? - ஆக சூழல் மிக முக்கியம் - நான் எந்த நோக்கத் திற்காய் உங்க இடத்தை வாங்கினேனோ, அதே காரணத்திற்காய் அது மறுபடி உங்க கைக்கு வருவதில் எனக்குத் திருப்தி - கடவுளுக்கு நன்றின்னாங்க."

''வந்து...''

''சொல்லு - வாஸந்தி.''

''வெள்ளிக்கிழமை காலை நான் ஏன், பரணி ஸாரின் சார்பில் அவங்களைப் போய் சந்திக்கலை என்பது பற்றி அவங்களுக்குச் சந்தேகம், கேள்விகள் ஏதுமில்லையா?

''அதற்கான சமாளிப்பு ஏற்பாடை நான் சரசம்மா மூலம் செய்திருந்தேனே - எல்லாம் நல்லபடி முடிந்ததாய் பரணிக்குப் பொய்த் தகவல் போக, இங்கே ஸில்வியாம் மாவின் மகனிடம், பரணியின் மாமனாருக்கு உடம்பு சரியில்லாததால் அவன் வரலை என்ற பாதி உண்மையைச் சொல்லியாச்சுது. ஆனா அவங்க வெளிநாடு போக



வேண்டிய அவசரத்திலிருந்ததால் வாசன் மூலம் நமக்கு அந்த நிலத்தை விற்கவும் ஏற்பாடாயிடுச்சு - சரியான விவரங்கள் தெரிஞ்ச பிறகு.''

''அவங்களுக்கும் பணம் தேவைதான்.''

''மிஸஸ். ஸில்வியா எழுவது வயசைத் தாண்டினவங்க - ஆக அமெரிக்கா போக அவங்க எடுக்க வேண்டிய இன்ஷூரன்ஸ் தொகை பெரிது. பயணச் செலவு போக, பல லட்சங்கள் தேவைதான். தவிர விற்காத நிலத்தை, வெளிநாட்டிலிருந்து அவங்க விற்க முயலுவதும் லேசில்லை.''

''ம்ம்... என் புது வேலைக்கான ஏற்பாடு எந்தளவில் இருக்குது - வசந்தன்? நான் ஊர் திரும்பியதும் அதுதானே என் பிரச்சனை.''

அவன் மறுபடி அவளையே உன்னிப்பாய் பார்ப்பது புரிந்தது -

''எல்லாம் நல்லபடி நடக்கும் வாஸு... இன்னைக்கான வேலை முதலில் நல்லபடி முடியட்டும்.''

''ம்ம் - மதிய சாப்பாட்டுக்கு..?''

''வீடு வந்திடுவேன்.''

இவளிடமும் ரோஸலின்ட்டிடுமாய் அவன் வந்து சொல்லிக் கொண்டு கிளம்ப, இருவருக்குள்ளும் இனம் புரியாத பதட்டம் - அதிகம் பேசிக்கொள்ளாமல் கைக்குக் கிடைத்த வேலையில் ஈடுபட்டிருந்தார்கள் -

''இனிப்பு ஏதேனும் செய்யணும் வாஸன்டி'' என்றபடி ரோஸலின்ட் முட்டை, சீனியைக் கடைய, இவள்

இயந்திரமாய் அறையைச் சுத்தப்படுத்தினாள் - நாளை தான் இங்கு இருக்கப் போவதில்லை என்ற எண்ணம் அவளையே விநோதமாய் பாதித்தது -

விடுதலை உணர்வை, நிம்மதியைத் தராமல் - அறுத்து கூறு போட்டது!

இலக்கின்றி முன்னறைக்கு நடந்தவளின் கண்களில், தொலைபேசி பட்டது - பூட்டப்படாத அக்கருவியை உற்றுப் பார்த்தாள் - அவளையும் மீறி உதடுகள் புன்னகையில் வளைந்தன!

வசந்தன் தன்னை நம்புகிறான் எனக் காட்டிய அது - அவளது உலகை மேலும் அற்புதமாக்கியது.

மீண்டும் சமையலறைக்குள் புகுந்தவள் ரோஸி மிஸிக்கு உதவலானாள் - இளையவளின் புது உற்சாகத்தைக் கண்ட முதியவளுக்கும் சிரிப்புதான் - சிரிப்பினூடே முணு முணுத்தார்.

''முதலாளியம்மாக்கு ஆசை தன் சகோதரன் மகளை - இந்த நமீதாவை வசந்த் மணக்க வேண்டுமென்று - ஆனால் கடவுளுக்கு நன்றி - வசந்த் உன்னை சந்தித்து விட்டான். வாஸன்டி வசந்த பாலன் - உங்க பெயர் கூட எத்தனை கச்சிதமாய் பொருந்துகிறது - இல்லையா?

''அத்தானுக்கு இப்படி உதவறேன் - அவரை அப்படி உயர்த்தப் போறேன்னு'' இந்த நமீதா பொண்ணு ஏதேதோ திட்டங்கள் போடறா - போடட்டும் - இடையே ஒரு வாய் நல்ல சாப்பாடும் போடணுமில்லையா?''

''ஒவ்வொருவருக்கும் விதவிதமான ஈடுபாடுகள் மிஸி. நமீதாவிற்கு அது சமையல் இல்லை - அவ்வளவு தான்'' - சமாதானப்படுத்தினாள் இளையவள் -



சூடான உணவை காஸ்ரோல்களில் இட்டு உணவு மேஜையில் வைத்தவள் நமீதாவின் அறையுள் பார்வையை செலுத்தினாள் -

அவள் காகிதங்களை விரித்துப் போட்டு அவற்றில் அமிழ்ந்திருந்தாள். காலையும் ஒரு டோஸ்ட், காபி தவிர ஏதும் அவள் சாப்பிடவில்லையே.

கதவைத் தட்டி நமீதாவின் கவனத்தை இழுத்தவள் -

''சாப்பாடு ரெடி - பசிச்சால் சாப்பிடலாம்'' புன்னகையுடன் அறிவித்தாள் -

''அத்தான் எப்ப வருவார்? அவர் நல்ல சேதியோடு வரும்போது நானும் அதற்கு ஈடான செய்தியோடு... வரை படங்களோடு அவருக்காய் காத்திருக்கணும் - வெறும் சாப்பாடோடு அல்ல.''

திகைப்புடன் இங்கு வந்து அடைபட்ட தான், நான்கே நாட்களில் உரிமையோடு உபசரிக்கும் நிலைக்கு மாறியிருந்தது வாஸந்திக்கு ஆச்சரியந்தான் என்றாலும், அவளை வேரோடு பிடுங்கி எறிந்த அதிர்ச்சியும் அடுத்து அவளுக்குக் காத்திருந்தது!

## 11

உலகில் தவறு செய்யாதவர்கள் யார்?

ஆனால் தவறு என உணர்ந்த பின்பு அதை ஒப்புக் கொண்டு மாறி விடுகிறவர்களுக்கான மரியாதையும் தனிதான் -

தான் ஒப்புக் கொள்வதாவது என்ற அகங்காரந்தான் பிரச்சனை! இலகுவாய் விட்டுத் தரும் பிள்ளைப் பருவத்திலிருந்து காலப் போக்கில் இந்த கர்வம் இறுகி பணிவில்லாத பிரச்சனையைக் கொண்டு வருகிறது.

ஆனால் வசந்தன் எத்தனை அழகாய் மன்னிப்பு கோரினான்... 'நான் செய்தது பெரிய தப்பு வாஸந்தி - ஒரு இளம் பெண்ணைக் கடத்தி வைப்பது பெரிய அபவாதம் - அதுதான் யாருக்கும் தெரியாமல் அதை மறைத்தேன் - தனிமையில் என் நிலைமையை உன்னிடம் விளக்க, உன் ஒத்துழைப்பு கிடைக்குமென்ற நிச்சயமிருந்தது. இப்ப எனக்கு நீ துணையாய் நிற்பது போல ஒரு புதுத் தெம்பும் கிடைச்சிருக்குது... என்ன விநோத புன்னகையுடன் என்னைப் பார்க்கறே...?'

'ஒரு கதை ஞாபகம் வந்தது - ஒருவன் பக்கத்துத் தோட்டத்திலிருந்து மாம்பழங்களைத் திருடினான் - ஆனால் நிரம்பிய கோணிப்பையுடன் வேலி தாண்டிக் குதிக்கும்போது பிடிபட்டுடறான் -

தோட்டக்காரன் விசாரிக்கறான் - 'யார் அனுமதியுடன் இத்தனைப் பழங்களைப் பறித்தாய்னு.'

'இல்லையே காற்றில் இவை விழுந்தன...'

'அப்படியா - அப்ப கோணிப்பை எப்படி இங்கே வந்தது?'

'பையையும் காற்றுதான் கொண்டு சேர்த்தது.'

'அடடா - அப்ப பழங்கள் கோணிப்பையுள் எப்படி புகுந்தது?'



'அதுதான் எனக்கும் ஆச்சரியமாய் இருக்குதுய்யா'ன்னு அப்பாவியாய் பதிலளித்தானாம் திருடன் - ஆக நீங்க பண்றதெல்லாம் பண்ணிவிட்டு இப்ப நான் உங்களுக்கு ஒத்தாசைன்றீங்க?''

இவள் பாவனையுடன் சொல்ல, வாஸந்தியின் தலையை வாஞ்சையுடன் வருடி, வாய்விட்டுச் சிரித்தான்.

நாலே நாட்கள்தானா ஆனது இவனைச் சந்தித்து?

முதலில் அவனை வெறுத்த மனம் எப்போது கனிந்தது?

பாறைகளின் ஊடாகப் பாயும் நதியின் சங்கீதம் போல, இப்படி ஒரு கரடு முரடான அனுபவம் விளைவித்திருந்த இனிமையில் மனம் கிறங்கியது.

அந்த மகிழ்வில் உலகையே நேசிக்கும் மனநிலையிலிருந்தாள்.

அந்தப் பரிவில்தான், நமீதாவைச் சாப்பிடச் சொல்லி உபசரித்ததும் கூட.

ஆனால் பதில் அலட்சியமாகவே தரப்பட்டது -

'இந்த டிஸைன்ஸைப் பார்த்தால் அத்தானுக்குப் பசி மறந்துடும் - மறுபடி இந்த இடத்தை வாங்க முடிவெடுத்துமே எங்கிட்ட சொல்லிட்டாரே -

'நமீ - இதில் நாம எழுப்பப் போகும் கட்டிடங்கள் உன் பொறுப்புன்னு!' - அப்போதிருந்து நானும் பல கட்டிட அமைப்பு பற்றிய புத்தகங்களைப் புரட்டி, அங்கேயும் இங்கேயுமாய் சிறந்ததைப் பொறுக்கியெடுத்து - இப்படி அந்த அமைப்பை உருவாக்கியிருக்கேன்.''

முதலாம் பிறந்த நாளன்று தன் குழந்தையை அலங்கரித்து, அழகு பார்க்கும் இளம் தாயைப் போல உற்சாகமாய் வெவ்வேறு கோணங்களில் அவ்வரை படத்தை ரசித்தாள் நமீதா -

"இதென்ன?"

கேட்ட வாஸந்தியை கற்பூர வாசனை தெரியாத ஐந்துவே என்பது போல பார்த்துவிட்டு -

"இங்கே நாங்க எழுப்பப் போகும் கான்ஃபரன்ஸ், செமினார் ஹால்ஸ். நுழைந்ததும் உள்ள இந்த கட்டிடம் முந்நூறு பேரிலிருந்து நானூறு பேர் வரைத் தாங்கும் - பின்புறம் - அதாவது இந்த வீடு இருக்குமிடத்தில் ஐம்பதிலிருந்து நூறு பேர் அமரக் கூடிய அளவில் அளவான கூடங்கள் ரெண்டு எழும்பிடும். இப்போ திரும்பிய பக்கமெல்லாம் ஐ.டி. கம்பெனிகள் - யாருக்கும் பணம் ஒரு பொருட்டல்ல - ஆனால் உலகமெங்கும் பரவிய அதன் கிளைகளின் மேலாளர், பிரதிநிதிகள், ஊழியர் எல்லாரும் சேர்ந்து சந்திக்க, கலந்து விவாதிக்க, விருந்தளித்து சந்தோஷப்படுத்தத் தகுந்த இடங்கள் குறைவு."

வாய் திறக்காமல் நின்ற வாஸந்தியை லேசாய் திரும்பிப் பார்த்தவள் தொடர்ந்தாள் -

"ஏன் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் இல்லையான்னு நீ யோசிக்கலாம். அதெல்லாம் அவங்களுக்கு அலுத்திடுச்சே! தவிர அங்கு மற்ற சுற்றுலா பயணிகளும் இருப்பாங்க - தனித் தன்மை கிடைக்காது. ஆக இப்படி ஒதுக்கமாய், வேறு எவரின் குறுக்கீடும் இல்லாத, கூடவே கடல் காற்றும் உயர்ந்த உணவும் கூடவே கோவாவின்



பிரத்தியேக சாராயமும் இங்கே பரிமாறப்பட்டால்... இந்த பிரத்தியேக கருத்தரங்கம்... சதா புக்ட்டாய் இருக்கும். வரும் காசை எண்ணி மாளாது."

"இங்கேயா?"

"இதைவிடப் பொருத்தமாய் வேற இடம் கிடைக்குமா? இடத்திற்குப் பொருத்தமாய் கட்டிடத்தையும் யோசிச்சுட்டேன் - நீ பாதி நான் பாதிங்கறது போல அத்தானும் நானுமாய் இதைப் பகிர்ந்து செய்ய, சீக்கிரமே இந்த நூதனத் திட்டம் பூர்த்தியாயிடும் - வரவு லட்சங்களில் இருக்கும் என்பதால் கடனைத் துணிஞ்சு வாங்கலாம் - ப்ராஜக்ட்டிற்கான ப்ளானைக் காட்டினால்தான் பாங்க்கில் கடன் தருவாங்க."

"வசந்தன்... இப்படி ஏதும் சொல்லலையே."

உன்னிடம் சொல்ல என்ன அவசியம் என்றதாய் புருவம் உயர்த்திய நமீதா - "எங்கிட்ட அத்தான் தந்த வேலையை நான் கச்சிதமாய் நிறைவேற்றிட்டேன். எங்க கனவு நனவாகப் போவதை இனி சேர்ந்து ரசிக்க வேண்டியதுதான் பாக்கி."

"அவங்கம்மா இங்கே வயோதிபர்களுக்கு இல்லம் அமைக்கணும்னு ஆசைப்பட்டதாய்?"

"அதில் காசு வராதே.. அத்தை விபரம் புரியாமல் பேசுவாங்க.."

"காசுதான் எல்லாமா?"

"பெர்னாட் ஷாவிடம் கேட்டாங்களாம் -

'உங்களுக்குப் பிடிச்ச புக் எது'ன்னு -

'என் செக் - புக்'னு ஒரே போடாய் பதில் தந்தாராம்! அறிஞர், எழுத்தாளர்னு உலகம் போற்றும் அவருக்கே பணம் தான் மிக வசீகரமாய் தெரிஞ்சது - ஆக அத்தையை நான் சமாளிச்சாச்சு."

"என்ன சொன்னாங்க?"

"வசந்தனே இனி உன் சொந்தம்மா - ஆக நம் இடத்தை உன் இஷ்டத்திற்கு செய்துக்கோன்னுதான்" - மோவாய், தூக்கி, தோளைக் குலுக்கினாள்.

வாஸந்தியின் நெஞ்சம் குலுங்கியது!

அதுவரை உல்லாசக் கற்பனைகளில், வெட்கத்தில் மலர்ந்த மனசு, நொந்து கசங்கியது.

ஆக இந்த உண்மை வெளிவரும் என்றுதான் - 'நமீதா சொல்லுவதற்கு காது கொடுக்க வேண்டாம்' என்று சொன்னானா? வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழியைப் பாதுகாக்க நினைத்திருக்கிறான் - ஆனால் இப்போதோ அது உடைந்தேதான் போனது.

"சிறு பிள்ளைகளுக்கான இல்லம்கூட இங்கே அமையப் போவதாய் வசந்தன் சொன்னார்."

"அடடா... அந்த சரடை எல்லாம் அத்தான் உன்னிடம் விட்டாரா? வைரத்தை தகரத்தில் பதிக்கக் கூடாதுங்கறது உனக்கும் கூடத் தெரிஞ்சிருக்குமே - இந்த இடம் வைரம்" நிறுத்தி நிதானமாய் சொன்ன நமீதாவின் விழிகள் பேராசையோடு மின்னின - "இந்த அமைதியும் கடல் காற்றும் விஸ்தாரமும் இந்த காலத்தில் அதுவும் கோவாவில் அமைவது வைரச்சுரங்கம்! இதில் முதியோர் இல்லம், குழந்தைகள் காப்பகம் அமைப்பது க்ராஸ் வேஸ்ட்! அதற்கு சென்னை இல்லை மதுரையின் ஒதுக்கு புறத்தில் ஒரு நாற்பது சென்ட் நிலம் போதுமே."



உன்னிப்பாய் பேசியவள் காலை குளித்து உடை மாற்றவுமில்லை. வெறியோடு காகிதங்களையும் புத்தகங்களையும் பரப்பி வைத்து அங்கும் இங்கும் கோடுகள் கீறிய படியிருந்தாள் - கூந்தல் கூட கலைந்துதான் கிடந்தது -

"நீயும் அவங்களைப் போல அசட்டுத்தனமாய் பேசறே - ம்ம் உம்பேரென்ன? ஆஹ்.. வாஸந்தி. கைவிட்டுப் போன இந்த இடம் மறுபடி நம்மைத் தேடி வர்றது எவ்வளவு பேரதிர்ஷ்டம்? அதைச் சரிவரப் பயன்படுத்தி கோடிகளைக் குவிக்கலைன்னா வி ஆர் ஸ்டுபிட் - நம்ப மடத்தனத்தைக் கண்டு ஊர் என்ன உலகமே சிரிக்கும். இப்படி எடுத்துச் சொல்லி அத்தையை சமாளிச்சுட்டேன் - அத்தான் முடிவை எங்கிட்ட ஏற்கெனவே விட்டுட்டார்... தவிர உனக்கு அத்தானின் குடும்பக் கதை தெரியும்ர நினைப்பில் சொல்றேன்."

குரலைத் தணித்துத் தொடர்ந்தாள் நமீதா -

"காசு விஷயத்தில் ஏமாந்துதானே கதிர் அத்தான் தற்கொலை செய்துகிட்டார் - மாமாவின் சாவிற்கும் அதுவேத்தானே காரணம்?"

"அது ஏமாற்றப்பட்டதால் நேர்ந்த வேதனை.."

"இல்லை பணத்தை இழந்த அதிர்ச்சி! மலை போல பெருகி நின்ற வட்டியைக் கூட கட்ட முடியாமல் தானே மேலும் சொத்தை அவங்க இழந்தாங்க? அத்தை தன்

உயிரான மகனையும் மாமாவையும் இழந்தது போதிய பணமில்லாமல்தான் - சொத்தும் பணமும் பழுதில்லாமல் இருந்திருந்தால் அவங்க உயிரும் பத்திரமாகவேத்தான் இருந்திருக்கும். அப்படி அற்ப ஆயுசில் பறந்திருக்காது - அத்தனை பெரிய விலை தந்து படித்த பாடம் புரியாமல் போகுமா? ஆக எங்களுக்கு இப்ப ஒரே நோக்கந்தான் - விட்டதை வட்டியோட மீட்டிடணும். அதில் நான் அத்தானுக்கு துணை நிக்கறேன்றது... ம்ம் - பெருமையாத் தானிருக்குது..."

அசையவும் கூட தெம்பற்று சிலையாய் நின்றிருந்தாள் வாஸந்தி.

"இவ்வளவு பேசினதாலோ என்னவோ எனக்குப் பசிக்குது - சாப்பிடப் போறேன் - நீ எப்படி...?"

"இல்லை - பிறகு..." முணங்கியவளில் பசி என்ன - எந்த உணர்வுமே இல்லை. ஆனால் பேசியவற்றை மனசுள் புரட்டிப் பார்க்க, உள்ளே எரிமலையின் வெப்ப குமுறல்!

மறுபடி பார்வை பூட்டப்படாத தொலைபேசியில் பதிந்தது -

சற்று முன்பு வாஸந்தியை நெகிழ்த்திய அக்காட்சி இப்போது நெருப்பாய் சுட்டது -

"இவள் சுத்த ஏமாளி" என்ற எண்ணத்தில்தான் அதைத் திறந்து விட்டுப் போயிருக்கிறான் - தடவி, பேசி, தழுவி, கெஞ்சி தன்னை' முழுக்க வசப்படுத்தியாகி விட்டது என்ற திண்ணக்கம்!



கனன்ற எரிமலையிலிருந்த அந்த எண்ணம் குபீரெனத் துப்பப்பட்டது.

பரணிக்கு போன் செய்தால் என்ன?!

## 12

'விடியும் நேரத்தில் விடிகின்றது...

ஆனால் நான் கண் விழிக்காத வரை

வெளிச்சம் தெரியாது.'

உண்மைதானே? - அசமந்தமாய் கண்களை மூடிக் கொண்டிருந்து விட்டாள். ஆக சூழலை உணராமல் உணர்வுகளுக்கு அடிமையாகும் நிலைமை. ஆசைகள் அலையலையாய் பெருகி தன்னை மூழ்கடித்து விட்டன!

அதை இப்போது உணர, கோபத்திலும் அவமானத்திலுமாய் மூச்சுத் திணறுகிறது!

ஆனால் இப்படியே விட்டு விடக் கூடாது -

வசந்தனுக்கான பாடத்தை கற்பித்து விட வேணும்.

நடுங்கும் விரல்களால் கறுப்பு தொலைபேசியை எடுத்தவள் பரணியின் பர்ஸனல் எண்ணைச் சுழற்றினாள்... அவரது மொபைல் எண்கள் ஆனால் தொடர்பு ஏற்படவில்லை.

அடுத்து என்ன செய்யலாம் என்ற குழப்பத்துடன் 'பேசி'யை வைத்தவளின் கண்கள் நம்ப முடியாத அக் காட்சியில் சற்று அகண்டன!

வெளி தாழ்வாரத்தில் தெரிந்தது அவன்தான் - பரணியேதான்! அவசரமாய் வாசலுக்கு நடந்தாள் -

''ஸார்... இப்பதான் உங்களுக்கு போன் போட்டு... லைன் கிடைக்கலை. பார்த்தால் நேரே வந்து நிக்கிறீங்க.''

''அடடா - ஆஸ்கர் அவார்ட் தரக்கூடிய நடிப்பு! தத்ரூபமாய் நடிக்கறே - வாஸந்தி.''

வெறுப்புடன் பரணியின் உதடுகள் அழுந்தின - விகாரமாய்.

''நிஜமாய்தான் ஸார்.''

''நிஜமாய் நடந்ததெல்லாம் எனக்கும் தெரியும். நீ ஸில்வியாவைப் போய் சந்திக்கவேயில்லை - ஆக டீல் கலைஞ்சாச்சு. அட்வான்ஸ் தொகையை நீ கொடுத்திருந்தால் - அப்படியே சொத்தை மடக்கிப் பிடிச்சிருப்பேன் - கோடி என்ன லட்சங்களிலேயே இந்த இடம் என் சொந்தமாகியிருக்கும்.''

ஆக வசந்தன் இவனது ஏமாற்று முறைகளைப் பற்றி சொன்னது பொய்யல்ல... இவனும் எத்தன். தன் இரு புறமும் கொடுமை பூதாகாரமாய் நிற்பது உணர்ந்தவளுக்குள் நடுங்கியது - நேர்மையற்றவர்களின் கையில் சிக்கிய தன் நிலை என்னவாகுமோ என்ற விதிர்ப்பு!

''என் வாழ்க்கையையே இதுக்காகப் பணயம் வச்சவன் நான் - எம்முகத்துல கரி பூச துணியறே ம்ம்...?''



''என்ன சொல்றீங்க?''

''பின்னே நான் தாலி கட்ட சம்மதிச்சதே பணத்துக்காக - அந்த பணம் மூலம் இந்த சொத்தை வாங்கிடலாம்னு தானே?''

''அட்வான்ஸ் மூலம் - சில லட்சங்களிலேயே இதை வாங்க உங்களால் முடியும்னீங்க?''

''ஸில்வியா திமிங்கலமில்லை - சாதாரண மீன்தான் - ஆனாலும் வலையை பக்காவாய் வச்சிருக்கணுமில்ல - இல்லைன்னா மீன் நழுவிடுமே - ஆக பெரிய இடத்து மாமனாரோடு பக்காவாய் காத்திருந்தவன் - உன்னை நம்பி அனுப்பி கோட்டை விட்டுட்டேன். எங்கே வசந்தன்?''

''அவர் ஸில்வியாம்மாவைப் பார்க்கப் போயிருக்கார் - இந்த நிலத்தை வாங்க.''

இயந்திரத்தனமாய் சொன்னாள் -

ஒப்பிடுதல் சரியல்லதான் - ஆனால் இந்த இரண்டு கள்ளர்களுக்கிடையே பரணி தேவலை! ஒரு பெண்ணை அவளது பணத்துக்காக மணந்து கொள்ள முடிவெடுத்ததை ஒத்துக் கொள்ளும் நேர்மையாளன்!

தான் சொன்ன கதையில் உள்ளது போல -

மாங்கனி நிரம்பிய கோணிப்பை எப்படி தன் முதுகிற்கு வந்தது என்று அப்பாவியாய் கேட்ட அக்கிரமக்காரன் போலில்லை!

''அதை உங்களுக்குத் தெரிவிக்கத்தான் போன் செய்ய முயன்றேன்.''

''நாலு நாள் கழிச்சு செய்த பெரிய முயற்சி!'' எள்ளினான். ''இத்தனை நாளும் ஏன் அந்த யோசனை வரலை?''

"தப்புதான் - இங்கே முதியோர், குழந்தைகள் இல்ல மெல்லாம் வரப்போவதாய் அவர்... வசந்தன் சொன்னதை தம்பி... ஏமாந்துட்டேன்."

"சரி உனக்கு இப்போதேனும் சொல்லும் ஞானம் எப்படி உதயமாச்சுது?"

"இப்பதான் தெரிய வந்தது - இது வியாபார ஸ்தல மாகவே போகுதுன்னு காசை கோரும் கிணறாகத்தான் பயன்படப் போகுதுன்னு... இரண்டு பேரின் நோக்கமும் ஒன்றேன்னும் போது..."

"ஆக அம்மணியின் கோபத்திற்கு நான் வடிகால் - ம்ம்? என் ஆத்திரத்திற்கும் நீதான் வடிகால்... உன்னை அணு அணுவாய்... கிளம்பு என்னோடு."

"எங்கே?"

அவள் கால்கள் பின்னடைந்தன -

"வாய்கிழிய சொன்னியே அங்கேதான்."

"என் பெட்டி, பையெல்லாம் அறையில் இருக்குதே."

"ஸில்வியா - வசந்தனுக்கிடையே டீல் மட்டும் முடிஞ் சிருந்துது - உனக்கு அதெல்லாம் தேவைப்படாது - மேலே ஃப்ரீ டிக்கெட் தந்து அனுப்பிடுவேன்.." வலது சுட்டு விரலால் வானத்தைக் காட்டினான்!

இடது கையால் தன்னை சுண்டி இழுத்த அந்த வேகத் தில் நிலை குலைந்தாள் - ஏனோ வசந்தனின் மென்மை யான கையாளுதல் கண்ணீருடன் நினைவிற்கு வந்தது!

'கோபப்படும் போது மூளையை விட நாக்கு அதி வேகமாய் வேலை செய்கிறது' - என்ற அனுபவ வாக்கு மிக உண்மை. அதுவும் தான் உள்ளார விரும்பிய வசந்தன்



தகுதியற்றவன், ஏமாற்றுக்காரன் என்ற கோபம் அவளை ஏறக்குறைய கிறுக்காக்கி விட்டது...

ஆனால் உளறிய பின்பு உதைத்தது...

மறுபடி ஒப்பிட்டு, பரணியை விட எதிலும் வசந்தன் மேலானவன் என்று தீர்ப்பளித்தது அந்தரங்க மனம்... அப்படியானால் நமீதா சொன்னதெல்லாம்?

அவள் பேச்சைப் பொருட்படுத்த வேண்டாம் என்றாரே?

ஆனால் பண வேட்கை மிக வலியது - அது வசந்தனை மட்டும் விட்டு வைக்குமா என்ன?

எளிய வாழ்வைத் தேர்ந்தெடுத்த அப்பா, பண ஆசையைப் பற்றி, அது கைக்கு வர கிளறும் கர்வம் பற்றி தன்னிடமும், வீடு வரும் தன் மாணவர்களிடமும் ஒரு குட்டி கதை சொல்வார் -

'ஒரு ரூபாய் காசொன்று தவளையின் வசமானது - பளபளத்த பணத்தை பூமிக்கு அடியே இட்டு மறைத்த தவளை தானும் அங்கேயே அமர்ந்து கொண்டது. மறுநாள், காசு புதைத்த இடத்தின் மேல் யானை ஒன்று பாதம் பதித்து நடந்து போக, தவளைக்கு ஆத்திரம், தாள வில்லை - யானையை உதைக்கத் தன் காலைத் தூக்கி மிரட்டியதாம்!'

முதன்முறை அக்கதையைக் கேட்டவள் சிரித்தாலும் சிந்தித்து ஒரு கேள்வியையும் சொன்ன தந்தையிடம் கேட்டாள் -

"அப்படீன்னா பணம், பொருளெல்லாம் நமக்கு வேண்டாமப்பா?" என்று.

"தேவைக்குப் போதுமானளவிற்கு வேணும்டா வாஸு. பணமோ பொருளோ என்றுமே பிரச்சனையில்லை - அவற்றுக்கு நாம அடிமையாகும்போதுதான் பிரச்சனை -"

இதோ அப்பணத்தின், அது வாங்கித் தரும் சொத்தின் மீதான வெறி பரணியின் கண்களில் கூத்தாடுகிறதே. இப்பேராசை வசந்தனை மட்டும் விட்டு வைக்குமா? ஆனால் வசந்தன் சாமர்த்தியமாய் சரடு சரடான பொய் களின் நடுவே தன் பேராசையை மறைத்து விட்டான். அப்படிப்பட்டவனிடமா தன்னை இழக்க இருந்தாள்...? வெட்க மறுகலுடன் புழுங்கினாள். அவனை லேசில் மறக்கவும் கூடாதே...

சிறு வயதில் மேலும் கீழுமாய் மாறி மாறி ஆடிய 'ஸீ...ஸா' போல புத்தி அல்லாடியது!

வசந்தன் மீது வைத்த நம்பிக்கைத் திரிந்த ஏமாற்ற பொறுமலில் ஏதேதோ செய்து தீர்த்தாலும், யோசிக்க, பரணியின் பேச்சு, நடவடிக்கைகளைப் பார்க்க, வசந்தன் நல்லவன் என்று அழுந்தச் சொன்னது புத்தி.

பரணியின் முரட்டுப் பிடியில் தோள்பட்டை கழண்டு விடுவது போலிருந்தது - அவன் இழுப்பிற்கு உடம்பு இழுபட்டது. வசந்தனின் மென்மை ஞாபகம் வந்து மறுபடி அவளைக் குத்தி அழ வைத்தது... ஏக்கமாய்.

'நெருப்பு அருகிலிருந்து சுடும்;

காதல் தூரத்திலிருந்தும் சுடுமா'மே - கண்ணிற்குத் தெரியாதவனை எண்ணி நெஞ்சு விம்மும் - ஆக இது... காதலா? அதுவும் நாலே நாட்களில்? ஆனால் இந்த நாலு நாட்களில் இருவரும் சதா ஒன்றாகவேத்தானே இருந் தார்கள் - அவனது சிரிப்பு, உதட்டின் மடிப்பு, நடை,



நடவடிக்கைகள், பேச்சின் மூலம் தெரிந்து கொண்ட அவனது குடும்பம், கடந்த காலம்... இவற்றில் எப்படியோ அவனும் மனதில் இடம்பிடித்து விட்டான்... தானறியாம லேயே!

ஆகவேதான் வசந்தன் தப்பானவன் அல்ல என்று இப்படி குதிக்கிறது மனம்!

அப்படியே அவன் தப்பு செய்திருந்தாலும் அதற்கு சரியான காரணமிருக்கும் என்ற சப்பைக்கட்டு வேறு!

தொலைபேசியின் முன் அவளை உலுக்கி நிறுத் தினான் பரணி.

"இதிலிருந்தே அந்த ராஸ்கலைக் கூப்பிடு - அங்குள்ள போனில் காலர் ஐ.டி. இருப்பின் என் நம்பர் தெரிய வேணாம்."

"எனக்கு நம்பர் தெரியாது."

"முரண்டு பண்றே? சரி நேரிலேயே போயிடலாம் - ஸில்வியா நம்பரைப் போட்டால் எடுக்கும் அந்தம் மாவின் மகன், எம்பெயரைக் கேட்டதும் -

"ஸாரி, அம்மா உங்களுடன் பேச விரும்பலை'ங் கறான் - திமிரு." அவன் இழுத்த வேகத்தில் வாசற் படிகளில் தடுமாறி விழ இருந்தவள் சமாளித்து நிமிர்ந்த போது கிடைத்த காட்சியில் பெரும் நிம்மதி அவளைப் போர்த்தியது. ஆனால் பரணியின் முகத்தில் கள்ளமும் கடுப்பும் கூடின! நிழலுக்கடியில் நிறுத்தப்பட்ட அந்தக் காரிலிருந்து, இறங்கிய வசந்தன் பின் கதவைத் திறந்து அம்மூதாட்டி இறங்க உதவிக் கொண்டிருந்தான். தொள

தொளப்பான கறுப்பு பேண்டும், பளீர் நிறத்தில் ஸில்க் சட்டையும் தொப்பியுமாய் இறங்கி நின்றவர் மிஸஸ் ஸில்வியா என யூகிக்க முடிந்தது. இளம் சாம்பல் நிற சூட்டில் இருந்தவர் அவரது மகனாய் இருக்கலாம். ஆனால் அவர்கள் இங்கே வரவேண்டிய காரணம்?

''அடடா... ஒன்றி உறவாட வீட்டுக்கே கூட்டிட்டு வந்துட்டானா? கிச்சன் எங்கே காட்டு...''

என்ற பரணி அவளைக் காட்டுத்தனமாய் எதிர்ப்புறம் திருப்பி இழுத்தான் - ''ஸ்ஸ்... அங்கே எதுக்கு?''

கோழியை நறுக்கற கத்தியை எடுத்து வர்றவனை மிரட்டத்தான் - இப்பவும் ஒண்ணும் லேட்டில்லே - அத்தனையையும் கிழிச்சுப் போட்டு சொத்தை எம் பேருக்கு எழுதிடலாம்...''

என்றபடி அவசரமாய் வீடு புக முயன்றான் பரணி.

## 13

ஆனால் அவர்கள் வெளியேறும்போது சமர்த்தாய் திறந்திருந்த வாசற்கதவு இப்போது மூடியிருந்தது மில்லாமல், இவர்களை மறிப்பது போல நின்றிருந்தாள் நமீதா!

''என்னை நிம்மதியாய் சாப்பிட விட மாட்டியா பரணி?'' கை துடைத்தபடி அவள் அலட்சியமாய் கேட்க,



வாஸந்தியை இழுத்தபடி நடந்தவனின் வேகம் சற்று மட்டுப்பட்டது.

ஆனால் மறுபுறம் தன்னை வசந்தன் நெருங்குவது புரிய, அதட்டினான் -

''விலகு நமீதா... இல்லைன்னா..''

''ஒண்ணும் செய்ய முடியாது'' - உயர்ந்த அவன் கையை அவளது அலட்சிய பார்வை தடுத்து நிறுத்தியது!

அவளைத் தள்ளி கதவைத் திறக்க முனைந்த பரணியின் தோள்பட்டையில் கனமாய் அடி விழுந்தது!

அடித்த நமீதாவை ஆச்சரியமாய் பார்த்தாள் வாஸந்தி!

திடும்மென தன் பலம் புரிந்தது - ஆண்கள் இப்படி முரட்டுத்தனமாய் இழுக்க தான் ஒரு துணி பொம்மை போல ஏன் இழுபட வேண்டுமென்ற உத்வேகத்தில், தன் இடது கையால் அவன் புஜத்தை இறுகக் கிள்ளி, தன் வலது கையை உதறி மீட்டாள்!

தப்பி ஓட முயன்றவளை தோளில் இதமாய் விழுந்த கை தடுத்தது -

தன்னோடு அவளை அணைத்தாற் போல பிடித்துக் கொண்ட, வசந்தன் அசம்பாவிதம் ஏதும் நடக்காதது போல - இயல்பாய் வீட்டுக் கதவைத் திறந்தான் - உள்ளே யிருந்து சிறு அச்சத்தோடு எட்டிப் பார்த்த ரோஸி மிஸியையும் அவன் புன்னகை சமாதானப்படுத்தியது -

''எல்லாருக்கும் டீ கிடைக்குமா ரோஸி மிஸி? தவிர கத்தி, கபடாவை எல்லாம் கண்ணில் படாமல் வச் சாச்சா?''

''ஆச்சு - பத்து நிமிஷத்தில் பிஸ்கட்டும் டீயும் பரி மாறிடறேன்.''

''வாங்க ஸில்வியாம்மா - பரணி கூல் டவ்ன் - நீயும் வா - எல்லாரும் அமைதியாய் உட்கார்ந்து பேசலாம்.''

''பேச என்னயிருக்கு? எனக்கான இடத்தைத் தட்டிப் பறிச்சிட்டியே...''

''அது உனக்கு, எனக்கான இடமில்லை பரணி - நல்ல நோக்கத்திற்காய் பயன்பட வேண்டிய இடம்'' என்ற வசந்தன் வந்தவர்களை அமரச் செய்தான்.

''முழுக்கதையும் இப்பதான் புரியுது - ப்ரோக்கர் வாசன் எடுத்துச் சொல்ல, இங்க வேலை பார்க்கும் ரோஸ லின்டையும் வரவழைச்சு பேசினேன் - வசந்தனின் குடும் பத்தில் ஏற்பட்ட அநாவசிய குழப்பங்களில் என்னையும் அறியாமல் எனக்கொரு பங்கிருந்திருக்குது.'' இதமான குரலில் பேசினார் ஸில்வியா.

''இல்லம்மா - ஒரு சொத்தை வாங்கும்போது அதன் பின்னணி, சரித்திரத்தை யாரும் ஆராய்வதில்லை.''

''ஆக அந்த தப்பு நடந்து போச்சு - உன் அண்ணன் கதிரின் படங்களைக் காட்டி அழுதாள் ரோஸலின்ட். உங்கம்மா இந்த வீடு, நிலத்திற்காய் கொண்டிருந்த, கனவு திட்டமெல்லாம் என்னுடையதை ஒத்திருந்தது புரிந்தது... ஆக வசந்தனுக்கு மொத்தத்தையும் விற்பதுதான் சரி - பணம் எனக்கும் தேவைதான் - ஆனால் அதைவிட மன திருப்தி மிக முக்கியமான தேவை - இல்லையா?''

வாஸந்தியின் தலை தெறித்தது -



ஆக இந்த மூதாட்டியும் நம்பி விட்டார் - ஏமாறப் போகிறார் - இது வெறுமே வியாபார ஸ்தலமாகப் போவ தில் அவருக்கு என்ன திருப்தி கிடைக்கப் போகிறது?

ஸில்வியாவின் மகனும் அக்கருத்தை ஒட்டிப் பேசினார் -

''விற்றவரின் கைக்கே சொத்து மறுபடி போய் சேரு வதில் எங்களுக்கு சந்தோஷந்தான். ஆக பல கோடி பெறக்கூடிய சொத்தை நியாயமான விலைக்கே தர்றோம் - அதிலும் தேவையிலும் தனிமையிலும் இருப்பவர்களுக்கு இந்த இடம் அடைக்கலம் தரப் போவதில் பெருமிதமும் கூட...''

''அந்த புண்ணியத்தில் எங்களுக்கும் பங்குண்டு என்ற ஆத்ம திருப்தி.''

'எல்லாம் பொய் - பசப்பு' என்று கத்த வேண்டுமென் றிருந்தாலும் வாஸந்தியின் உதடுகள் உலர்ந்து ஒட்டிக் கிடந்தன.

நமீதாதான் குறுக்கிட்டாள் -

''ஒரு நிமிஷம் - ஆத்மா, திருப்தி, சேவை என்பதெல் லாம் நாம் நம்மையே ஏமாற்றிக் கொள்ளத்தான் - அது வரை நாம் வாழ்வில் செய்த பாவத்தையெல்லாம் அந்தப் புண்ணியம் துடைத்தெடுக்கும் என்கிற அசட்டுத்தனம்! வாழ்க்கைக்குப் பணம்தான் அத்தியாவசியம். அத்தான், அதை உங்களிடம் ஏற்கெனவே எடுத்துச் சொல்லி, இந்த இடத்திற்கான கட்டிட அமைப்பு, திட்டமெல்லாம் என் பொறுப்புன்னு கேட்டேன் - இப்ப எல்லாம் ரெடி... தயவு செய்து சேவை, தியாகம்னு மறுபடி உளராதீங்க.''

ஸில்வியாம்மா மிருதுவாய் புன்னகைத்தார்கள் -

''ம்ம்.. காரில் இங்கு வரும்போது வசந்த் சொன்னான் - தன் கஸின் நமீதாவைப் பற்றி, ரொம்ப அழகாய் உன்னை விவரித்தானம்மா -

'நமீ ஒரு நடைமுறைப் பிராணி அவளுக்கு மொழி, கலை, மனிதர்களுக்கு சேவை என்பதிலெல்லாம் ஆர்வம் கிடையாது. வாழ்க்கையின் சாதனை பணம் குவிப்பது தான் என்பது அவளது சித்தாந்தம் - மல்லிகை, வாசமும் மென்மையும் கொண்டதென்றாலும் மலரை சமைத்து சாப்பிட முடியுமா - யுடிலிடிதான் மதிப்பு - என்பாயாம்.''

''அதிலென்ன தப்புங்கறேன்? ரொம்ப முக்கியமான ஒரு விவரத்தை நீங்க யாரும் யோசிச்சதாய் தெரியலியே... கடன் வாங்கி இங்கே முதியோர் தங்கும் விதத்தில் கட்டிடத்தைக் கட்டுவீங்க - மறுவீடு குழந்தைகளுக்கு ஏற்ற விதத்தில் மாறும் - சரி பிறகு ரெண்டு கட்டிடங் களையும் தனிமையில் தவிக்கும் ஆட்களால் நிரப்புவீங்க - தொடர்ந்து அவங்களைப் பராமரிக்க கருணை மட்டும் போதுமா? காசு வேணுமே?''

''இப்படி கறாராய் பேசும் ஒரு ப்ராக்டிகல் பர்ஸன் நம்மோடு இருப்பது நல்லது. யோசிச்சோம்மா - ஏன்னா இந்த ட்ரஸ்ட்டின் மெம்பராய் வசந்தன் என்னையும் சேர்த்துக் கொண்டான் - ஆக லீஸிற்கு விட்டிருக்கும் வீட்டின் பின்னேயிருக்கும் முந்திரி, தென்னை தோப்பை நாமே எடுத்து எடுத்தலாங்கறது முதல் யோசனை - முன்பு வசந்தனின் அப்பா ஆரம்பித்த பிஸினஸை..''

''எது - அந்த கொட்டாங்கச்சி வியாபாரமா?'' நமீதா சிடுசிடுத்தாள்.



''வெளிநாடுகளுக்கு அதன் மூலம் செய்த கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்ய, காசு கொட்டுமேம்மா. மேலும் அந்தப் பொருட்களை உருவாக்குவதில், பள்ளி போகும் நேரம் தவிர, மற்றதில் குழந்தைகள் ரசித்து ஈடுபடலாம்...''

''அது அவங்களுக்கான பாக்கெட் மணியை வாங்கித் தரும் - தவிர முதியோர் இல்லத்தில் படிச்சவங்க பலர் இருப்பாங்க. அவங்க கணக்கு வழக்கு, மேற்பார்வைன்னு உதவலாம்'' வசந்தன் தொடர்ந்து சொல்ல, வாஸந்தியின் உள்ளே அவ்வார்த்தைகள் பாலாய் இறங்கின - சற்று முன் ஏமாற்றத்தில் காந்தியவளைக் குளிர்வித்தன!

ஆக அவன் சொன்னது எதுவும் பொய்யில்லை.

நமீதா தன் இஷ்டத்திற்கு திட்டமிட்டு கற்பனைக் கோட்டைகளை எழுப்பியதில் - அவன் பங்கேதுமில்லை - ஆகவேதான் அவள் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ள வேண்டாமென்றான் - புரிகிறது.

இவளுக்குள் யோசனைகள் மத்தாய் கடைந்து தெளிவைத் திரட்டியது போல, பரணியினுள் கசப்பை கடைந்தெடுத்திருந்தது -

'இனி இந்த சொத்து - நம் கைக்கு வர வாய்ப்பே யில்லை - தன் குட்டு வெளிப்பட்டாகி விட்டது - ஆக வேறு இடம் தேட வேண்டியதுதான் தன் ஏமாற்றிற்கு' - என்ற கசப்பில் அவன் முகம் கோணி, கடுகடுத்தது.

''தேங்காய், முந்திரியின் விற்பனையை இப்போதே பேங்க்கில் போட்டு வைத்தால், விடுதிகளை நடத் தறதில் சிக்கில் எழாது - வருமானமும் வர ஆரம்பிச் சுட்டால்..''

''நல்ல வருமானம் வரும்னு எதிர்பார்க்கறீங்களா?'' நமீதா சிறு சந்தேகத்துடன் வினவினாள் -

"நமக்குப் போதுமானது நிச்சயம் கிடைக்கும். உன்னைப் போல திறமையான பெண், உதவிக்கு இருந்தால் மேலும் சாதிக்கலாம்.''

சொன்ன திருமதி ஸில்வியாவை இளையவள் யோசனையாய் பார்த்தாள் - ''இல்லை - எனக்கு இப்படி அளவாய் சம்பாதித்து, அதை சேவைக்காய் செலவிடுவது - அது என் நோக்கமில்லை... எனக்கு சின்ன திருப்திகள் போதாது - வாழ்வு பெரிய சவாலாய் இருக்கணும். மற்றவங்க லேசில் சாதிக்க... ஏன் யோசிக்கவும் தயங்கறதை நான் செய்யணும் பெரிய லெவல் அச்சீவ்மென்ட்ஸ்... ஆனால் நேர் வழியில்!'' ஓரக்கண்ணால் பரணியை நோக்கியவள் சொல்லி முடித்தாள்!

''ஸாரி... அம்மாவை பேசி சம்மதிக்கப்பண்ண ரொம்ப முயன்றாயாம் - அவங்களால் உன்னை சமாளிக்க முடியாமல் உன்னை இங்கே அனுப்பிட்டாங்க...''

''ம்ம்... அவங்க என் பேச்சுக்கெல்லாம் தலையாட்டியதும் என் தொலைநோக்கு திட்டங்கள் அவங்களுக்குப் புரியுதுன்னு சந்தோஷப்பட்டேன்... தாள முடியாமல் இங்கே மூட்டைக் கட்டிட்டாங்கன்பது இப்பதான் புரியுது..'' தோள் குலுக்கினாள்.

எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் பொதுவாகவும் பேசியபடி அவர்கள் தேநீர் பருகிய வேளையில் திருமதி. ஸில்வியா முறைப்பாய் ஒதுங்கி உட்கார்ந்திருந்த பரணியின் பக்கம் போய் பேசினார்.



''உங்க மாமனாருக்கு இப்ப தேவலையா? பெரிய இடத்தில் உங்களுக்கு பெண் கிடைச்சதில் சந்தோஷம்... வசந்த் சொன்னார் - அப்ப எங்களின் இந்த புதுத் திட்டத்திற்கு நீங்க ஒரு பெரிய தொகையை நன்கொடையாய் தருவீங்கன்னு எதிர்பார்க்கிறோம்.''

அதற்கும் மேல் பரணிதரனுக்கு அங்கே நிற்க தாளவில்லை. வந்த வேகத்திலேயே வெளியேறினான்!

## 14

விமானத்தில் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்திருந்தாள் வாஸந்தி. முதல் அனுபவங்கள் வெகு சுவாரஸ்யமானவை. ஆனால் அவளது அம்முதல் விமான பயணம் அவளை சுவாரஸ்யப்படுத்தியதாய் தெரியவில்லை - முகத்தில் சஞ்சலம்தான் தெரிந்தது... கூடவே சோர்வும்.

ஒடிசலான விமான - பணிப்பெண்கள் தட்டு நிறைய மிட்டாய்களுடன் செயற்கை சிரிப்புடன் விமானத்தில் சுற்றி வந்தனர். அபிநயத்துடன் விமானத்தில் ஏதும் கோளாறு ஏற்பட்டால், தப்பிக்கும் வழி பற்றி கூறினார்கள் - எதுவும் வாஸந்தியுள் புகவில்லை. உயிரற்ற பொம்மை போல உட்கார்ந்திருந்தாள்.

அந்த இயந்திரப் பறவை வானில் எம்பிப் பறக்க, கீழே தெரிந்த நீலக் கடலை பார்த்தவளின் உள்ளே வலித்தது -

தன்னில் ஒரு பாதியை அறுத்து விலக்கியது போன்ற வேதனை!

ஐந்து நாட்களின் முன்பு கோவா கிளம்பியபோது எத்தனை உற்சாகமிருந்தது... அது ஐந்தே நாட்களின் முன்புதானா? நான்கு நாட்களில் தன் உலகம் எப்படி தலை கீழானது?

ஏழு வயதில் ராட்டினத்தில் ஏறியவள் அதன் பிறகு அது சுழலுவதைக் கூட காண அஞ்சுவாள் - விவரம் அறியாமல் ஏறி உட்கார்ந்து, அது வேகமெடுத்தபோது - அவள் அலறிய அலறல்... ஆனாலும் பொருட்காட்சியின் அந்த ராட்டினம் முழுமையாய் சுழன்றுதான் நின்றது! கண்கள் இருள, அரை உயிராய் இறங்கிய ஞாபகம் உண்டு - இந்த சில நாட்களும் அதைப் போலொரு அனுபவத்தைத்தான் தந்து விட்டன.

ராட்சச சுழலுக்குப் பின் அரை உயிராய் மீண்டிருக் கிறாள் -

தப்பித்தோம் என்ற நிம்மதி இல்லாத வெறுமை!

வசந்தன் எவ்வளவு இயல்பாய் பேசி தன்னை வழி அனுப்பி விட்டான்? 'உன் ஃபிளைட் டிக்கெட் இதோ யிருக்கு வாஸந்தி - மூணரைக்கு டாக்ஸி ஒன்றை வரச் சொல்லிட்டேன். சாப்பிட்டதும் படுத்து எழுந்துக்கோ - சாமான்கள் அதிகமில்லையே - ஆக நீ 'பாக்' செய்ய ஐந்து நிமிஷம் போதுமே - வேறேதும் உதவி தேவையா?' அவன் கேட்க, நாக்கு கட்டுண்டது போல நின்றிருந் தாள் -

பேசவும் தான் என்னயிருந்தது?



தன்னை அவன் கடத்திய நோக்கம் நல்லபடி நிறை வேறி விட்டது. ஊர் திரும்பி பரணியிடம் நடந்ததை விளக்கும் அவஸ்தையும் இனியில்லை. ஆக கிளம்ப வேண்டியதுதான்.

தன் காரியம் முடிந்த திருப்தியில்

'நீ இனி தேவையில்லை - கிளம்பு' என்றுவிட்டான். சிரங்குள்ள கரடி போல தவ்வித் தாவியபடி இங்கு வந்த பரணியையே சுமுகமாய் பேசி சமாளித்து அனுப்பி விட்டவனல்லவா?

'உன் திட்டங்கள், வரைபடங்கள் நிச்சயம் வேறு யாருக்கேனும் பயன்படும் நமீதா - அதை உரிய இடத்தில் சேர்ப்பது, பயன்படச் செய்வது என் பொறுப்பு - உன் ஒத்துழைப்பு கிடைத்தால் ரொம்ப சந்தோஷப் படுவோம்' என்று நமீதாவையும் சமாதானமாகவே கழட்டி விட்டவன்.

ரோஸலின்ட், ஸில்வியா அம்மையாரின் ஆசிகளை அள்ளிக் கொண்டவன்.

அவனுக்குத் தன்னை விளக்கமோ, விவகாரமோ இன்றி வழியனுப்பி விடுவதா சிரமம்?

சுய பச்சாதாபத்தில் கண்ணீர் பெருகியது - அதற்கு அவ சியமில்லை என்பது தெரிந்தும் அடக்க முடியவில்லை.

இனி ஒருநாளேனும் தனக்கு அவனது வசந்த நினை வின்றிக் கழியுமா? அவன் எதிர்காலத் திட்டங்களில் அமிழ்ந்து போவான் - முதலில் கட்டிடங்களை எழுப்ப, பிறகு வேண்டிய உறுப்பினர்களைச் சேர்க்க, அவர்களை கவனிக்கும் பொறுப்பான வேலையாட்கள், வருமானம் -

அதற்கான வழிகள், புது வியாபாரம் - அதன் உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்கான அலைச்சல் - இதில் கடத்தி வந்த பெண்ணைப் பற்றி அவனுக்கு நினைக்க நேர மேது?

துக்கத்தை மாற்ற ஜன்னல் வழியே பார்த்தாள். நிலப் பரப்பே தெரியவில்லை... மேலும் துக்கம் முண் டியது -

இதே போல அவனும் தன்னைச் சுவடின்றி மறந்துதான் போவான் -

ஆக, தானும் மறக்க முயலுவதுதான் புத்திசாலித்தனம்.

சென்னையில் இறங்கியபோது - வெகு நாளாய் பிரிந்த குடும்பத்தைக் காண்பது போலிருந்தது - அப்பாவை உடனே பார்க்க வேண்டுமென்று தவிப்பு.

அவரைத் தவிர தனக்கு வேறு யாரிருக்கிறார்கள் இவ்வுலகில் என்ற நெஞ்சடைப்பு...

"எக்ஸ்க்யூஸ் மீ மேடம்... நீங்க வாஸந்திதானே?"

விமான நிலையத்தின் வாசலில் கேட்ட குரலில் மெள்ள திரும்பினாள் - கேட்டவரின் கையிலிருந்த அட்டையில் மிஸ். வாஸந்தி என்று எழுதியிருந்தது -

"ஆமா... ஆனா யாரும் என்னை எதிர்பார்க்கலை."

"உங்களை குட் ஷெப்பர்ட் ஹாஸ்டலில் கொண்டு விட வசந்தன் ஸார் டாக்ஸி ஏற்பாடு செய்திருக்கிறார் மேடம்."

நெஞ்சம் இளகி கண்கள் கரித்தன -



ஏனிப்படி வேதனையைக் கூட்டுகிறான்...? பிரிவின் தாபமும் கூடிப் போகுமே. ஆனால் மறுக்க முடியாமல் டாக்ஸியில் ஏறினாள். ஹாஸ்டலில் ஏன் திரும்புவதில் சிறு தாமதம் என்று குடைவார்களோ? யாரிடமும் எதுவும் பேசும் மனநிலை இல்லை - ஆனால் அமுதா கூட ஏதும் கேட்கவில்லை - சற்று துருவலாய் கேட்க -

'அதான் எஸ்.எம்.எஸ். அனுப்பியிருந்தியே - இன்னைக்கு வர்றதாய்?' என்று பதில் வந்தது. ஆக வசந்தன் எதிலும் அலட்சியம் காட்டவில்லை.

பத்திரமாய் வந்து சேர்ந்தது பற்றி - டாக்ஸியை ஏற்பாடு செய்ததற்காய் நன்றி சொல்லி அவனுக்கு தகவல் அனுப்பினாள் - அழைத்து அவன் குரலை மறுபடி கேட்கும் தெம்பில்லை.

மறுநாளே அப்பா இருந்த சிற்றூருக்குக் கிளம்பி விட்டாள் - அங்கு 'வாத்தியார் மகளை'ப் பார்க்கக் கூடும் கூட்டமும், அவர்களின் கேள்விகளையும் சமாளிப்பது சங்கடம்தான் - ஆனால் அவை வசந்தனிடமிருந்து தன் மனதை திசை திருப்பவும் கூடுமே!

அப்பா பஸ் ஸ்டாண்டிற்கே வந்திருந்தார் -

மகளிடம் ஏதோ மாற்றம் தெரிந்ததோ..? கூர்ந்து பார்த்தார் - ஆனால் வழக்கம் போல கேள்விகளில்லை...

ஆனாலும் மனசு கேட்காமல் தான் வேலை நிமித்தம் கோவா போனது பற்றி சொன்னாள்.

"சொல்லிட்டுப் போகணும்டா வாஸு... பாதுகாப்பு கருதி சொல்றேன். என்ன?"

"இனி அப்படியே செய்றேம்ப்பா... இன்னொரு தக வலும் கூட... எனக்கு இப்ப வேலை இல்லை."

அப்பா அதிர்ச்சி என்ன - ஆச்சரியங்கூட காட்ட வில்லை.

வீடு நுழைந்தவர் அலுங்காமல் சொன்னார் -

"பெண்ணுக்கு வேலைங்கறது வாழ்க்கையின் ஒரு அங்கந்தான்டா - முழு வாழ்க்கையில்லை."

புரியாமல் பார்த்தாள் -

"கல்யாணத்தைச் சீக்கிரமாய் நடத்திடலாம்னு இருக் கேன்."

"யார்... யாருக்கு?"

."அதெல்லாம் கடவுள் கச்சிதமாய் முடிச்சுப் போட் டிருப்பார்."

நிம்மதி தேடி வீடு வந்தால் இங்கே புதுக் குழப்ப மல்லவா காத்திருக்கிறது? அப்பாவை எப்படி சமாளிப்பது என்று அயர்ந்து நின்றவளை -

"உள்ளே போம்மா - காபி டிபனெல்லாம் தயாரா யிருக்கு... போய் பேசு."

மீண்டும் விழித்தாள்.

காபி டிபனோடு என்ன பேச? அப்பாக்கு என்ன வாயிற்று?

"முதல்ல முகம் கழுவிக்கோ - கொஞ்சம் வாடித் தெரியறே."



அப்பா இப்படி தன்னிடம் பேசியதே இல்லையே... முகம் கழுவித் துடைத்தவள் உள்ளறைக்குப் போனாள்.

அதுவரை இருந்த குழப்பமெல்லாம் ஒன்றுமே யில்லை என்றாக்கியது உள்ளே அவள் கண்ட காட்சி...

புத்தி குழம்பி விட்டதோ... மாயக் காட்சிகளை உற்பத்தி செய்து ஏனிப்படி தன்னை மயக்குகிறது?

"வா வாஸந்தி - நீ எதையும் கற்பனை செய்யலை.. இது நானேதான் - வேணும்னா பக்கத்தில் வந்து கிள்ளட்டுமா?"

அவன் உதடுகள் ஏளனமாய் மடிந்ததை விழிவிரியப் பார்த்து நின்றாள் -

அப்பாவின் குரல் நீண்டது.

"ரெண்டு பேருக்குமே டிபன் இருக்குடா - சாப்பிடுங்க - யாரும் உங்களைத் தொந்தரவு செய்யாதிருக்கது எம் பொறுப்பு" அப்பா செய்தித்தாளுடன் முன்னறையின் நடுவில் உட்கார்ந்து கொண்டார்.

"என்ன வாஸு? கோவாவில் அந்த வினோத சூழலில் என் வீட்டில் நீ சமைத்து புழுங்கினே - அதே போல இங்கு நானும் ரொம்ப சகஜமாய்தான் உணருகிறேன்."

"நீங்க.. எங்கே.. இங்கே?"

"வந்து ரெண்டு மணி நேரமிருக்கும். மதுரை வரை ஃபிளைட்டில் வந்து, பிறகு கார் ஓட்டியபடி வந்தேன்."

"அட்ரஸ்."

"உன் ஃபிரண்ட் தந்தாங்க."

''என்னிடம் ஏதும்..''

''சொல்ல வேண்டாம்னேன் - இப்படி விழி விரிய சிலையாய் நீ நிற்பதைப் பார்க்கணும்கிற ஆசை.''

''வெளியே ஏதும் கார் இல்லையே?''

''உங்கப்பாவிடம் விவரமெல்லாம் போனிலேயே சொல்லிட்டேன். ஆக அவங்கதான் ஐடியா தந்தாங்க - காரை ஸ்கூலில் நிறுத்திடலாம்னு - மதுரையில் ஒரு நண்பனிடம் வாங்கிய கார் வீட்டின் முன் நின்றால் பல கேள்விகளை சமாளிக்கணும்னாங்க.''

''அத்தனை அவசரமாய் ஏன் இங்க வந்தீங்க?'' விடாது கேட்டாள்.

உனக்குப் புரியவில்லையா என்று சீண்டின அவனது விழிகள்! 'புரிகிறது' என்பது போலவும் 'அதை நீதான் சொல்லேன்' என்பதாகவும் படபடத்தன அவளது கண்கள்!

விஷமமாய் மடிந்தன வசந்தனின் உதடுகள் -

''என் நடத்தைக்காய் உன்னிடம் ஏற்கெனவே நான் மன்னிப்பு கேட்டுட்டேன் வாஸு... ஆனால் நம் வாழ்வில் வசந்தத்தைக் கொண்டு வந்த அந்த அனுபவத்திற்காய் நாம கடவுளுக்கு நன்றியும் சொல்லணும்னு நினைக்கறேன்... ம்ம்?''

என்ன சொல்கிறான்?

தனக்குள்ளும் சலனங்கள்... காதல் புகுந்து விட்டது என்றா?



அதுவரை குழப்பமாய் அவனையேப் பார்த்த விழிகள் சட்டென தழைந்தன - கன்னங்கள் குழைந்தன.

''நீ ஏற்கெனவே ரொம்ப அழகு வாஸு'' அவன் குரல் கொஞ்சியது. ''புரியலையா? வெட்கத்தை ஒரு ஆபரணம் போல அணிந்து கொள்பவர்கள் மிக வசீகரமாகி விடுகிறார்கள் என்று ஒரு கருத்துண்டு... நீ சும்மாவே அழகு... இப்போ...''

நெருங்கியவன் அவள் கைகளைப் பற்றினான்... இருவர் விரல்களும் உணர்ச்சிப் பெருக்கில் நடுங்கின.

அவள் நிமிரவில்லை.

''அம்மாவிடமும் எல்லாம் சொன்னேன் வாஸு.. நம்ம வீடு நிலமெல்லாம் மறுபடி நம் கைக்கு வந்ததிலிருந்து - அவங்க ஆசைப்படி 'இல்லங்களை' ஆரம்பித்து நடத்த, நம் வாழ்வைப் பூரணமாக்க ஒரு அற்புதமான பெண்ணைக் கண்டு பிடிச்சாச்சுன்னு சொன்னேன்... அம்மா திட்டினாங்க.''

வாஸந்தியின் விழிகள் கலவரத்துடன், சொன்னவனை ஏறிட்டன. அவன் முகமெல்லாம் சிரிப்பிருந்தது - ''முதல்ல அவ சம்மதம், நோக்கத்தைக் கேட்டியாடா மடப் பயலேன்னாங்க - அதான் கேட்க வந்துட்டேன்.''

கை விரித்து அவன் சொல்ல, விரிந்த கைகளுக்குள் புகுந்து சாய்ந்து கொண்டாள் - உள்ளம் சொல்லொன்னா நிம்மதியில் தளர்ந்து, விம்மியது.

''என்னால நம்பவே முடியலை.''

''எனக்குந்தான் - உன்னை முதன் முறை பரணியோடு சென்னையில் நகைக் கடை வாசலில் பார்த்ததிலிருந்து எனக்குள் இனம் புரியாத ஒரு சலனம். என்னில் மறுபாதி நீ என்பதான ஒரு துடிப்பு... அதான் கடத்தல், வரம்பு மீறிய பேச்சுன்னு ரொம்ப முட்டாளாய் நடந்து கொண்டேன் வாஸு.. கோவாவின் ஹோட்டல் அறைக்கு நான் ரோஸி மிஸியோடு வந்து - எங்க நிலைமையை பொறுமையாய் எடுத்துச் சொல்லியிருக்கலாமே? எனக்குப் பொறுமை யில்லை. 'காதல் ஒரு வகை போர் முறை'ன்னுவாங்க... எப்படியும் உன்னை அடையணும்... அதுவும் உடனேங் கற தீவிரத்தில் சற்று கரடு முரடாகவே நடந்து கிட்டேன். கட்டுப்பாடில்லாமல் கூட... அந்த முத்தம்..''

கூச்சத்தில் மேலும் அவனை ஒண்டிக் கொண்டாள் -

''நமீதா சொன்னதில் மிரண்டுட்டேன்.''

''அம்மா என்னை நமீதாவோடு ஜோடி சேர்க்கப் பார்த்தாங்க - ஆனா அவளது விருப்பங்கள் வேற.. நல்ல கஸின்ஸ் என்பதைத் தவிர எங்களுக்கிடையே வேறேதுமில்லை.''

வெளியேயிருந்து பார்க்க முடியாதபடி அறையின் ஒரு ஓரத்திற்கு இருவரும் நகர்ந்திருந்தாலும், அந்த சத்தம் இவர்களை எட்டியது.

''மாப்பிள்ளை வந்திருக்காராமில்ல - எங்க கண்ணுல காட்டக் கூடாதா?'' வாசலில் கேட்ட உற்சாகக் குரல் களும், கூட்டத்தை சமாளிக்க அப்பா திணறுவதும் புரிந்தது.



''வா... ஊராருக்கு சின்ன தரிசனம் தந்துட்டு - அப்படியே உங்கப்பாவையும் கூட்டிட்டு ஒரு ட்ரைவ் போகலாம்..''

''சாப்பாடு?''

''இதையெல்லாம் எடுத்துக்கலாம் - காரிலேயே சாப்பிட்டு, பேசி, கல்யாண நாளையும் குறிச்சிட்டுத் திரும்பிடலாம் - என்ன?''

இவளது நெற்றியில் முத்தமிட்டவன் உற்சாகமாய் வெளியேற,

வசந்தனை ஆனந்தமாய் பின் தொடர்ந்தாள் அவள்.

# நேசம் நறுமணமாய்...

1

மாடியிலிருந்து இறங்கிய அகிலா, தன் வீட்டின் வரவேற்பறையை ஒரு நோட்டமிட்டாள் - சோபாவில் சரிந்திருந்த ஒரு பட்டு குஷனைக் கச்சிதப்படுத்தினாள் - ஐம்பது வயதிற்கு அவளது தோற்றமுமே வெகு கச்சிதம்தான். ஊளை சதை வழியாத உடம்பில் உயர்தரப் பருத்திப் பட்டு. கழுத்தில் வைர முகப்பிட்ட தாலி - அதற்குப் பொருந்தும் கம்மல்கள் - கையில் முத்து கோர்க்கப்பட்ட தங்க வளையல்கள் - ரிம்லெஸ் மூக்குக் கண்ணாடி. நரைகள் மறைக்கப்பட்ட கூந்தலை சீராக வெட்டி கிளிப்பிற்குள் அடக்கியிருந்தாள் -

பளபளத்த தன் வீட்டை தனி கர்வத்துடன் பார்த்தவளுக்கு எதுவும் நலுங்காதிருக்க வேணும். உயர்தர நேர்த்தியில். சிறிதும் மாறக்கூடாதென்ற பிடிவாதமுண்டு. படுத்து எழுந்த பத்தாம் நிமிடம் அவளது படுக்கை சீராக்கப்பட்டு விடும். சமையலுக்கு வேலையாள் உள்ளதால் அகிலாவிற்கு இதுதான் வேலை. தவிர வீட்டைக்



கலைத்துப் போட்டு விளையாட இங்கே சிறு குழந்தைகளும் கிடையாதே.

அவள் கணவர் முன்னணி தொழிலதிபர் - இத்தம்பதிகளுக்குத் தோளை மிஞ்சிய இரு மகன்கள் - மூத்தவன் கல்யாண வயதில்.

அகிலாவிற்குமே வெறும் வீட்டை சிங்காரித்து அலுத்துவிட்டது - தளிர் நடைப் பழகியபடி, அத்தனையையும் கலைத்து சிரிக்க பேரப் பிள்ளைகள் வந்தால்தான் வீடு நிறைவாகுமோ என்றொரு சந்தேகம் அவளுக்குள் சமீபமாய்!

தயாரான காலை உணவை வடிவான பீங்கான் பாத்திரங்களில் வைத்தவள், ஒரு ஆப்பிளை நறுக்கி மலரிதழ் போல பரப்பி வைத்தாள்.

"அடடே - இன்னைக்கு பூரிக் கிழங்கோடு முட்டைப் பொரியலா - க்ரேட். ஒரு பிடி பிடிச்சுடறேன்" - என்றபடி வந்தமர்ந்த மூத்தவனை முறுவலுடன் பார்த்தாள்.

எங்கிருந்து திலீபனுக்கு இப்படியான உயரமும் கவர்ச்சியும் அமைந்தன? இவளும் கணவர் ராஜேந்திரனும் சாதாரண தோற்றமுள்ளவர்கள்தான். அகிலாவின் மாமனார் வாட்டசாட்டமானவர், இவள் தாயாரின் முக அம்சம் அலாதி - ஆக அந்த மரபணுக்களைப் பொறுக்கி தன தாக்கிக் கொண்டு பிறந்த பிள்ளை இவன். இவர்களின் சமூகத்தில் இதற்குத் தோதான பெண் அமைவது சுலபமில்லை. சீக்கிரமே தேட ஆரம்பித்தால்தான் சிக்குவாள்!

"இன்னைக்கு சீக்கிரமே ரெடியாகிட்டே திலீப்?"

"சீக்கிரமே ஆபீஸ் போனால்தான் வேலை கொஞ்சமேனும் நடக்குதும்மா - இல்லைன்னா, 'ஹிஹி - சும்மா

உங்களைப் பார்த்துட்டுப் போக வந்தேன்'னு நாலு பேர், 'டொனேஷன்'னு ரெண்டு பேர் வர, மீதி நேரம் தபால் களைப் பார்த்து பதிலளிக்க, பேங்க் வேலைகள்னு நழு விடுதே.."

சாப்பிட்டபடி பேச்சு தொடர்ந்தது -

"லஞ்ச்சிற்கும் நீ இப்பெல்லாம் வீடு வர்றதில்லையே - திலீப்."

குறைபட்டாள் தாய்.

"டிராஃபிக் பயங்கரம்மா - போக, வர முக்கால் மணி நேரம் அவுட். அதான் ஆபீஸ் கான்ட்டீனில் ஒரு ஸான்ட் விச்சோடு முடிச்சுக்கறேன் - கூடவே ஒரு ஆரஞ்சு பழம் - பிறகு காபி."

"உனக்கு பெண்டாட்டி வந்தால்தான் நீ வழிக்கு வருவேடா."

"அதுக்கு இன்னும் மூணு, நாலு வருஷம் போகணும்மா - இப்பவே ஏன் இந்த சின்ன, செல்லப் பையனை பய முறுத்தறீங்க?"

சிரித்தவனின் சீரான பல்வரிசையை பெருமிதமாய் பார்த்தாள் பெற்றவள் - இதற்காகவே பெண் வீட்டார் வரிசையில் நிற்பார்களே!

"யாருடா சின்ன பையன்? உனக்கு வயசு 27 - செல் லந்தான் கொஞ்சம் அதிகமாத் தந்துட்டேன்."

"ஸோ?"

"இப்படி முரண்டு பிடிக்கறே. முன்னேல்லாம் பிஸினஸ் குடும்பங்களில் பசங்களுக்கு 24 வயசிலேயே கல்யாண மாயிடும்."



"அது - சதி!"

"சதின்னா, உடன்கட்டை ஏறுறதுடா."

மகன் தாயின் வேடிக்கைப் பேச்சை ரசித்துச் சிரித்தான்.

"அந்த வயசிலே, இருபது அல்லது பதினெட்டு வயசுப் பெண்ணைக் கல்யாணம் பண்ணி ஆரம்பிக்கும் வாழ்க்கை பரிதாபம்மா - வாழ்க்கைன்னா என்ன, ஏதுன்னு புரிபடுவதற்கு முன் - அதாவது நீச்சல் தெரியாதவனைத் தண்ணீரில் தள்ளுவது போல."

"போடா கோமாளி - தண்ணீரில் விழுந்தால்தானே நீந்தப் பழகலாம்?" கண்களை உருட்டினாள் அகிலா.

"பாவம்மா - அப்பா இன்னுமே தத்தளிச்சிட்டிருக்கார்!"

ஒரு ஆப்பிள் துண்டை மென்றபடி நமட்டமாய் சிரித்தான்.

"ரொம்ப பேசாதே - அப்புறம் கடுமையான பெண் டாட்டி வருவா - உன்னை சமாளிக்கறது போல."

"என்னம்மா - இன்னைக்குக் கல்யாண பேச்சு ஜாஸ்தி யாயிருக்குது?"

"தனியேயிருந்து எனக்கு அலுத்துருச்சுடா... மூணு ஆண்களோடு இருந்து சலிச்சிருச்சு."

"சண்டை போட்டு வாழ்வை சுவாரஸ்யமாக்க மருமகள் வேணுமாக்கும்?"

"நான் ஏன்டா சண்டை போடறேன்? மகளாய் பார்த்துக்குவேன்."

ஆசையும் ஆர்வமுமாய் ஆதங்கப்பட்டாள் அன்னை.

"சாயங்காலம் நான் ஆபீஸிலிருந்து வீடு திரும்பும் போது, அந்த மகள் வந்திருப்பாளா?"

திலீபன் போலி ஆர்வத்துடன் கேட்க, இருவரும் சிரித்தனர்.

''கடையில போயா வாங்கி வர முடியும்? இந்த வீட்டுக்கு ஏற்ற அப்பழுக்கில்லாத பொண்ணு எங்கே பிறந்திருக்காளோ நாமதான் தேடிப் பிடிக்கணும்... சரி - சாயங்காலம் நேரே ஜெஸி வீட்டுக்கு வந்திடு.''

''அங்கே - என்ன?''

''மறந்தாச்சா - நீயும் உங்கப்பாவைப் போல கொஞ்சம்...''

''மண்டுதாம்மா! வரி விவரங்கள், விற்பனை, தொழிலாளர் போனஸ், பிரமோஷன் பிரச்சனை, விஸ்தரிக்க மேலும் நிலம் வாங்கணும்றது போன்ற பொடி பிரச்சனைகளில், ஜெஸி பெரியம்மாவின் வீட்டில், என் கஸின் மல்லிக்கு திருமண நிச்சயதார்த்தம் என்பது மறந்தே போச்சு.''

''சும்மாவாச்சும் என்னைச் சீண்டணும் உனக்கு - டின்னரும் அங்கேதான். நாம கடைசி வரை நிற்கணும்.''

ஜெஸிந்தாவும் அகிலாவும் ஒன்று விட்ட சகோதரிகள் என்றாலும் பாசம் மிகுதி. சென்னையிலேயே இருப்பதால் சளைக்காமல் ஒருவர் மற்றவரைப் போய்ப் பார்த்து, சேர்ந்து சுற்றுவதுண்டு.

ஜெஸி தன் மகள் மல்லிகாவிற்காய் இரண்டு ஆண்டுகளாய் தேடி, பொறுக்கியெடுத்திருந்த மாப்பிள்ளையை இன்றுதான் குடும்பத்தினர் சந்திக்கப் போகிறார்கள் - மாப்பிள்ளைத் தேடல் முடிந்ததுமே, திலீபன் தன் கஸின் மல்லிகாவை போனில் அழைத்து வாழ்த்தியிருந்தான் -

'மாட்டிய ஆளின் பேர் என்னம்மா தங்கச்சி?'

என்று சீண்டவனுக்கு 'பட்'டென பதில் வந்தது -



'மல்லிகா!'

''அடடா... அந்த மல்லிகையிடம் மாட்டியவர் யார்?''

''திருமண பந்தத்தில் மாட்டுவது பெண்கள்தான் திலீபண்ணா - நாங்க எங்க ஊர், உறவு எல்லாவற்றையும் விட்டுட்டு அவங்க வலையில் சிக்கிடறோம். பிறகும் அவங்க போடற சட்ட திட்டங்களுக்கு வாழ்நாளெல்லாம் ஆடி...''

''ஆஹா... யார் பேச்சுக்கு யார் ஆடறாங்கன்றதைப் பார்க்கத்தானே போறேன்! ஒரு அயல் நாட்டு மேதை சொல்றார் -

'ஆண்களைப் போல் பெண்களால் வெற்றி பெற முடியாது -

ஏனெனில் அவர்களுக்கு ஆலோசனை கூற மனைவிகள் இருப்பதில்லை'ன்னு - உங்க ஆலோசனையில் கையை காலைத் தூக்கும் ஆடிப்பாவைகளாய்தானே ஆண்கள் இருக்கணும்?''

''அப்படியெல்லாம் இல்லவே இல்லை - பெண்கள் தான் பா...வம்.''

''பிறகேன் மல்லி கல்யாணம் பண்ணிக்கறே?''

ஒரு கணம் திகைத்தவள் தடுமாறினாள் -

''வந்து... அப்பா அம்மா கல்யாணம் பண்ணிக்கச் சொல்றாங்களே?''

''அதாவது பிறந்த வீட்டிலும் சட்டங்கள், கொடுமையெல்லாம்.. ம்ம்? பா.. வந்தான் நீங்க.''

''ஆமாண்ணா - இப்பவாவது புரிஞ்சுகிட்டியே.'' - போலிப் பெருமூச்சு விட்டாள்.

அம்மாவின் பேச்சு திலீபனை நிகழ்காலத்துக்கு பிடித்து இழுத்தது -

"மல்லிக்குட்டி கல்யாண களை சேர்ந்து இப்ப ரொம்ப க்யூட்டாயிருக்கா - வீட்டோடதான் நிச்சயதார்த்தம்னாலும் ஒரு நூற்றம்பைது பேரேனும் வந்துட மாட்டாங்க?"

"ம்ம்... ஏழு மணிக்குத்தானேம்மா?"

"நான் ஐந்தரைக்கெல்லாம் ஜெஸி வீட்டில் இருப்பேன்.. நீ.."

"ஏழுக்குள் வந்திடறேம்மா."

அங்கு தன் வாழ்வு திசை மாறப் போவது அறியாத திலீபன் உல்லாசமாகவே சொன்னான்.

## 2

'இளமை என்பது இயற்கையின் அற்புத வாய்ப்பு - சிலர் அதை சிறப்பாக பயன்படுத்தி சிறந்த மனிதர்களாகி விடுகின்றனர். சிலர் அதைக் குழப்பி, உபயோகமற்றதாக்கி விடுகின்றனர். மேலும் சிலர் இனி மாறவே முடியாத அளவிற்குக் கடினமாய் உறைந்து விடுகின்றனர்' - என்ற முதுமொழியில் அகிலாவிற்கு உடன்பாடுதான் - ஆனாலும் அந்த இளமையில் நம் வாழ்க்கைக்கென்று வாய்க்கும் துணை அதி முக்கியமென்பதில் அவளுக்கு ஆழ்ந்த நம்பிக்கை! தன் கணவரின் வெற்றிகளுக்கு இவள் அடிக்கடி தன் முதுகையேத் தட்டிக் கொள்ள,

"ஆமாம் அகிலா, நீ என் மனைவியாய் பொறுப்பேற்கலைன்னா நான் கைவண்டி இழுத்திருப்பேன் -



அல்லது வங்கிகளை மாறி மாறி கொள்ளையடிச்சிருப்பேன் - சரிதானே?" என்று புன்னகைப்பார் ராஜேந்திரன்!

அதிலும் தன் ஒன்று விட்ட தங்கை ஜெஸிந்தா, தன் மகளுக்கு மாப்பிள்ளைத் தேடிய தீவிரத்தைக் கண்டவள், தானும் திலீபனுக்கான பெண்ணைத் தேடும் படலத்தை விரைவிலேயே ஆரம்பிக்க முடிவெடுத்து விட்டாள். தன்னளவிற்கு சாமர்த்தியமும் சமர்த்துமுள்ள பெண்ணைக் கண்டு பிடிப்பதென்ன லேசா?!

'பருவம் தப்பிப் பயிர் செய்தால், அறுவடைக்கு

ஆழாக்குப் பயிர் கூட மிஞ்சாது' என்பார்களே இவர்களின் பாட்டி!

கடந்த இரண்டு வருடங்களாய் அந்த சகோதரிகள் சந்தித்த போதெல்லாம் இது தொடர்பான பேச்சேதான் -

'மல்லி, இப்ப வேறு ஒரு கோர்ஸிலும் சேர்ந்து படிக்க ஆரம்பிச்சுட்டா ஹில்டாக்கா' என்பாள் ஜெஸி சோகமாய்.

"அதினாலென்ன? வீட்டில் அவ சும்மாயிராமல் படிக்கறது நல்லதுதானே?"

'வாங்கின டிகிரிகள் போதாதுன்னு ஜெர்மன், ப்ரெஞ்ச் வேற படிச்சிருக்கா. ஆக இவளுக்கு மேல்... அல்லது இவளளவேனும் படித்த பையனாய் வேணுமே."

'அதெல்லாம் இருப்பாங்க.'

'இருக்காங்க - ஆனால் வயசும் கூடிடுதே. அதிகம் படிச்சு, அதற்கேற்ற ஒரு வேலையைத் தேடி செட்டிலாக, பையனுக்கு வயசு முப்பதாயிடுது' - ஜெஸி பெருமூச்செறிந்தாள் -

'அப்படின்னா ஏழெட்டு வயசு வித்தியாசமாகுது - மல்லிக்குப் பரவால்லைன்னால் விடு.'

'அவ ஏதும் சொல்லலை - ஆனா அவ அப்பா வேணாங் கறார் - பின்னால் அது பிரச்சனையாகுமாம்.'

'சரி தேடுவோம் - மல்லியை விட நாலே வயசிற்கு மூத்த, எம்.டெக். படித்த பையன் - சரியா?'

'மல்லிக்கு உலகம் சுற்றி வர ஆசை.'

'அதனால?'

'மல்டி நேஷனல் கம்பெனியில் வேலை பார்க்கறவனாய் இருந்தால் பரவால்லைங்கறா! அவரோடு இவளும் உலகத்தைச் சுற்றிப் பார்த்துடலாமே? மற்றபடி உலக டூருக்கு லட்சக்கணக்கில் செலவாகுமே!'

'அடேங்கப்பா!' புருவம் உயர்த்தி தலையாட்டிய ஹில்டா கேட்டாள் - 'அவ்வளவுதானா... இல்ல பட்டியல் இன்னும் நீளுதா?'

பட்டியல் நீளத்தான் செய்தது!

'நம்ப வீட்டில் எல்லாரும் நல்ல உயரம் அகிலாக்கா, முழுக் கறுப்புமில்லை. ஆக பையன் ஐந்தடி பத்து அங்குலத்திற்குக் குறையக் கூடாது - கோதுமை நிறத்தில் ஸ்மார்ட்டாய்..'

'இப்போ நிறமெல்லாம் பிரச்சனையில்லைன்னு நினைக்கறேன் ஜெஸி. இந்தியாவில் சருமத்தை வெளுப் பாக்கும் க்ரீம்கள் ஆயிரம் கோடிக்கு விற்பனை ஆகு தாம் - அதைப் பயன்படுத்தும் முப்பது சதவிகிதத்தார் - ஆண்கள்!'

'ஆமாமா - 'ஃபேர் அண்ட் ஹான்ட்ஸம்' - சூடான சேல்ஸ். ஆண்களின் சரும நிறம் பற்றி பெண்கள் கவலைப்பட, பையன்களின் எதிர்பார்ப்பும் இப்போ கூடிடுச்சு.'



''என்னவாம்?''

''எல்லாருக்கும் வேலைக்குப் போகும் பெண்தான் தேவை - பெண்களும் இப்போ விமானம் ஓட்டுவதி லிருந்து, உருளைக்கிழங்கு சாகுபடி வரை சளைக்காமல் சகலமும் செய்றாங்களே!''

''பின்னே? ஒன்னரை லட்சம் பெண்கள் ஒவ்வொரு வருஷமும் டாக்டர்ஸ் ஆக, கணினி உலகில் 21 சதவிகிதம் பெண்கள் புகுந்து கலக்கறாங்க. ஆனால் 23 சதவிகிதம் ஆண்கள், தங்களால் தங்களது சட்டைக்கு பொத்தானைத் தைத்துக் கொள்ள முடியலைன்னு குறை படறாங்களாம்!''

''யெஸ் - நானும் 'எக்ஸ்பிரஸ்'ஸில் வந்த அந்தக் கட்டுரையை வாசிச்சேன் - 'பெண்கள் இக்காலத்தில் ரோஜா வண்ண உடைகளில் பெண்மையின் பொலிவோடு இருப்பதில்லை என்ற ரீதியிலான கட்டுரைதானே? மனைவிகளும் கணவர்களின் பிய்ந்த பட்டனைத் தைத்து மெனக்கெடாமல் புது சட்டையே வாங்கித் தந்துடறாங்களாம் - அதுவும் ரோஸ் நிறத்தில்!''

இரு பெண்களுக்கும் வாய் கொள்ளாத சிரிப்பு!

''நம்ப காலத்தில் பெண்ணிற்கு சமையல் தெரியு மான்னு கேட்பாங்க மாப்பிள்ளை வீட்டார். அதற்கும் முன்பெல்லாம் சமையல் அறியாமல் பெண்கள் இருக்க வாய்ப்பில்லை. அன்றைக்கு ஓரளவு படிப்பும், நிறைஞ்ச பண்புமாய் வர்றவ இருந்தாப் போதும். அழகும் இருந்தால் அது புதையல் கிடைத்தது போல..''

''ஆனா இப்போ கல்யாணத்திற்குப் பார்க்கும் பெண், வேலைக்குப் போய் - குறைந்தது மாசம் 15,000

சம்பாதிக்கணும். திருமணமான ஐந்தே வருஷத்தில் தம்பதிகள் ப்ளாட்டும், காரும் வாங்கிடறாங்க. அந்த வீடு கொள்ளாமல் நவீன இயந்திரங்களும் - அந்த 'லோனை' அடைக்க சொச்ச வருஷங்களுக்கு ரெண்டு பேரும் மாடாய் உழைக்க வேண்டிய நிர்பந்தம்.''

''பின்னே - பிள்ளைங்க படிப்பும் இப்பெல்லாம் லேசில்லையே - எல்.கே.ஜி.யே ஆயிரங்களில் ஆரம் பிச்சு பிறகு லட்சங்களில் செலவு... ஆனால் பணத்தோடு, வரும் பெண் ஒடிசலாய், உயரமாய் வெளுப்பாய் இருக் கணும்னு வேறு கேட்கறாங்க பசங்க.. 'ஹிண்டு'வில் வரும் 'வரன் தேவை' பக்கத்தைப் பார்த்தால் - படு சுவாரஸ்யம்.. ஆனால் பல சமயம் எரிச்சலாயும் இருக்கும். எல்லாப் பயலுக்கும் சர்க்கரைச் சிலையாட்டம் பெண் வேணும்னா எப்படின்னு? தவிர மாப்பிள்ளை சார் பார்க்க எப்படியிருப்பாரோ - குணம் சரியோ சரியில்லையோன்னு..' பேசிய அகிலா குரல் தணித்து வினவினாள் -

''டௌரி விஷயமெல்லாம் - அதாவது சீர், பணம் கேட்கும் விஷம் இன்னும் இருக்குதா ஜெஸி?'

'அப்படி ஒரேயடியாய் ஒழிஞ்சு மறைஞ்சிடற விஷய மில்லையே அது. லஞ்சம் போல சமூகத்தை ஊடுருவிய நச்சு. தப்புன்னு தெரிந்தாலும், மற்றவங்க தரலையா - வாங்கலையான்னு சமாதானம் பண்ணிக்கறது.'

'பெண்ணுக்கு முன்னே விரும்பித் தந்ததை இப்போ வியாபாரமாக்கியாச்சு - பைபிளில் மாப்பிள்ளை வீட்டார் தான் பெண்ணிற்கும் அவள் வீட்டாருக்கும் பரிசு தந்து கூட்டிப் போனதாய் வருது.''

'ஆமாமா ரெபெக்காவிற்கு, அவளைப் பெண் பார்க்க வந்தவர் மாப்பிள்ளையின் வீட்டார் சார்பில் நகைகளைப்



போட்டு அழைத்து செல்வார் இல்லையா? - ஆக கல்யாண செலவின் முழி பிதுங்கலும் பெண் வீட்டாருக்கில்லை!'

ஒரு வழியாய் மல்லிகாவின் கல்யாணம் நிச்சயமா னாலும் அகிலா, சீக்கிரமே தன் மகனுக்கான பெண் தேடலை ஆரம்பிக்க முடிவெடுத்தாள். அவர்களில் ஜாத கத்தை வெளியே எடுப்பது என்ற சம்பிரதாயம் இல்லை. உறவினர், நண்பர்களிடம் -

'திலீபனுக்கு ஏற்ற நல்ல பெண்ணாய் இருந்தாச் சொல்லுங்களேன் - அவனுக்கும் 27 ஆயாச்சு.' என்பது தான் ஆரம்பம்.

பிற கல்யாணங்கள் அல்லது வைபவங்களில் தகுந்த பெண்களை 'சும்மா' அறிமுகப்படுத்தி வைப்பார்கள் - இரு பக்க குடும்பங்களும் பேசி, பழகி, ஒத்து வரும் போல பட்டால் ஒருவர் மற்றவரின் வீட்டிற்குப் போவதும் தான் நியமம்.

இனி வைபவங்களில் கண்ணை, கருத்தை நன்கு திறந்து வைக்க வேண்டும் என்ற நினைப்புடன், சற்று அதிக அக்கறை எடுத்தே தானும் உடுத்திக் கொண்டாள் அகிலா. அரைத்த சந்தன நிறப் பட்டில், சிவப்பும் பொன்னுமாய் புட்டாக்கள் இட்ட சேலைக்குப் பொருத்த மாய் சிவப்பு கல் நகைகள்.

கண்ணாடியில் தன்னைக் கண்டு திருப்தி பட்டவள் மகனுக்கும் போன் போட்டாள் -

''திலீப் - சாயங்காலம் ஆறரைக்கெல்லாம் வந்திடேன்.''

''ஞாபகமிருக்கும்மா - இல்லைன்னா மல்லிகா என்னை மன்னிக்க மாட்டாளே.''

"அதில்லைடா. நேரே ஆபீஸிலிருந்து வந்துடாதே. வீட்டுக்கு வந்து குளிச்சுட்டு, ஸ்மார்ட்டான டிரஸ்ஸில் வா."

"நிச்சயதார்த்தம் எனக்கில்லைம்மா" - என்றான் மகன் கறாரும் களைப்புமாக.

"இந்த ஈஸ்டருக்கு எடுத்த க்ரே ஸில்க் ஷர்ட் - ரேமென்ட் நேவி ப்ளூ பான்ட் - சரிதானே?"

"அலட்டறேன்னு கஸின்ஸ் கேலி பண்ணுவாங்க."

"அளவாய் அலட்டறதில் தப்பில்லை. அல்லது இப் போதுள்ள பெண் குட்டிங்க உன்னைக் கழிச்சு கட் டிடுங்க."

தாய் மிரட்ட, திலீபனுக்கு சிரிப்பு குமிழிட்டது.

அம்மா ஆர்ப்பாட்டமாய் தனக்கான பெண்ணைத் தேட ஆரம்பித்து விட்டது புரிந்தது - ஆனால் கடையில் போய் பொருட்களைத் தேர்ந்தெடுப்பது அது லேசில்லையே - ஆக அந்தத் தேடல் லேசில் முடியாது என்ற நம்பிக்கை அவனுக்கு!

கடவுள் நியமித்த நேரம் நெருங்கி விட்டால் எதுவும் வெகு வேகமாய் நடந்து விடும் என்பது இன்னும் புரியாத பருவம் அவனுக்கு... பாவம்!

## 3

"முன்னே எல்லாம் கன்னிப் பெண்கள் ஏன் அழ..காய் இருக்க முயலுவாங்க தெரியுமா?"

"ஏனாம் - சொல்லு."



"மாப்பிள்ளை வீட்டார் வந்து பார்த்ததுமே அசந்து போய் சம்மதிக்கணுமே - என்பதற்காய்..."

"சரி - இப்ப அதில் மாறுதல் உண்டா?"

"பின்னே இந்தப் பையன் வேண்டாம்னு கழிச்சுக் கட்டவே இப்ப நாம பேரழகிகளாக திகழ முயலுகிறோம்."

ஒருத்தி நாடக பாணியில் நீட்டி முழக்க, மற்ற இளசுகள் ஆர்ப்பாட்டமாய் சிரித்தார்கள் - மூடிய கதவின் பின்னே நின்று அந்த பேச்சை, சிரிப்பைக் கேட்க நேர்ந்த அகிலா சற்று அரண்டுதான் விட்டாள்!

இரு மகன்களை மட்டுமே பெற்ற அவளுக்கு இப் போதைய சிறு பெண்களின் போக்கு சற்று அடாவடித் தனமாய் பட்டது.

'இதுகளுக்கு வாயும் வாலும் நீளம்தான்.' என்று மனதிற்குள் பொறுமினாள். இதுபோல ஒரு சுட்டிதான் தனக்கு மருமகளாகப் போகிறாள் என்ற நினைப்பே - அந்த வருங்கால மாமியாரை நெளிய வைத்தது!

ஆனால் ஒன்றேகால் நூற்றாண்டுகளுக்கு முன்பு பெண் கல்விக்காய் குரல் எழுப்பிய வேதநாயகம் பிள்ளையின் கருத்தும் கூட அன்று பலரைச் சங்கடப் படுத்தியது தான் -

'மனைவிகள் அழகாயிருந்தும் ஆண்களில் பலர் ஏன் விலை மாதர்களைத் தேடிப் போகிறார்கள்?

'வீட்டுப் பெண்டாட்டி வேம்பு

நாட்டு பெண்டாட்டி கரும்பு' என்றல்லவா?

கல்வி பயிலாத நம் வீட்டுப் பெண்களுக்குக் கலையோடு பரிச்சயமில்லை. மதுரமாய் பேசிப் பழகத் தெரியவில்லை. இவர்களுக்குக் கல்விக்கான வழியைத் திறந்துவிடுவதே தாசி வீட்டின் கதவை அடைக்கும் வழி.'

என்றவர் சொன்னதில் உண்மை இருந்ததுதானே?

இப்போதோ கல்வி கற்று, வேலையில் அமர்ந்து சம்பாதிக்கும் பெண்கள் வெகு வித்தியாசமாய் உருவாகியிருக்கிறார்கள்!

அறைக் கதவைத் துளியாய் திறந்து பார்வையை உள்ளே விட்டாள். திமிரோ என்று ஐயப்படுமளவிலான தன்னம்பிக்கையும், குறும்பும், வாய் கொள்ளாச் சிரிப்புமாய் பளபளத்த அப்பெண்களின் கூட்டத்தைப் பார்த்தவளுக்குப் புதிராகவும் சற்று பயமாகவும் கூட இருந்தது!

அங்கே ஜெஸி மகள் மல்லிகாவின் நிச்சயதார்த்தத்தைக் காண வந்திருந்த தோழிப் பெண்கள் - வித விதமாய்.

பெண் அலங்காரம் நடந்து கொண்டிருந்த அந்த அறைக்குள் ஆமை போல தலை நீட்ட, 'குப்'பென்ற நறுமணம் வந்து மோதியது. திறந்த கதவைக் கண்டு கொள்ளாமல் உள்ளே ஒரே துள்ளாட்டம்.

''வாங்க சித்தி'' - மணப்பெண் வரவேற்றதால் துணிந்து முழுக்க நுழைந்தாள்.

''ப்யூட்டி பார்லரெல்லாம் போகாமல் இங்கேயே அலங்காரமா?''

''துளசி இருக்க நான் ஏன் அலையணும் சித்தி? அவ அழகுக் கலையில் கில்லாடியாச்சே.''



''மணப் பெண்ணை அலங்கரித்துக் கொண்டிருந்த அந்த பெண் ஒரு கணம் செய்த வேலையை நிறுத்திவிட்டு அகிலாவை நோக்கி முறுவலித்தாள்.

அழகுக் கலைக்கெனவே பிறந்தது போன்ற அழகுப் பெண்தான் அவள்!

மாசு மருவற்ற சருமமும் பளபளப்பான கூந்தலுமாய்.

ஒப்பனை செய்திருந்தாளா என்று பார்ப்பவரை சற்று யோசிக்க வைத்த முகம் - அவள் பெயரும் கூட வித்தியாசந்தான்.

துளசியாமே!

மணப்பெண்ணிற்கு துளசி செய்து கொண்டிருந்த அலங்காரத்திலும் ஆர்ப்பாட்டமில்லை.

மல்லிகாவின் முகத்திற்கு ஏற்ற கூந்தல் அலங்காரத்தோடு, முகத்தில் மிரட்டலான நிறங்களை அள்ளி அப்பாத அளவான ஒப்பனை!

மற்ற பெண்கள் பேசி 'கிளுகிளு'வென சிரிக்க, துளசி காரியத்திலேயே கண்ணாய் இருந்தாள்.

மற்ற அலங்காரம் முடிய, கட்டிலில் திறந்து வைக்கப் பட்டிருந்த நகைப் பெட்டிகளை பார்வையிட்ட துளசி -

"இப்போ நீ கட்டியிருக்கிற மயில்நிறப் பட்டிற்கு தனித் தங்க நகைகள் பொருந்தும் மல்லி - நிச்சயத்திற்கு மாப்பிள்ளை வீட்டார் தரப் போற சேலையின் நிறமென்ன?" கேட்டாள்.

"மெரூன் - அதில் தங்க இழைகளோடு கிரிஸ்டல்கள் பதிச்சிருக்குது. தைப்பதற்காய் ரவிக்கையை எங்கிட்ட முன்னமே தந்துட்டதால தெரியும்."

''அப்படீன்னா அந்தப் புடவைக்கு இந்த ரூபி செட், கூடவே சில வெள்ளைக் கல் பதித்த நகைகளும் - சரிதானே?''

முடிவு செய்தவள், மற்ற நகைகளை அவற்றிற்கான பெட்டியுள் வைத்து, அலமாரியுள் வைத்துப் பூட்டி, சாவியை அருகிலிருந்த அகிலாவிடம் தந்தாள் -

"போட வேண்டிய இந்த நகைகளையும் உங்க கவனிப்பி லேயே வச்சுக்கோங்க ஆன்ட்டி'' என்றவள் கலை உணர் வுடன் நகைகளை தோழிக்கு அணிவிக்கலானாள். அதைக் கண் எடுக்காமல் கவனித்த அகிலாவின் கண்கள் துளசியின் நகைகளையும் ஆராய்ந்தன -

கழுத்தில் மெல்லிய சரம் -

காதுகளில் ஒற்றை முத்துக் கம்மல்கள்;

வழவழத்த கரங்களில் மோதிச் சிணுங்காத ஒற்றை வளையல். இலைப்பச்சையில் ஆங்காங்கே 'சீக்வென்ஸ்' பளபளப்பைப் பதித்த ஜார்ஜெட் புடவைதான்...

எளிய குடும்பத்துப் பெண் போலும்.

இருந்தும் எத்தனை வளப்பமான தேகம், தேஜஸான முகம்?

''உன் புடவையில் இருப்பது லேஸி - டெய்ஸி பூத்தையல் இல்லையா?'' மூத்தவள் துளசியிடம் பேச்சு தந்தாள்.

''ஆமாங்க ஆன்ட்டி - நானே செய்து சீக்வென்ஸும் வச்சேன்.''



''அழகான வேலைப்பாடு.''

''தாங்க்ஸ்.''

அந்நேரம் ஜெஸிந்தா - மணப் பெண்ணின் தாய் - பரபரப்பாய் அறைக்குள் வந்தாள்.

''அகிலா நீ இங்கதான் இருக்கியா - நல்லதாப் போச்சு பொறுப்பாய் பார்த்துடுவே.''

''டைம் ஆச்சு. மாப்பிள்ளை வீட்டாரை இன்னும் காணலையே?''

''அவங்க வீட்டிலேருந்து கிளம்பியாச்சாம் - சென்னை டிராஃபிக்கில் நீந்தி கரை சேருவது லேசா? நல்ல வேளை துளசி இங்கே இருக்கறதால், மல்லிகா ப்யூட்டி பார்லருக்கு ஓட நேரலை - பெண்ணும் கிளம்பியிருந்தால் நமக்கு இங்கே டபுள் - டென்ஷன்!''

''உண்மைதான் - இப்பெல்லாம் கல்யாணத்திற்காய் சர்ச்சிற்கு நேரத்துக்கு போனோம்னு வை. பாட்டுத் தாளைக் கொண்டு விசிறிட்டு, அண்ணாந்து பூ அலங் காரங்களைப் பார்த்தபடி நாம கால் மணி நேரமேனும் காத்திருக்க வேண்டியதாயிடுது - விவரம் கேட்டால் பொண்ணு ப்யூட்டி பார்லரிலேருந்து வந்துட்டே இருக் கான்றாங்க.''

''அகிலா உன் கல்யாணத்தன்று பெரியப்பா, அதான் உங்கப்பா, உனக்கு விட்ட 'டோஸ்' இன்னும் எனக்கு ஞாபகமிருக்குது.''

அகிலாவின் முகத்தில் இளமுறுவல் -

''ம்ம்... அப்பா லேசில் யாரையும் திட்ட மாட்டார்தான். ஆனால் நேரத்தை வீணடிப்பது அவரால் பொறுத்துக்கவே

முடியாதது - எங் கல்யாணம் சாயங்காலம் ஐந்து மணிக்கு. ஆக மதியம் ரெண்டரைக்கு சாப்பிட்டதும், சற்று படுத்து கண்ணை மூடினேன் - என் அறைக்குள் எட்டிப் பார்த்த அப்பாக்குத் தாளலை -

'கல்யாணம் ஐந்துக்குத்தான். ஆனால் நாலுக்கு இங்கே மாப்பிள்ளை வீட்டார் வந்திடுவாங்க - அப்போ நீ தயாராய் இருக்க வேண்டாமா? ஆக மேக் - அப் முடிச்சு, கல்யாண சேலையும் உடுத்தி வேணுமானால் படுத்துக்கோ அகி - ப்யூட்டி - ஸ்லீப்பினால் நீ ப்ரெஷ்ஷாய் தெரிவதை விட, மணமகளாய் சரியான நேரத்திற்கு கோயிலிற்குப் போய் நிற்பது முக்கியம் - உன், நம்ப அழைப்பை மதித்து நேரத்திற்கு வருபவர்களின் எரிச்சலை வாங்கிக்க வேணாம்னு' பொரிஞ்சு தள்ளிட்டார்.''

''அதுவும் உண்மைதானே? அன்றிலிருந்து நானுங் கூட நேரம் தவறாதிருக்க முயற்சித்திருக்கேன். சமீபமாய் ஒரு பிரபல நடிகை அவருக்கான நிகழ்ச்சிக்கு நேரம் கழித்து வந்துவிட்டு,

''நான் மன்னிப்பு கேட்கப் போறதில்லை. ஏன்னா நான் என் வீட்டை கவனித்து விட்டு, இரு பெண் குழந்தை களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துட்டுதான் வர முடியும்னு' அலட்டினதை வாசித்து எனக்கு மகா எரிச்சல் - அவங்களுக்காய் வந்து காத்திருந்தவங்களுக்குக் குடும் பமோ, பிள்ளைக் குட்டிகளோ இல்லையா - என்ன..?''

''ரைட் - நாம நடத்தும் ஒரு நிகழ்ச்சிக்குக் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து காத்திருப்பவர்கள் ஐம்பது பேர்தான் என்றாலும் நாம பத்தே நிமிஷம் தாமதமாய் நிகழ்ச்சியை



ஆரம்பித்தோமென்றாலும் 50 x 10 - அதாவது மொத்தமாய் ஐநூறு நிமிஷங்களை வீணடிக்கிறோம் - அதாவது..''

''பத்து மணி நேரம் வேஸ்ட்'' என்றாள் இடை புகுந்த துளசியும்,

''நம் நேரத்தையே வீணடிப்பது தப்பு எனும்போது பிறரது நேரத்தை வீணாக்க நமக்கு உரிமையே கிடை யாதுதான் - ஆன்ட்டி - மல்லியைப் பாருங்க - எல்லாம் சரியாயிருக்கா?''

மணப்பெண்ணின் புடவை மடிப்பை நேர்த்தியாய் அடுக்கியபடி கேட்டவளை வாஞ்சையுடன் பார்த்தாள் ஜெஸிந்தா.

''எல்லாம் கச்சிதம்தான் - மாப்பிள்ளை வீட்டார் வந் ததும் பரிமாற ஜூஸ் தயாரான்னு பார்க்கணும்'' - ஜெஸிந்தா விலக, அவளைத் தொடர்ந்த அகிலா விசாரித்தாள் -

''யாரிந்த துளசிப் பொண்ணு?''

''அது.. 'ஆரோக்யா ஹாஸ்பிடல்'லின் டாக்டர். வேதன்பு தெரியுமில்லை? அவர் வீட்டுப் பொண்ணு.''

அகிலாவின் உள்ளே குபீரென ஒரு மலர்ச்சி!

ஆர்ப்பாட்டமில்லாத பேச்சு, அலட்டலில்லாத அழகு, பொறுப்பு, திறமை, அழகு, குணம் என்று எல்லாமுமாய் திரண்ட இந்தப் பெண் பெரிய இடத்தையும் சேர்ந்தவளா?

ஆக, அந்தப் பட்டியலில் 'எளிமை' என்பதையும் சேர்த்துக் கொண்ட அகிலா, தேடப் புறப்படும் முன்னரே வேண்டிய மூலிகை கைக்கு அகப்பட்டது போல அகமகிழ்ந்து போனாள்...!

# 4

அகிலா அதற்குப் பின் இருந்தது பரவச நிலையில் - தான்!

மல்லிகாவின் நிச்சயதார்த்தத்திற்கு வருபவர்களிடம் எல்லாம் -

'தனக்கு ஈடான, தோதான குடும்பத்தில் தங்கமான பெண் உண்டா?' என்று விசாரிக்காமல், கண்களால் துளசியையே விழுங்கிக் கொண்டிருந்தாள் -

பார்க்க சலிக்காத அழகேதான்!

பலரை சற்று நேரம் உற்றுப் பார்த்தால் அவர்களது குறைகள் வெளிப்படும் - இங்கேயோ துளசியின் மிருதுவான பேச்சும் நடையும் நளினமும் பழகும் பாங்கும் காணக் காண இனித்தன!

அதிலும் வைபவத்தின் ஜெப நேரத்திலும் மற்ற இளம் பெண்கள் கிசுகிசுப்பாய் பேசிச் சிரிக்க, துளசி அமைதியாய் கண் மூடி கைகூப்பியிருந்த விதம் மனதிற்கு இதமாயிருந்தது.

மணமக்களுக்கு மத போதகர் அறிவுறுத்திப் பேசிய போதும் கருத்தாய் கவனித்திருந்தாள்.

அந்த போதகர் சிரிக்க வைத்தே, சிந்திக்கவும் செய்ய வல்லவராயிருந்தார் -

''வரன் தேடித்தரும் ஒரு அலுவலகத்திற்கு ஒரு இளைஞன் வந்தான் -

'எப்படிப்பட்ட பெண்ணை எதிர்பார்க்கறீங்க தம்பி?'ன்னு கேட்கப்பட, இளைஞன் சொல்றான் -



'பார்க்க அம்சமாயிருக்கணும் - கலகலப்பாயும் இருக்கணும் அருமையாய் பாடணும், நடனத்தில் தேர்ச்சி அவசியம். விளையாட்டு, சினிமா, அரசியல், பொது அறிவுன்னு நாலு விஷயமும் அறிந்தவளால்தான் எனக்கு நல்ல துணையாய் இருக்கக் கூடும். ஆனால் எனக்கு வேலை பளு அதிகமான நாட்களில், அவ தொல்லை தராமல் அமைதியாய் இருக்கணும் - அது முக்கியம்' என்று அந்த இளைஞனின் பட்டியல் நீள, ஏஜென்ஸி ஆள் குறுக்கிட்டு,

'அட்ரஸ் மாறி வந்துட்டீங்க தம்பி - உங்களுக்குத் தேவையானது ஒரு டி.வி. அதில் லேட்டஸ்ட் ரகங்கள் எதிர் கடையில் கிடைக்கும் போய் பாருங்க'ன்னு அனுப்பி வச்சிட்டாராம்.''

கூடியிருந்தவர்கள் சிரிக்க பாஸ்டரின் அறிவுரை தொடர்ந்தது -

''இன்றுள்ள பையன்களோடு, பெண்களுக்கும் அதிக எதிர்பார்ப்புகள். மிதமிஞ்சிய கற்பனைகளோடு தங்களின் வாழ்க்கைத் துணையைத் தேடுபவர்களுக்கு மிஞ்சறது என்ன? ஏமாற்றந்தான். ஓரளவு பொருத்தம் அவசியந்தான். அதோடு மனசு நிரம்ப அன்பும் - அதாவது ஒருவருக்கு ஒருவர் விட்டுத் தரும், ஆனால் தன்னவரை பிறரிடம் விட்டுத் தராத - அன்போடு, ஆண்டவனை நம்பி ஆரம்பிக்கும் வாழ்வு அம்சமாய் அமையும். வெறுமே - இன்ன சம்பளத்தில் பெரிய கம்பெனியில் வேலை, அசத்தும் அழகு, என்னை மிஞ்சிய அந்தஸ்து, குடும்ப கௌரவம் - கூடவே ஜாதி - என்ற விவரங்களை மட்டும் அலசினால் அது பலமான அடிப்படை கிடையாது.

ஆண்டவர் பாதம் பணிந்து அன்போடு கை கோர்க்க வேணும்.''

போதகரின் பிரசங்கம் முடிந்ததும், அகிலாவின் அருகே அவசரமாய் வந்த ஒரு அஜந்தா கொண்டை அம்மணி,

''ஹிஹி... நீங்க அகிலா ராஜேந்திரன்தானே - நாம சந்திச்சதில்லைன்னாலும் உங்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கேன் - உங்க மூத்த மகனும் வந்திருக்காரில்லையா - எங்கே?''

என்று விசாரிக்க, இவள் கண்டே கொள்ளவில்லை.

கல்யாண வயதில் பெண் இருப்பவர்கள்தான் இப்படி விசாரிப்பார்கள் என்று தெரிந்தும் நழுவினாள் -

அகிலா தேடிய பெண்தான் சிக்கியாயிற்றே!

அத்தனை பெண்களிலும் நிலவாய் நின்ற அழகு, தெளிந்த பண்பும், படிப்பு, நாகரீகமான பேச்சு முக்கியமாய் பெரிய குடும்பம் - அதற்கும் மகுடம் வைத்தது போல அந்த எளிமை... அடடா!

துளசியையே பார்த்திருந்தவள் அந்த இளம் மேனியில் மின்னிய புது ஆபரணத்தையும் மிகப் பெருமையோடு ரசித்தாள் - ஏனெனில் அது அகிலாவினுடைய நகை செட்!

தன் ஒன்றுவிட்ட அக்கா மகளுக்கேனும் தான் புதிதாய் வாங்கியிருந்த நகைகளைப் போட்டு ரசிக்கலாம் என்று தான் அகிலா தன் நகைகளையும் எடுத்து வந்திருந்தாள் - ஆனால் மணப்பெண் மல்லிகா தேவைப்பட்டதைப்



பொருத்தமாய் ஏற்கெனவே ஒன்றுக்கு இரண்டாய் வாங்கி யிருக்க, இந்த சித்தி சுமந்து வந்த நகைகளுக்குத் தேவையில்லை.

தனக்கு இரண்டுமே பையன்களாய் பிறந்ததில் அகிலா விற்கு குறைதான், புது ரக நகைகளை இவள் பார்த்து, வாங்க ஆசைப்பட்டால் கணவர் முகஞ் சுளிப்பார் -

'நமக்கென்ன பெண் குழந்தைகளா இருக்காங்க அகி? இத்தனை தங்கம் எதற்கு சேர்க்கறே? இருப்பதையே வேணுமானால் விற்று இல்லை அழித்து புதுசாய் வாங்கிக்கோ' - என்றபடி.

'ஏன் - வாங்கினால் வரும் மருமகளுக்குத் தரலாம்ல?'

'இந்த ஹைதர் - அலி மாடல்ஸ் எல்லாம் நாங்க போட் டுக்கறதா?'ன்னு அந்த சின்னப் பொண்ணுங்க அலட்டு வாங்களே?' சீண்டுவார்.

'தரமான பொருட்கள் எப்போதும் ஒதுக்கப்படுவதில்லை' என்று வீம்புப் பேசியவளுக்கு, இன்றும் தன் நகைகள் உபயோகப் படாததில் வருத்தம்தான் - ஆனால் அதன் ஊடாய் மின்னலாய் அப்புது திட்டம் மின்ன, துளசியிடம் கெஞ்சலாய் கேட்டாள் -

''ஏம்மா, ஆன்ட்டிக்கு ஒரு உதவி செய்றியா?''

மணப்பெண் மறுசேலை கட்ட, கழட்டி வீசியிருந்த பட்டை மடித்துக் கொண்டிருந்த துளசி, புன்னகையுடன் நிமிர்ந்தாள் -

''சொல்லுங்க ஆன்ட்டி.''

''இது என்னுடைய நகைகள் - இந்த 'செட்'டை கொஞ்சம் போட்டுக் காட்டேன்.''

''நானா?''

''புது ரக உடை, நகை அலங்காரங்களை மாடல்கள் போட்டு வலம் வர்றது போல இந்த வைபவத்தில் நீ இதைப் போட்டால்...'' - கதையை எப்படி நகர்த்துவது என்று சற்று விழித்த அகிலா, சமாளித்துத் தொடர்ந்தாள் -

''இதை அமெரிக்காவில் இருக்கும் என் தம்பி மகளுக் குன்னு வாங்கினேன். ஆக அவ எப்ப போட்டு நான் எப்படி பாக்கறது. என் ஆசைக்கு, இதை நீ போட்டால்... கண்ணாரப் பார்த்துக்குவேன்.''

''ஷூயர் ஆன்ட்டி.'' - கவனமாய் தன் கழுத்து, காதின் சிறு நகைகளைக் கழற்றிய இளையவள், முத்தும் ஸிர்கான் கற்களுமாய் கலந்து கட்டிய அப்பளபளப்பான, நகை களை அணிய, அகிலாவின் விழிகளும் பளபளத்தன!

''அடடே.. நீ போட, இந்த நகையின் அழகு கூடிடுச் சும்மா, துளசி'' முறுவலுடன் போட்ட நகைகளை கழட்ட, துளசி முயல,

''நோ, நோ - ஃபங்ஷன் முடியும்வரையாவது, நகைகளைப் போட்டிரும்மா'' - என்றபடி துளசி கழட்டிய சிறு நகை களை எடுத்து தன் கைப்பையுள் இட்டு மூடிய அகிலா, அங்கிருந்து அவசரமாய் நழுவியும் விட்டாள்!

அந்த இளம் பெண் தன் நகைகளில் உலா வந்ததைப் பெருமிதமாய் பார்த்து பூரித்தவளுக்கு, துளசியைக் கண் எடுக்காது பார்த்திருக்க - அது ஒரு சாக்காகவும் போனது!

ஆனால் மகன் திலீபனை இன்னும் காணவில்லையே என்ற குறை மட்டும் உள்ளூரக் குறுகுறுத்தது -



மார்க்கெட்டிங்கில் ஒரு முக்கிய நபர் அன்று அலஹாபாதிலிருந்து வருவதால் கணவர் ஒரு வேளை தான் வர முடியாது போகலாம் என்று சொல்ல,

''சரி - திலீபையாவது அனுப்பி வைங்க' - என்று அதட்டி யிருந்தாள் - 'நாம் உற்பத்தி செய்பவற்றை வாங்குபவர் களை சந்திப்பது பிஸினஸிற்கு மகா அவசியம்' என்பவர் இன்றும் மகனைத் தன்னுடன் இருத்திக் கொண்டாரோ? ஆற்றாமல் மகனின் 'செல்' எண்களை அழுத்தினால் அது 'ஸ்விச்ட் ஆஃப்' என்று அறிவித்தது!

'இந்த முட்டாப் பயலாவது அவரிடம் எடுத்துச் சொல் லிட்டு வந்து சேர வேண்டாமா?' என்று சலித்தவளின் கண்களில் 'திடும்'மென திலீபன் சிக்கினான்.

வாசல்புறமாய் நின்றவனை, எழும்பி கைகாட்டி அழைத்தவள், தான் அதுவரை பாதுகாத்து வைத்திருந்த பக்கத்து இருக்கையில் அவனை இருத்தி, அவசரமாய் கிசுகிசுத்தாள் -

''திலீப், என் இடது பக்கமாய் நாலாவது வரிசையில் முதலாவதாய் உட்கார்ந்திருக்கும் பெண்ணைப் பார்த் துக்கோ... பிடிச்சிருக்கான்னு பிறகு சொல்லு.''

ஒரு நிமிஷம் சும்மாயிருந்தவனின் கண்கள் சிறு புருவ சுருக்கலுடன், தாய் குறிப்பிட்ட இடத்தை, நபரைத் தேடிப் பிடித்து நிலை குத்தின...

பிறகு சற்று பரபரப்பாகி விரிந்தன.

'இவளா?' - என்ற பாவனையில் மலர்ந்தது அவன் முகம்.

கூடவே 'இது எப்படி சாத்தியம்?' என்ற வியப்பும் அவன் நெஞ்சிலும் முகத்திலுமாய் நிரம்பி வடிந்தன...!

## 5

Y.W.C.A.வின் பெண்கள் கருத்தரங்கம் அன்று வெகு ஜரூராய் நடந்து கொண்டிருந்தது -

'விவாகரத்துகள் அதிகமாவது ஏன்?' - என்பதை ஆளாளுக்கு பல்வேறு வயதுப் பெண்கள் விவாதித்தார்கள் -

''விவாகரத்து வரைப் போவானேன்? இப்போதைய பிள்ளைங்க கல்யாண பந்தத்திற்குள்ளேயே அடைபட்ட மாட்டேன்றாங்க - பிறகில்லை விவகாரமும் விவாகரத்தும்?''

''நீ சொல்றது ரொம்ப சரி, மரகதம். எம்மகள் கல்யாணப் பேச்செடுத்தாலே எரிஞ்சு விழறா - ரெண்டு நல்ல வரன் வந்திருக்குது - ஒன்னைத் தேர்ந்தெடுன்னா மேலும் ரெண்டு வருஷம் போகட்டும் - என் வேலை நிரந்தரமான பிறகுதான் அதைப் பற்றி யோசிக்கணும்றா... எனக்கு பயம்மா இருக்குது'' - பெருமூச்செறிந்தார் ஒரு தாய்.

''ஐயோ எங்க வீட்டிலேயும் இதே கதைதான் - சம்பளம் இன்னும் கூடின பிறகுதான் சம்சார பாரத்தை என்னால் சுமக்க முடியும் - பிறகு பார்க்கலாம்றான் - இப்பவே வயசு முப்பதாச்சுன்றதால பெத்த வயிறில் கலக்கந்தான்.''

அப்போதுதான் ஓய்வு பெற்றிருந்த ஒரு பிரபல பள்ளியின் தலைமையாசிரியையான பங்கஜம் - இந்



நாளில் இதெல்லாம் சகஜம் - என்ற ஞானத்தோடு தலையசைத்தார்.

''உங்களுக்கு ஒட்டகச்சிவிங்கி பற்றிய ஒரு விஷயம் தெரியும்?''

''அதென்ன கதை - பங்கஜம் மேடம்?''

''அதை கதைன்னு சொல்ல முடியாது. நிஜ நடப்பு தான். அதாவது ஒட்டகச்சிவிங்கியின் குட்டி பிறக்கும் போது பத்தடி உயரத்திலிருந்து விழும். கால்களைச் சுருட்டியபடி ஒரு பந்து போல பூமியில் விழும் அந்தக் குட்டியை அதன் தாய் என்ன செய்யும் தெரியுமா?''

''நக்கிச் சுத்தம் செய்யுமாயிருக்கும்.''

''கொஞ்சுமோ?''

இரு பெண்கள் கேட்க, மற்ற பத்து, பதினைந்து பெண்கள் ஆர்வமாய் கவனித்திருந்தனர் - இளம் பெண்களுக்கான கிளப் என்ற பெயரிருந்தாலும் கூடியிருந்தவர்கள் வயசு கூடினவர்களே! ஆக அந்த வயதிற்குரிய பிரச்சனைதான் அங்கு அலசப்பட்டதும்.

''இரண்டுமில்லை. குட்டிக்கு ஓங்கி ஒரு உதை விடுமாம். அந்த பலத்த உதையில் தள்ளிப் போய் விழும் குட்டி, பின் தடுமாறி எழுந்து நிற்குமாம்..''

''பாவமே... பிறந்ததுமே அதிர்ச்சியா? - மேலும் ஒரு உதை விழுமோன்ற அச்சத்தில் எழுந்திடும் போல..''

''ரைட் - அல்லது குட்டி எழுந்து ஓடும் வரை தாய் உதைக்கும்! படுத்தே கிடந்தால் கொடிய காட்டில் அந்தக் குட்டி எப்படி பிழைக்கும்?''

''ஆக அது அன்பின் உதை! தன் குட்டி, கொடிய காட்டில் மற்ற விலங்குகளுக்கு இரையாகி அழிந்து விடக் கூடாதே என்ற பாசப் பதைப்பு?''

''நிச்சயமாய். ஆக நாமும் நம் பிள்ளைகளிடம் கொஞ்சம் கண்டிப்பு காட்டறதில் தப்பில்லை. ஒரு சுகமானப் பாசக் கூட்டினுள் முடங்கிக் கிடக்கும் நம்ப பிள்ளைங்க கை நிரம்ப சம்பாதித்தாலும், தங்களுக்குன்னு ஒரு குடும்பத்தை அமைக்கத் தயங்கறாங்க. ஒரு புதுத் துணையுடன் வாழ்வில் இணைந்து ஒரு கூடும் அமைப்ப தென்பது ஒரு சவால்தானே? அதை எதிர் கொள்ள சோம்பல்... ஆனால் திருமணத்தைத் தள்ளிப் போடப் போட, மனமும் குணமும் முதிர்ந்து, அவங்களுக்குத் தொல்லைகள் அதிகரிக்குமே தவிர, லேசாகாது..!''

''உண்மைதான் - குடும்பப் பொறுப்பை ஏற்க, சுமக்க அச்சம். முன்பு விவரம் முழுசாய் புரிபடும் முன்னமே பிள்ளைகள் குடும்பஸ்தராகி, ஓரிரு பிள்ளைகள் பெத்திடு வாங்க..!''

''அதையும் முழுக்க சரி என முடியாது - ஓரளவு பக்குவம் தேவை - ஆனால் முதிர்ந்து இறுகவும் விட்டுடக் கூடாது நாம..''

கலகலவென்று சிரித்தபடி பெண்கள் கலைந்த, அன்றைய உரையாடலுக்குப் பின்புதான் அகிலா தீவிர மாய் பெண் தேட நிச்சயித்தது! ஆனால் உடனே தனக்கு ஏற்றது போல, தனக்கென்றே உருவாக்கினது போல ஒரு பெண் சிக்குவாள் என்று எதிர்பார்த்தாளில்லை! அதையும் விட பேராச்சர்யம் -



தாயின் குறிப்புணர்ந்த பின்பும் மகன் திலீபன் சிடுசிடுக் காமல் சிங்காரமாய் சிரித்ததுதான்!

''என்னம்மா... வந்த இடத்தில் இது புது இம்சை?'' என்று விலாங்கு மீனாய் நழுவாமல், தாய் விரித்த வலை யில் சமர்த்தாய் இருந்தானே?!

அவ்வப்போது ஓரக்கண்ணால் மகனை நோட்ட மிட்டவளுக்கு மேலும் ஆச்சரியம் - அவனும் ஓரப் பார்வையால் அந்த துளசிப் பெண்ணை ரசித்திருந்தது தான்!

திலீபனுக்கே தன்னை நினைத்து வியப்புதான் - காதல் கதைகளை எப்போதேனும் வாசித்தால், சினிமாவாகப் பார்த்தால் -

'ஸில்லி' - என்று தோள் குலுக்கும் தானா இது என்று!

இந்த நிச்சயதார்த்த வைபவத்திற்கு அவன் அரை மணி நேரம் முன்னதாகவே தான் வந்திருந்தான். வாசலில் நின்ற இளைய உறவு வகைகள் பதட்டமும் பரவசமுமாய் ஏதோ பேச இவனுக்கும் சுவாரஸ்யம் தட்டியது.

''என்னடா விஷயம்? எல்லாருக்கும் எல்லாப் பல்லும் தெரியுது?''

''ம்ம்? ஒரு பச்சைக்கிளிதான் விஷயம்!'' - விஷமமாய் வந்தது பதில்.

''அல்லித் தண்டென்றும் சொல்லலாம்.''

''முல்லைக் கொடிப்பா.''

''பச்சை பெயின்ட் அடிச்ச பென்ஸ்.''

''ச்சேச்ச... யாரப் பற்றிடா இந்தக் கவிதை உளற லெல்லாம்?''

''மல்லிகாவின் ப்ரெண்டாம். அந்த பச்சைத் தேவதையைப் பார்த்தால் நீயும்தான் உளறுவே.''

''நோ சான்ஸ்! முதலில் நான் மல்லிகாவிடம் அட் டென்டன்ஸ் தந்துட்டு வந்துடறேன் - இல்லைன்னா திட்டு விழும்.''

''ஹா... பச்சைக் கிளியைப் பார்க்க பறக்கறார் ஐயா!''

''ஸில்லி'' என்று புருவச் சுருக்கலுடன் விலகியவனை அந்த சந்தர்ப்பம் தேடியே வந்தது!

ஜெஸி பெரியம்மாவின் வீட்டு கார் டிரைவர் குழந்தை போல ஒரு மலர் கொத்தை ஏந்தியபடி,

''தம்பி - இதை நம்ப மல்லி பாப்பா ரூமில் தந்துட றீங்களா?'' கேட்டார் -

''நீங்களே கொடுத்திருங்க வேலு - அறைக் கதவு வேற மூடியிருக்குது..'' தயங்கினான் திலீபன்.

''கார் வாசலில் நிற்குது தம்பி - ஓரமாய் விடணும்..''

''சரி - கொண்டாங்க.''

நீண்ட தண்டுடனான அந்த கிளாடியோலா மலர் கொத்தை வாங்கிக் கொண்டு, மூடிய அறையைத் தட்டுவதா வேண்டாமா என்ற யோசனையோடு வாசலில் அவன் நிற்க, மாயம் போல கதவு விரிந்தது!



சிறு அதிர்வுடன் இவன் நிமிர, கதவை அடைத்தாற் போல நின்றிருந்தாள் ஒரு இளம் பெண் - பச்சைப் புடவையில் மிக நளினமான ஒரு ஓவியம் போல...

ஒருவேளை இவள்தான் இங்குள்ள இளைஞர்களை கிறுகிறுக்க வைத்தவளோ?

சாத்தியம்தான் - சட்டமிடப்பட்ட அற்புத ஓவியம் போலத்தான் இருந்தது அவளது தோற்றம்.

அவளது பச்சரிசிப் பற்களுக்கு இடையே சில 'பின்'கள் செருகப் பட்டிருந்தன. வெளியே மலர்களோடு திகைத்து நின்றவனைக் கேள்வியோடு ஏறிட்டன அவளது விழிகள்.

கண்கள் கூட இப்படி பேசுமா என்ற அதிசயித்தவனின் கையிலிருந்து மலர் கொத்து நழுவியது.

உருவி சிதறிய சில மலர்களை எடுக்க இவன் பதறிக் குனிய, அவளும் குனிந்து அவனுக்கு உதவியதோடல் லாமல் அவனிடமிருந்த மொத்த மலர்களையும் லாவக மாய் வாங்கியும் கொண்டாள். ஒரு ஆணின் கையில் வீறிடும் குழந்தையைக் காணும் எந்தப் பெண்ணும் இயல்பாய் சமாதானப்படுத்த வாங்கிக் கொள்வதைப் போல!

''ஸாரி..''

''பரவாயில்லை'' என்று சமாதானப்படுத்தி சிரித்தன அவளது கண்கள். இவன் மகுடியின் ஊதலுக்கோ அன்றி அதன் அசைவிற்கோ கட்டுப்பட்ட நாகம் போல அவளையேப் பார்த்திருந்தான்.

மறுபடி மாயம் போல யாரோ ஒருத்தி அறையின் கதவைச் சாத்த, திலீபன் பின் வாங்கினான் -

யாரந்தப் பெண்?

அவள் வெகு அழகி என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் இவனைச் சுருட்டிக் கொண்டது அவளின் தோற்றம் மட்டுமல்ல... அந்தத் தோரணை, பழகிய பண்பு, மென்மையான அவளது விழிகளின் பேச்சு... யாரவள்?

சற்றைக்கெல்லாம் மணமக்களை மையப்படுத்தி நடந்த நிகழ்ச்சிகளில் ஆழ்ந்தவனை, அவனது தாய் அழைத்து, தன்னருகே அமர்த்தி,

''அதோ அந்தப் பெண்ணைப் பாரடா'' என்று அதே பச்சை நிறுத்துப் பாவையைக் காட்டினால் ஆனந்தமாய் அதிராமல் வேறென்ன செய்ய?

ஆனால் மகன் காரியமாய் கேட்டான் -

''பெண்ணின் பெயர் என்னம்மா?'' அந்தக் கேள்வியில் மேலும் மகிழ்ந்து போனாள் அகிலா..!

## 6

பூக்குவியலாய் இடியாப்பம் - தொட்டுக் கொள்ள காய்கறி சொதி.

''வாசனை தூக்குதே'' - என்றபடி ஆவலாய் உணவு மேஜையின் முன் அமர்ந்தவரின் தட்டில் தாராளமாய் 'மாசி' கூட்டும் விழுந்தது.



''அடடா, அகி இன்னைக்கு ரொம்ப குஷி மூடில் இருக்கே போலியே? எனக்குப் பிடிச்ச மெனுவைப் பரிமாறுறே'' - உற்சாகமாய் உண்ண ஆரம்பித்தார் ராஜேந்திரன்.

''நியாயமாப் பார்த்தால், ஜெஸி வீட்டு விசேஷத்துக்கு வராத உங்களுக்கு வெறுமே உப்பு சப்பில்லாத கஞ்சி தான் தந்திருக்கணும்..'' முறுகலாய் முணுமுணுத்தாள் மனைவி.

இதுவே திருமணமான புதிதில் என்றால்,

''ஏன் வாய்க்குள்ளே முணங்கறே? இப்படி சட்டியாய் முகத்தை வைத்தால் சகிக்கலை..'' என்று எகிறியவரும் கடந்த முப்பது வருஷ தாம்பத்தியத்தில், தன் மனைவி வேறு யாரிடமும் இப்படி முகங் காட்டுவதில்லை; இதெல்லாம் அவள் கட்டிய தன்னிடம் மட்டுமே எடுத்துக் கொள்ளும் சலுகை உரிமை என்பது புரிந்து - அவளது சின சிணுங்கலை ரசிக்கப் பழகியிருந்தார்!

ஆக எகிறாமல் சமாதானக் களத்தில் இறங்கினார் -

''என்ன அகிம்மா? நான் உன் வீடு, என் பக்கம்னு பிரிச்சு பார்க்கிறவனா? அதுவும் இத்தனை வருஷங் கழிச்சு? நாம ஒரு கம்பெனியை நிர்வகிக்கும் போது சில எதிர்பாராத நெருக்கடிகள் - அதை நான் சாக்கு போக்கு சொல்லாமல் நின்ற சமாளிக்கணுமே.''

''அதெல்லாம் சரிதான். யார் வேண்டாம்னா? ஆனா மல்லியின் நிச்சயதார்த்தத்தின் போது படு முக்கியமான ஒரு... வந்து ஒரு நபரை சந்திச்சோம் - நானும் திலீபனும்.

அந்நேரம் நீங்க என் பக்கத்தில் இல்லாதது எனக்குக் குறைதான்.''

மனைவியின் உதட்டு பிதுக்கல் அவரைச் சீண்டச் சொன்னது - ''யாரு பிரஸிடென்ட் அப்துல் கலாமா... முறைக்கிறியே - நம்ப சீஃப் மினிஸ்டரோ?''

''ஆம்பிள்ளைங்களுக்கு இந்த அரசியலை விட்டா வேறேதும் தெரியாது. அவங்களைச் சந்தித்தால் நம்ப வாழ்வு மாறுமா - என்ன?''

வாழ்வே மாறுவதா?

அதுவரை உணவில் கருத்தாயிருந்தவரின் கவனம் இப்போது மனைவியின் பேச்சில் சுவாரஸ்யமாய் குவிந்தது!

''முழு அட்டென்ஷனில் இருக்கேன் அகி - சொல்லு..''

''ஆரோக்யா ஹாஸ்பிடல் தெரியுமில்லையா?''

''ம்ம்... ஸிட்டியில பிரபல ஹாஸ்பிடல். அதை நிறுவி, நடத்தும் டாக்டர் வேதன்புவைக் கூட ஓரிரு நிகழ்ச்சிகளில் பார்த்திருக்கேன்.''

''அவர் பெண்ணைப் பார்த்தோங்க.. அடடா என்னா திறமை, அழகு, பண்புன்றீங்க... அதோட ரொம்ப ஸிம்ப்பிள் வேற.''

''அவளும் டாக்டரா?''

''இல்லல்ல. நம்ப மல்லிகாவோடு காலேஜ் - மேட்டாம் ஃபைன் ஆர்ட்ஸ் படிச்சவளாம். மணப் பெண்ணின் அலங்காரம் எல்லாம் அவதான். ஜெஸி மணப்பெண்ணுக்கு அத்தனை நகையையும் தந்திருந்தா - தேர்ந்தெடுத்து, பயன்படாத மற்ற நகைகளைப் பத்திரமாய்



பூட்டி, சாவியை எங்கையில் தந்துட்டா - பொறுப்பாய்..''

''சரி - ஆக டாக்டர் தன் மகளை நல்லபடி வளர்த்திருக்கார் - ஆனா அது நம்ப வாழ்வை ஏன்.. எப்படி மாற்றும்?''

மறுபடி ஹில்டாவின் முகம் உப்பியது!

''நம்ப பிள்ளைங்களுக்குந்தான் என்ன குறை? லட்டுங்க..''

''நம்ப பயல்கள்... ம்ம்...? கொஞ்சம் காரமான லட்டூஸ்! முறைக்காமல் விஷயத்துக்கு வா அகி.''

''இன்னுமா உங்களுக்குப் புரியலை?''

''விஷயத்தையே சொல்லலையே நீ?''

''உங்களுக்கு விவரமே போதாது'' என்று நாக்கு நுனி வரை வந்த வார்த்தைகளை விழுங்கினாள் - கண்டதையும் பேசி காரியத்தைக் கெடுத்து விடக் கூடாதே!

''அந்தப் பொண்ணு நம்ப திலீப்புக்குப் பொருத்தம்னு நினைக்... ல்ல முடிவே செய்துட்டேங்க. உயரமாகட்டும், அழகு, குணம், அந்தஸ்து, திறமை, பொறுமை, பொறுப்பு, அடக்கம்னு எல்லாமுமே (இனம், பணம் என்பவை அகிலாவின் மனப்பட்டியலில் இருந்தன!) அப்படி ஒரு பொருத்தம்.''

''பெண்ணின் பெற்றோரை சந்திச்சியா அகிலா? அவங்களிடம் உன் நோக்கத்தை ஜாடை மாடையாகவேனும் தெரிவிச்சாச்சா?''

இப்போது அகிலா விழித்தாள்!

''இல்லையே... அவ வீட்டுப் பெரியவங்க அங்கே வரலை... அதாவது அவங்களைப் பற்றி நான் கேட்கலை.. காலேஜ் ஃப்ரெண்ட்ஸாய் ஒரு கூட்டம் பெண்கள் வந்திருந்தாங்க... மற்றதுங்க வாயெல்லாம் படு நீளம்.''

''இருக்கட்டும். வீட்டுப் பெரியவங்களின் நோக்கம் தெரியாமல் நாம முடிவெடுப்பதில் அர்த்தமில்லையே.''

''பெண்கள் இம்மாதிரி நேரங்களில் கற்பனையிலேயே கல்யாணத்தை முடித்து, பேரக் குழந்தையையும் எடுத்துக் கொஞ்சிடுவீங்களே'' - என்றவர் குத்திப் பேசாவிட்டாலும் மனைவிக்குக் குறுகுறுத்தது.

''மல்லிகாவின் நிச்சயதார்த்த போட்டோஸ் நாளைக்கு வரும் - அந்தப் பெண்ணின் படத்தைப் பார்த்தால்தான் உங்களுக்கு நான் சொல்றது புரியும்.''

''அகிலா, பிரச்சனை என்னைப் பற்றியில்லை. அந்த பெண்ணின் வீட்டார் அவளுக்கு வேறு ஒரு பையனோடு மனசில் முடிச்சு போட்டிருக்கலாம் - அல்லது பொண்ணுக்கு மேலே படிக்கும் நோக்கமிருக்கும் - தவிர நம்ப பயலின் மனசில் என்னன்னு...''

முதலில் இருண்ட அகிலாவின் முகம் இப்போது பிரகாசமானது.

''அதுதாங்க விஷயமே! அவளைப் பார்த்ததும் திலீப் முகத்துல புது பரவசங்கறேன்! நான் அவளைக் காட்டினதுமே கேட்டுட்டானே...''

''என்னன்னு?''

''பொண்ணு பேர் என்னம்மான்னு!''



ராஜேந்திரன் அடக்க மாட்டாமல் சிரித்து விட்டார்!

''நீ ரொமான்ஸ் நாவல்ஸ் அதிகம் வாசிக்கறே அகி - அது சாதாரண, யதார்த்தமான ஒரு கேள்வி..''

''நீங்க இயந்திரங்களோட புழங்கி, பழகி இயந்திரமாகிட்டீங்க. பிடிக்கலைன்னா திலீப் அங்கேயிருந்து எழுந்து போயிருப்பான் - பேரைக் கேட்டதுமல்லாமல் அவளையே திரும்பிப் பார்த்து 'லுக்' விட்டானே?''

''ஓஹோ? - சரி இப்ப என்ன செய்யலான்ற?''

''அவளே என்னைத் தேடி வர்ற மாதிரி ஒரு காரியம் பண்ணிட்டுதாங்க வந்தேன்.''

பெருமையாய் அறிவித்தாள் அகிலா -

''உன் விஸிட்டிங் - கார்ட் தந்தியா?''

''ஐயோ - கொடுத்தால் தேடி வந்திருவாளா? என் நகைகளை அவளை வற்புறுத்திப் போட வச்சேன். அப்படியே அவ நகைகளைக் கழட்டி என் கைப்பையில போட்டு எடுத்துட்டே வந்துட்டேன்!''

இதென்ன விநோதம் என்று விழித்தவர் முணங்கினார் -

''இதற்கு போலீஸ்தான் நம்மைத் தேடி வரும்'' - என்று!

தன் தலையில் அலுப்பாய் தட்டியபடி அகிலா மேலும் விவரித்தாள் -

ஆனாலும் ராஜேந்திரனுக்கு மனைவியின் ராஜ தந்திரம் விளங்கத்தானில்லை.

''பெரிய இடத்துப் பெண்ணின் நகைகளை நீ எடுத்துட்டு வந்தது சரியில்லை அகி...''

''அதுதாங்க இல்லை - அவ எளிமையான பெண் என்றேனே? அவளுடைய மொத்த நகைகளின் மதிப்பு பதினைஞ்சாயிரம் கூட தேறாது. என் நகைகளின் மதிப்பு - அதாவது நான் அவளுக்குப் போட்டு விட்ட என் நகைகளின் விலை அதை விட நாலைஞ்சு மடங்கு அதிகமாச்சே.''

''சரி - உன் ஐடியாதான் என்ன?''

''அவ கடைசி பந்தியில சாப்பிட்டு, மணப்பெண் மல்லியின் அலங்காரத்தையும் கலைக்க உதவ, நான் நைஸாய் நழுவிட்டேன் - ஆக என் நகைகளைத் திருப்பித் தர அவ என்னைத் தேடி வந்தாகணும்.''

''மல்லிகா மூலமே அதைத் தந்தனுப்பிட்டால்?''

''ஐயோ - இருந்தும் அவ நகைகள் என்னிடமிருக்கே - அதை நான் மல்லி மூலம் தந்தனுப்ப முடியாதுன்னு மறுத்துட்டேன். ஆக மல்லிகாவோடு அல்லது தனியே அவ நம்ப வீட்டுக்கு வந்துதானாக வேணும்!''

''பாவம் அந்தப் பெண்ணை ஏன் அலைய விடறே?''

''நீங்க பார்க்க வேண்டாம்? எது எப்படியோ - நாங்க அவளை மறுபடி கண்குளிரப் பார்க்கணும் - என்னா அழகு, அடக்கம், சிரிப்பு, பண்புங்கறீங்க...''

பரவசமாய் பேசியவளை இடைவெட்டி -

''இருக்கட்டும் - பொண்ணு பேர் என்னன்னு நீ சொல்லவே இல்லையே?''

தாடையைத் தடவியபடி வினவினார் ராஜேந்திரன்.



7

கழுவிய கண்ணாடி பாத்திரங்களைப் பளபளவென்று துடைத்து அலமாரியுள் அடுக்கிக் கொண்டிருந்தனர் அந்த இரு பெண்களும்.

''நல்லவேளை குழந்தையான என்னை வேப்பமரத்தின் கீழே கண்டெடுக்கவில்லை - என்ன ஆயா?'' - கேட்டாள் அந்த இளம் பெண்.

''வேப்பங்காத்து உடம்புக்கு உரமாச்சே'' - புரியாதது போல பதில் வந்தது தலை நரைத்த அடுத்த பெண்மணியிடமிருந்து.

''செம்பருத்தி செடி கூட நம்ப தோட்டத்துல பெரிய புதராட்டந்தான் நிற்கும் - அதற்குக் கீழே என்ன இட்டிருந்தாலும் கூட ஆபத்துதான்.''

''என்ன - செம்பருத்தின்னு உன்னைய வாய் நிறைய கூப்பிட்டிருப்போம் - அதும் ஒன்னும் மோசமான பெயரில்லையே? இங்கேயுள்ள தோட்டத்துல எலுமிச்சை, தென்னை, மாதுளைன்னு ரகரகமாய் மரமுந்தான் உண்டு..''

''ஆனா நல்லவேளை கைக்குழந்தையாயிருந்த என்னை துளசிச் செடி பக்கமாய் போட்டாங்க - அது தானே எனக்குப் பெரியப்பா துளசின்னு பெயரிட்டதற்குக் காரணம்?''

வேலை முடிய, துடைத்த துண்டை தன் இடுப்பில் செருகிய வேலைக்கார ஆயா, இளையவளை நேரே பார்த்து சொன்னாள் -

''ஒன்னு சொல்லட்டா துளசி?''

''ம்ம்.''

''நீ அதையெல்லாம் மறந்திடணும் - சுத்தமா. பச்சக் குழந்தையான உன்னைய எவரோ இருவது வருஷத்துக்கு முன்னே நம்ப தோட்டத்து துளசிச் செடி அண்டையில போட்டது - தோட்டக்காரத் தாத்தா உன்னையக் கண் டெடுத்து நம்ப டாக்டர் ஐயாட்டக் காட்டுனது ரெண்டு ஆம்பிள்ளைப் புள்ளைங்க மட்டுமே இருந்த வீட்டுக்குப் பெண்ணாய் நீ வரட்டுமேன்னு டாக்டரய்யா உன்னையும் ஏத்துகிட்டது எல்லாத்தையும்...''

''பழசை மறக்கக்கூடாதுன்னு சொல்வாங்களே?''

விஷமமாய் வினவினாள் இளையவள்!

''என்னையக் கேட்டா, ஐயா உங்கிட்ட அத்தனை உண்மையையும் உடைச்சு சொல்லியிருக்கப் படாது - நாம இந்தக் குடும்பத்துப் பொண்ணுங்கற நிம்மதியோட நீ நடமாடியிருப்பேல்ல... அப்படியே நினைச்சுக் கோயேம்மா துளசி.''

துளசி புன்னகைக்க, அதில் துளி கசப்பிருந்தது.

அதன் அர்த்தம், சமையல்கார ஆயாவிற்கும் புரியாமல் இல்லை. டாக்டர், வேதன்பு உண்மையை உடைக்காமல் போனாலும், தான் ஒரு அனாதை - இரக்கத்தினால் வளர்க்கப்படும் ஜீவன் என்பதை துளசி அறியாதிருக்க முடியாத அளவில்தான் பெரியம்மா - அதாவது திருமதி. வேதன்பு அவளை நடத்தினார்! - சதா வேலை ஏவலும், அதட்டலுமாய்.

அனைவரும் சேர்ந்தமர்ந்து ஒரு வேளையேனும் உண்ண வேண்டும் என்பதில் டாக்டர் கண்டிப்பு காட்டிய



தால், துளசியும் குடும்பத்தினரோடு உணவு மேஜையில் சேர்ந்து அமர வேண்டியிருந்தது -

'உட்காரும் முன்பே மேஜையில் தயிர், ஊறுகாய் எல்லாம் எடுத்து வை என்று எத்தனை தரம் சொல்றது துளசி?'

'என்னது எல்லாம் வச்சாச்சா? ரசம் சூடாவே இல்லை - பாரு. மைக்ரோ -வேவ் ஓவனில் வைச்சு எடு.'

'போன் அடிக்குதே - யாருன்னு கேட்டு, பத்து நிமிஷங் கழிச்சு கூப்பிடச் சொல்லு.'

பெண் பிள்ளை பொறுப்பேற்கட்டும், வேலை பழ கட்டும் என்ற பிரியத்தில் பிறந்த உரிமையான ஏவல்கள் அல்ல அவை -

இந்த அநாதைப் பெண் நமக்கு சமதையாய் உட்கார்ந்து தின்னுவதா என்ற குரோதம் அதில் தொனிக்கும்.

ஆக இளம் வயது துளசிக்கு ஏகக் குழப்பம்.

டாக்டரையும் அவரது மனைவியையம் அவள் 'பெரியப்பா', 'பெரியம்மா' என்றே விளித்திருந்ததால், அவர்கள் தன் பெற்றோர் அல்ல என்றளவிற்கு விவரம் புரிந்தாலும் தான் ஒதுக்கப்படுவது எதனால் என்ற வலி அவளுக்குள் - போதாதற்கு தன்னைப் பெற்றவர்கள் யார் அவர்கள் எங்கே - என்ற கேள்விக் குடைச்சல்கள் வேறு.

டாக்டர் வேதன்புவின் மூத்த மகன் விஜித்திற்கு இளகிய மனம். ஆக சின்ன துளசியைத் தங்கையாகவே ஏற்றுக் கொண்டான். இருவருக்கும் ஆறேழு வயதில் வித்தியாசம் என்பதால் சின்னத் துளசியை ஆசையாய்

அள்ளிச் சுமப்பான். இளையவன் விஜய்யின் பொறாமைக்கு அதுவே வித்தானது!

ஆக அவன்தான் முதலில் கிணற்று பூதத்தைச் சிறுமிக்குக் காட்டியது -

அதில் அவள் திகைத்து மருண்டாள் -

எட்டு வயது சிறு பெண்ணிடம்,

''உன் பேர் வித்தியாசமாயில்லை? துளசின்னு நம்ப குடும்பத்திலே யாருக்கேனும் பேரிருக்கா? உனக்கு மட்டும் ஏன் அப்படி வச்சாங்க தெரியுமா? ஏன்னா நீ துளசிச் செடி பக்கத்துலதான் பேபியாய் கிடந்தே - யாரு உன்னை இங்கே கொண்டு வந்து எங்க தோட்டத்தில போட்டாங்களோ தெரியாது. ஆனா உன்னைய வேண் டாம்னுதான் போட்டுட்டுப் போயிட்டாங்க. எங்க அப்பா தான் பாவம்னு உன்னை எடுத்து வளர்க்காங்க. விஜித் உன்னைத் தூக்கிக்கறதால நீ நிஜம்மா எங்க கஸின்னு நினைச்சுக்காதே..''

முறைப்பும் விறைப்புமாய் விஜய் சொன்னதைத் துளசி முழுக்க நம்பவில்லை என்றாலும் அழுகை வந்தது. அது விஷமமும் விளையாட்டுமான பொய்தான் - என்று தன்னையே பெரிய மனுஷிபோல தேற்றிக் கொள்ளவும் முயன்றாள் -

ஆனால் விஜய்யின் பேச்சு டாக்டர் வேதன்புவின் காதை எட்டி விட்டது போலும் - ஒரு சனிக்கிழமை மாலை இவளுக்கு அழைப்பு வந்தது -

''துளசிம்மா, உன்னைய ஐயா கூப்பிடுதாரு - வா'' - என்று.



இவள் சற்று தயங்கித்தான் போனாள் -

பெரியப்பா முன்னறையில் உட்கார்ந்திருந்த விதமே இவளைக் கலவரப்படுத்தியது.

எப்போது வலதுபுற தனி சோபாவில் அமருபவர் இன்று எதிர் பக்க இரட்டை சோபாவில் உட்கார்ந்திருந் தார்.

முகத்திலும் சிந்தனையின் சுருக்கங்கள்.

இவள் போய் நின்றதைக்கூட கவனியாதளவு ஏதோ யோசனை.

''என்ன பெரிப்பா?'' கேட்ட வாயிலிருந்து சத்தத்தை விட அன்று காற்றுதான் அதிகம் வந்தது!

''இப்படி வந்து உட்காரும்மா துளசி'' - சோபாவைத் தட்டினார்.

அவர் குழந்தைகளைக் கூட மடியில் இட்டு கொஞ்சு பவர் அல்ல - ஆனால் அவரது மிருதுவான பார்வை அரவணைக்கும் -

கனிவான குரல் வருடித் தரும்.

மிரண்ட சின்ன கால்கள் மெள்ளவே நகர, அவளைப் பக்கத்தில் இருத்திக் கொண்டவரின் கைகள் அவளது மெலிந்த தோளில் ஆதரவாய் படிந்தன.

''நேற்று விஜய் உன்னிடம் ஏதோ சொன்னான் போலவே - ம்ம்?''

''ம்ம்... ஆமா பெரிப்பா.''

''என்ன சொன்னான் - நீ அழுதியாமே?''

''என்.. என்னைய துளசிச் செடிக்குக் கீழேருந்து எடுத்து... அதான் அப்படி வேடிக்கையான பேராய் வச்சீங் கன்னு... கேலி பண்ணுனாங்க விஜிண்ணா..''

அவரது விழிகள் சின்னவளைப் பரிவுடன் நோக்கின.

''அது உண்மைதாம்மா துளசி. ரெண்டு, மூணு மாசக் குழந்தையான உன்னை நாங்க தோட்டத்து துளசி செடி பக்கத்தில்தான் சந்திச்சோம். ரெண்டு முரட்டு பசங்களே இருந்த நம்ப குடும்பத்துக்கு ஒரு அழகான குட்டி தேவதையைக் கடவுள் அனுப்பினதாய் நான் நம்பினேன். அதான் நீ எங்களை பெரியப்பா, பெரியம்மா என்றே கூப்பிடறே. இந்தியாவில் துளசி செடிக்கு ஒரு பவித்திர மான அந்தஸ்து உண்டு, தாமரைக்கு அடுத்ததாய். துளசின்னா 'ஒப்பற்ற ஒன்று'ன்னு அர்த்தம். அதன் நறுமணம் நாசி வழியே நுகர்பவரின் உள்ளத்தையே விரியச் செய்திடும்னு சொல்லுது ஆயுர்வேதம்!''

அவரால் தொடர முடியவில்லை - சிறுமியின் விழி களில் தேங்கி நின்ற சஞ்சல நீர் அவரைத் தடுத்தது.

'அழக்கூடாதம்மா துளசி' - என்றவர் மென்மையாய் அவளை அணைத்துக் கொண்டார்.

அப்பெரிய மார்பின் அடைக்கலம் மிக ஆறுதலாய் இருந்ததெனினும் உள்ளேத் துடித்த சிறுமியின் இளம் இதயம் மிக நொறுங்கிப் போயிருந்தது...



8

இளம் மழை, உலகை புதிதும் ரம்மியமு மாய் மாற்றியிருந்தது.

பச்சைப் புல்வெளியில் அமர்ந்து அகி லாவும் அவள் கணவரும் மஞ்சள் வெயில் மாலைப் பொழுதினை ரசித்திருந்தனர். அதற்கு தோதாய் வெந்தயக் கீரை பக் கோடாவும் ஆவி பறக்கும் தேநீரும்.

''அந்தப் பெண்ணின்... அதுதான் துளசியின் பெற் றோரிடம் நான் போய் ஏதும் பேசாமல் குதிக்கறேன்னு - குற்றம் சொன்னீங்களே - அதை விட முக்கியமான பாய்ன்ட் ஒன்னு சொல்லட்டா?''

''குற்றம் சொல்லலை அகி - வெறுமே சொன்னேன் - அவ்வளவு தான். சரி முக்கியமான விஷயத்திற்கு வரு வோம் - பெண்ணிற்கும் நம்ப பயலுக்கும் பிடிச்சிருச்சா... இப்போதைய சென்னை தமிழில் - பத்திகிருச்சா?''

நமட்டாய் சிரித்தவரை சற்று வியந்து பார்த்தாள் அகிலா.

''ஒரு பாதி ரைட்! திலீபனுக்கு துளசியைப் பார்த்ததுமே பிடிச்சிருந்துதுங்க - உங்களைப் போலவே அவனும் 'அவ பேர் என்னம்மா'னுட்டானே!''

''நீ அதிலேயே நிற்கறே அகி - அது வெறும் க்யூரியாஸிடி!''

''அந்த ஆர்வம் ஏன் வரணுங்கறேன்? இந்த அழகியின் பெயர் என்னன்னு அறியும் ஆசை ஏன்?'' - செந்தமிழுக் குத் தாவினாள் அகிலா!

''ரொம்ப கற்பனையில் மிதக்கறே அகி! அந்தப் பெண்ணின் மனசு எப்படியோ?''

"அவ மனத் தூய்மைதான் அப்படியே அவ முகத்துல தெரிஞ்சுதே. இந்தக் காலத்தில் இப்படியொரு குண வதியைத் தேடினாலும் கிடைக்காது... என்... ம்ஹூம் திலீபனின் அதிர்ஷ்டந்தான் அவ எடுத்ததுமே நம்ப கண்ணுல தட்டுப்பட்டது."

''டாக்டர் வேதன்புவிற்கு நல்ல பெயர் - அவரின் வளர்ப்பும் சரியாத்தானிருக்கும் - அது பற்றி ஒரு குட்டிக் கதை சொல்றேன்."

''வேண்டாம்னாலும் விடமாட்டீங்களே..'' அகிலா அலுப்பு காட்டினாலும் அவளுக்கும் அவரது சின்னக் கதைகள் பிடிக்கும்.

"ஒரு அப்பாவும் சின்ன மகனும் பொருட் காட்சிக்குப் போனாங்க. அங்கே பெரியவங்களுக்கான கட்டணம் 10 ரூபாய்னால் பத்து வயசிற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு அதில் பாதிதான் அனுமதிக் கட்டணம். பையனைப் பார்த்த டிக்கெட் கிழிப்பவர், ஒரு முழு டிக்கெட்டை அடுத்து, ஐந்து ரூபாய் சீட்டைக் கிழிக்க முற்பட, அந்த அப்பா தடுத்தார் -

'இல்ல எம்மகனுக்கும் வயசு பத்தாயாச்சு. ரெண்டு முழு டிக்கெட்டாகவே தந்திடுங்க'ன்னு பணத்தை நீட்ட, கவுன்ட்டரில் நின்றவருக்கு அதிசயமாய் போச்சு!

'ஸர் - நீங்க சொல்லலைன்னா தெரியாது - சிறு பையனாய் தெரியறானே'ன்னு, அப்பா சொன்னார் -

'ஆனா எம்பையனுக்குத் தெரிஞ்சிடுமே - ஐந்து ரூபாய்க்காக நம்ப அப்பா பொய் சொல்றார்னு? அது தப் பான முன்னுதாரணம் இல்லையா?'ன்னு!"



"சரிதாங்க - பைபிளும் தெளிவாய் சொல்லுதே -

''வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரி சுத்தமாயிருக்கும்''ன்னு.''

''மல்லிகாவிடம் இந்தத் துளசியைப் பற்றி ஏதும் விசாரிச்சியா? கல்லூரித் தோழிகளாச்சே?''

''பின்னே..? நான் அவளுக்குப் போட்டு விட்டிருந்த நகைகளை மல்லியின் நிச்சயதார்த்தத்தின் அன்றே மல்லியின் கைகள் ஒப்படைச்சுட்டுதான் கிளம்பினாளாம் துளசி - மறுநாளும் ஜெஸி வீட்டிற்குப் போயிருந்தேனே - அப்போ அதையெல்லாம் எங்கிட்ட தந்துட்டு, தன் சிநேகிதியைப் பாராட்டித் தள்ளிட்டா நம்ப மல்லிகா! படிப்பிலும் கெட்டியாம் - நிறை குடம்னால் அது துளசி தான் பெரியம்மான்னா..''

''ம்ம்... தளும்பலைன்னு தானே நீயும் சிலாகிச்சே.. பொண்ணு மேற்கொண்டு படிக்கப் போறாளா?''

"அப்படி ஏதேனும் அவ ஆரம்பிப்பதற்குள்ளே நாம முந்திக்கணுங்க. ஏன்னா திலீபனுக்கு வயசு 28 ஆயிடும்... நீங்க போய் துளசியோட அப்பாட்ட - அதான் டாக்டர் வேதன்புட்ட பேசுங்களேன்.''

''ம்ம்.. அதற்கு முன்னே நானும் அந்தத் துளசியைப் பார்த்தால் நல்லாயிருக்கும்... ஒரு க்யூரியாஸிடிதான்."

"அதற்கும் ஒரு திட்டம் போட்டுட்டேனே."

சிறு பெண்ணைப் போல பீற்றிய தன் மனைவியை ஆவலாய்ப் பார்த்தார் ராஜேந்திரன்.

"அவ - அதான் துளசி - என் நகைகளைத் திருப்பிட் டாலும், அவளுடைய நகைகள் இன்னும் எங்கிட்டே தான்

இருக்குது - மல்லிகாவின் மூலம் அதை கொடுத்து விட மறுத்துட்டேன்!''

''என்ன வம்பு இது, அகிலா? அந்தப் பொண்ணு வெறும் காது, கழுத்தாய் இருக்குமே?''

''எப்படீங்க - அவ்வளவு பெரிய இடத்துப் பெண்ணுக்கு வேறே நகைகள் இராதா என்ன? என் வீட்டிற்கு வரட்டும்... வந்ததும் துளசியின் கையில்தான் நகைகளைத் தரு வேன்னு கறாராய் சொல்லிட்டேன் - எப்படி?''

யோசனையுடன் பெருமூச்செறிந்தவர், தோள் குலுக் கினார்.

''பின்னே, நீங்க பெண்ணைப் பார்க்க வேணாமா? முக்கியமாய் எனக்கு மறுபடி துளசியைப் பார்க்கணுங்க - என்ன அழகு, குணம்...''

ராஜேந்திரனின் தாத்தா சொல்வதுண்டு - அவரது காலத் தில் 'அடுப்பங்கரை சம்பந்தம்'தான் பிரபலம் என்று - அதாவது சம்பந்தியாகப் போகும் இரு வீட்டுப் பெண் களும் - சமையலறையில் பேசி ஐக்கியப்பட்டு விட்டால் அது வெற்றிகரமான சம்பந்தம் தான் என்று. 'பெண்கள் முறுக்கிக் கொண்டால் வாழ்வே போச்சுல்ல?' என்று தாத்தா சொல்வதில் அர்த்தமில்லாமல் இல்லை. இன்று அகிலாவிற்கு இந்தப் பெண் துளசியை மிகப் பிடித்துப் போய் விட்டது - அவள் சொல்வதைப் பார்த்தால் திலீபனின் மனதும் கூட சலனப்பட்டு விட்டது போலல் லவா...?

சன்ன சிரிப்புடன் மனைவியைப் பார்த்தவரின் விழிகள் விரிந்தன. பேசிக் கொண்டிருந்தவளின்



முகம் திகைத்து... பின் ஏனித்தனை பரவசமாய் மாறு கிறது?

''அடடா... அதோ கேட் பக்கம் பாருங்களேன்... அது.. அவதான் துளசி.. தேடி வந்துட்டா... அதுவும் நான் அவளைப் பற்றி பேசறப்பவே... கடவுளின் அருள்ங் கறது... இதானா?''

பதினாறு வயசுப் பெண்ணாய் துள்ளி எழுந்த அகிலா வெளிகேட்டை நோக்கி விரைந்தாள் - அங்கு தயக்கமாய் நுழைந்து, கூச்சத்துடன் நின்ற இளம் பெண்ணை ராஜேந் திரனும் ஆர்வமாய் கவனித்தார் - தன் மனைவி மிகைப் படுத்தி புளுகவில்லை என்றே அவருக்கும் பட்டது. அகிலாவை அப்பெண் வணங்கிய விதமும் தன்னிடம் அறிமுகப்படுத்தப் பட்டதும் கைகூப்பிய பாங்கும் கண்ணோடு, கருத்திற்கும் ரம்மியந்தான்!

எவரையும் மறுபடி பார்க்க வைக்குமளவிலான அழகு.

அவள் காதிலும் கழுத்திலும் கிடந்தவை போலி முத்துக்களோ? - இருப்பினும் அவள் கட்டியிருந்த கருஞ் சிவப்பு பருத்தி புடவைக்கு அவை ஏக பொருத்தம்.

அகிலா நீட்டிய டிபனை சாப்பிட்டு, தேநீரும் பருகிய இளையவள் மெல்லிய குரலில் பேசினாள் -

''ஆன்ட்டி, இந்தப் பகுதியில்தான் கைத்தையல் கற்றுத்தரும் கோமளா டீச்சர் இருக்காங்க... அதற்காய் வந்தேன் - அப்படியே என் நகைகளையும் உங்களிட மிருந்து வாங்கிட்டுப் போகலாமேன்னு... வந்து... மல்லி சொன்னா... அதாவது நான் நேரே வந்தால்தான் நீங்க அதைத் தருவீங்கன்னு..''

அவள் தயங்கி, தாழ்ந்து பேசிய விதத்தை, உடையலங்காரத்தை குரலின் மென்மையில் ராஜேந்திரனுக்கும் அதிசயந்தான் -

'அத்தனை பெரிய இடத்துப் பெண் இத்தனை எளிமையும் இனிமையுமாய் இருக்கக் கூடுமா' என்று!

''எப்படியம்மா வந்தே?''

''பஸ்ஸில்தான் அங்க்கிள்.''

''நகைகளை எடுத்து வா அகிலா. பிறகு நாமே துளசியை அவ வீட்டில் கொண்டு விட்டுடலாம்'' என்றபடி அவர் எழ, இளையவள் பதறினாள் -

''வேணாம் அங்க்கிள். உங்களுக்கு ஏன் சிரமம்?''

''நல்ல கிளைமேட் - இதை அனுபவித்தபடி எங்களுக்கும் காரில் ஒரு ட்ரைவ் - நோ ப்ராப்ளம்.''

நகைகளைத் தந்து, ஒரு மலர் சரத்தையும் துளசியின் பின்னலில் செருகிய அகிலா, அந்நேரம் தன் கணவரை ஒரு பெருமிதப் பார்வை பார்த்தாள்!

இனியும் மறுத்தால் மரியாதை இல்லை என்ற முடிவுடன் காருள் அமர்ந்தாள் துளசி -

''வீடு எந்தப் பக்கம்மா?''

''அண்ணா நகர் அங்க்கிள்.''

''உங்க அப்பா, அம்மா இந்நேரம் வீட்டில் இருப்பாங்களா?''

ராஜேந்திரன் கேட்க, தன் கணவர் தீவிரமாய் திருமணக் காரியத்தில் இறங்கி விட்டார் என்ற பூரிப்பு அகிலாவிற்கு!



''இல்லைங்க அங்க்கிள் - டாக்டர் வேதன்பு எனக்குப் பெரியப்பா - அவங்க... அதாவது நான் அவங்க மகளில்லை... அவங்க எடுத்து வளர்க்கிற பெண்.''

துளசி சொன்ன அதே நொடியில் மலர்ந்திருந்த ஹில்டாவின் முகம் சுண்டி, வெளுத்தது!

## 9

ராஜேந்திரனுக்குத் தன் மனைவியின் நிலையைப் பார்த்துப் பரிதாபந்தான் -

''பாவம், அகி. எத்தனை எதிர்பார்த்திருந்தால் இப்படி நொறுங்கிப் போவாள்? தன் மருமகள் துளசிதான் என்று மனதளவில் ஆசையாய் நிச்சயித்த பிறகு, அந்த அழகு பிம்பத்தை அங்கிருந்து பிடுங்கி எறிவது லேசில்லை... வேதனைதான். அதில் ரொம்பவே வாடித் தெரிகிறாள்.

யோசனையூடே அவருக்கு ஒரு குட்டிக் கதை ஞாபகத்திற்குள் வந்தது - அவை சிரிப்போடு சிந்தனையையும் தூண்டுபவை அல்லவா?

மிஸ்டர் எக்ஸ், ஒரு பிரபல உணவகத்திற்குப் போய், ஒரு செட் தோசை, பூரி, ச்சீஸ் சமோசா, மாதுளைச் சாறு, பாதாம் பாலோடு, காபி ஐஸ்க்ரீமிற்கு ஆர்டர் தந்தாராம் - இனிப்பு பீடாவைக் குதப்பியபடி கை கழுவி வந்தவரிடம் பில் தரப்பட்டது - ரூபாய் 280க்கான பில்!

''இதென்ன பேப்பர்?'' வினவிய மிஸ்டர். எக்ஸிடம் பணியாள்,

பணிவாகவே விளக்கினார் -

''நீங்க சாப்பிட்டதற்கான பில், ஸார்.''

மிஸ்டர். எக்ஸோ பதறினார் - ''வெறும் சாப்பாடு தானே கேட்டேன் - பில் எல்லாம் யார் கேட்டது?'' என்று!

கதை வேடிக்கையானது என்றாலும் அதன் கருத்து ஆழமானதே.

ஆசைப்பட்டு ஆர்டர் செய்ததின் விளைவே பில்.

அதே போல நம் ஆசைகளும், பல கவலைகளை, அவதிகளை உடன் அழைத்து வரும். ஆனால் நமக்கோ அவற்றை ஏற்க மனமில்லை!

'உன் கவலைகளை உன் ஆசைகள் மூலம் நீயே தேர்வு செய்கிறாய்' - என்ற தத்துவார்த்த கருத்தை மனைவியிடம் சொன்னவருக்குக் கடும் முறைப்பே பதிலானது!

ஆக அவருக்குத் தன் அடுத்த கருத்தைச் சொல்ல துணிவில்லை - அதாவது -

''உனக்கு துளசியின் மீது இத்தனை பிரியமென்றால், அவளையே நம் வீட்டுப் பெண்ணாக்கிக் கொள்ளலாமே? அச்சிறு பெண் மெய்யாலுமே பார்க்க இனிமையாகவும் பழக இதமாயும் இருப்பதால் இப்படி ஒரு குறையை மறந்து, அவளை திலீபனுக்கு மனைவியாக்கினால் என்ன?'' என்று.

ஆனால் அகிலாவிற்கு கௌரவமும், அந்தஸ்தும் இன்றியமையாதவை. அதுவும் அவருக்குத் தெரியும்!

முதல் பார்வையிலேயே அகிலாவிற்கு துளசியைப் பிடித்திருந்தாலும், அப்பெண்ணைத் தன் மருமகளாக்கும் அளவிற்கு இறுக முடிச்சிட்டது, அவள் டாக்டர் வேதன்பு வின் மகள் என்பதே!



பொங்கிப் பூரித்திருந்த மனைவி சட்டென வற்றி வடிந்து விட்டதும் எதிலும் நாட்டமற்று அவளது அறையி லேயே அடைந்து கிடந்ததும் அவருக்குத் தாளவில்லை. மனச்சோர்விலிருந்து அவளை மீட்கும் எண்ணத்துடன்,

''இந்த வீக் - என்ட் நாம குடும்பமாய் மகாபலிபுரம் போனால் என்ன அகி - நானும் ஃப்ரீ?'' என்றார்.

அந்த அழைப்பிற்கு மகன்களுமே உற்சாகமாய் ஒப்புக் கொள்ள, அகிலா குடும்பத்திற்காய் சோமாசி, காரச்சேவு என்று தயாரிக்கலானாள். ஜிஞ்சர் - லைம் தயாரித்து, பாட்டில்களை நிரப்பியவளை அவ் வேலைகள் சற்று திசை திருப்பியதுதான். வழக்கம் போல அகிலா வீட் டினுள் பரபரப்பாய் திரிவதைப் பார்த்ததில் ராஜேந்திர னுக்கு நிம்மதி தோன்றினாலும் சற்று நேரமே பார்த்துப் பழகிய அச்சிறு பெண்ணின் மீதும் அவருக்கு அனுதாபம் பெருகியது. தனக்குப் பெண் குழந்தைகள் இல்லாத ஏக்கம் கூட அப்பரிவிற்குக் காரணமாய் இருக்கலாம்.

தான் டாக்டர் குடும்பத்தின் வளர்ப்பு மகள் என்பதை துளசி வெகு இயல்பாகவே சொன்னது போலிருந்தாலும் அதில் வேதனை பொதிந்திருக்கத்தான் வேண்டும்...

துளசியின் போலி முத்துக்களும், வெகு எளிய பொன் நகைகளும் இப்போது அவருக்கு வேறு கதையைச் சொல்லின.

வளர்ப்புக் குடும்பத்தினர் இவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடவில்லை - செல்வத்தை அவளில் வாரி இறைத்து சீராட்டவில்லை.

எடுத்து வளர்த்திருந்தது ஒரு பயலை என்றால் அவன் இந்நேரம் பிய்த்துக் கொண்டு பறந்திருப்பான் -

பாவம் பெண் பிள்ளைக்கு வேறு போக்கிடம் ஏது?

பெண்களின் நிலை பரிதாபத்திற்குரியதுதான் - முன் தினம் அது பற்றிய ஒரு கணக்கெடுப்பை வேறு வாசித் திருந்தார்.

"2004ம் ஆண்டில் இந்தியப் பெண்களுக்கு எதிரான குற்றங்களின் பட்டியல்:

29 நிமிஷங்களுக்கு ஒரு பெண் கற்பிழக்கிறாள்.

75 நிமிஷங்களுக்கு ஒருத்தி வரதட்சணை கொடுமை யில் மடிகிறாள்.

16 நிமிஷங்களுக்கு ஒரு கொலை -

9 நிமிஷங்களுக்கு ஒரு சிறுமி பாலியல் பலாத் காரத்தில் நசுங்கிப் போகிறாள்...

கடந்த இரு ஆண்டுகளில் நிலைமை மோசமாகியிருக் குமே தவிர, வேறில்லை..

பெருமூச்செறிந்தவருக்கு 'துளசி' என்ற பெயருமே கூட பிடித்திருந்தது. அவளது உயரமும் நிறமும் பார்த் தால் தமிழ் பெண் போலில்லை - வட இந்திய ரத்தமோ? அவளது கனிவான குரலும் அலட்டாத பேச்சும் நளின அசைவுகளும் அவள் நன்முறையில் வளர்க்கப் பட்டதின் சாட்சி. தவறாமல் ஞாயிறுகளில் ஆலயம் போவதாயும் சொன்னாளே - ஆக கிறிஸ்தவ அன்பும் பண்பும் அவளில் படியாமல் போயிருக்குமா? இவ்வீட்டிற்கான மருமகளில் வேறென்ன எதிர்பார்க்கிறோம்? போதுமே...

ஆனால் இதையெல்லாம் தான் எடுத்து புகட்டாமல், அகிலா தானாய் உணர்வது நல்லது.



அவளே மனமார, 'பிறப்பு பற்றியென்ன? துளசி என் மருமகளாக எனக்கு சம்மதம்' என வேணும்.

ஆனால் இதையெல்லாம் மீறிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு -

அது திலீபன்!

கட்டிக் கொள்ளப் போகிற அவனது விருப்பமும் நோக்கமும் என்ன?

அடுத்ததாய் இந்த வேலை, இன்ன நேரத்திற்குள் செய்து முடிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லாத அந்த சின்ன விடுமுறையை, மாற்றத்தை ராஜேந்திரனின் குடும்பம் ரசித்து அனுபவித்தது.

தன் பலகார பாத்திரங்கள் வேகமாய் காலியானதில் அகிலாவிற்குக் கூட திருப்திதான்... அடிக்கடி புன்னகைத் தாள்.

நான்கு பேருமாய் கேரம், லூடோ என்று விளையாடி ஜெயித்து, தோற்றார்கள்.

காற்றாட நடந்து, உப்பு நீரில் கால்களை அளைந்து, கடலலையின் தாலாட்டில் அயர்ந்து உறங்கிய பின் வீடு திரும்பியபோது அவர்களின் முகக் களையைப் போல, மனமும் தெளிந்திருந்தது.

மறுநாள் தன் கஸின் ஜெஸிந்தாவோடு மல்லிகாவின் திருமண சமயத்திற்கான பட்டுப் புடவைகளின் தேர் விற்கு அகிலா கிளம்ப, காரை ஓட்டியது திலீபன்தான். அவனருகே உட்கார்ந்திருந்த இளையவன் ஏதோ பேசி மூத்தவனை இடிக்க, அகிலா கடிந்தாள் -

''ஏன்டா தீபக், காரோட்டறவனை தொந்தரவு செய்யறே?''

''நம்ப வீட்டுக் கல்யாணமும் பக்கத்துல வருதுன்னு அண்ணனுக்கு ஞாபகப்படுத்தறேம்மா... இப்ப கொஞ்சம் நாளாய் நீங்க அதைப் பற்றியேதானே பேசறீங்க..?''

அகிலா புரியாதது போல நடித்தாள் -

''என்ன சொன்னேன்?''

''நம்ப மல்லியின் ஃப்பிரண்டைக் காட்டி, அண்ணனிடம் அபிப்ராயம் கேட்டதெல்லாம் எனக்குத் தெரியும்மா.. நாங்களும் எங்க பங்கிற்கு தளசி - அவங்களைப் பற்றி விசாரிச்சோம். பெயரைப் போல ரொம்ப விசேஷமான பொண்ணுன்னு ரிப்போர்ட்... இந்தக் காலத்தில் இப்படி சகலரிடமும் நல்ல பெயர் சம்பாதிக்கறதும் அபூர்வம்... ஆக... இட்ஸ் பைன் வித் அஸ். என்னண்ணா?''

''ம்ம்... துளசிதான் நீங்க எனக்குப் பார்த்திருக்கும் பெண் என்றால் எனக்குக் கல்யாணம் ஓ.கே.''

திலீபனும் அத்தனை வெளிப்படையாய் பேச, பெற்ற வள் சற்று திகைத்து, பின் தயக்கமாய் துளசியின் பூர்விகம் பற்றி கோடி காட்டினாள். தனக்கு மிகுந்த அதிர்வை, தொடர்ந்து கசப்பைத் தந்த அவ்விவரத்தை அவள் பாதி சொன்னதுமே திலீபன் இடைபுகுந்தான்.

''நான் கேள்விபட்டேன்ம்மா - ஸோ வாட்? துளசி யாருக்குப் பிறந்திருந்தாலென்ன? ஒரு கண்ணியமான குடும்பத்தின் அங்கமாய், நல்ல முறையில் வளர்ந்து உருவாகியிருக்கிறாள் - அழகோடு அறிவும் முக்கியமாய் பழகும் பண்பும், குணமும் சேர்நதமைவது அபூர்வம்...



கூடவே அபூர்வமான பெயரும் சேர்ந்து அவளுக்கு வாய்த் திருக்கிறது... ஐ லைக் துளசி!'' - என்றான் அழுந்த. அகிலாவின் கைகள் அவளது நெஞ்சில் அழுந்தப் பதிந்தன!

## 10

''ஒரு வெள்ளைக்கார அழகியின் ரோஜா நிற கன்னத்தில் சிறு மச்சம்... அக்கறுப்பு புள்ளியின் கவர்ச்சியை வர் ணிப்பதில் இரு கவிஞர்களுக்கிடையே போட்டா போட்டி!

'செழித்த ரோஜா தோட்டத்தில் ஒரு கறுத்த வண்டு தேன் அருந்துகிறது' - இது வெள்ளைக் கவிஞரின் கவிதை. மற்றவர் கறுப்பு இனத்தவர் - அவரின் வர்ணிப்போ -

'வெள்ளைக்காரனின் தோட்டத்தில் அடிமையாய் உழைத்துக் களைத்த ஒரு கறுப்பனை போலிருந்தது அம்மச்சம்' - என்று!

ஒன்று கற்பனை, அழகியல் உணர்வெனில் மற்றது சமூகப் பொறுப்புணர்வு - இரண்டுமே தப்பில்லையே அகிலா? நேரத்திற்கேற்ப மாறும் அவ்வளவுதானே?''

நயமாய் எடுத்துச் சொன்னார் ராஜேந்திரன்.

தன் கணவனின் குட்டிக் கதைகளை வழக்கமாய் ரசிக்கும் அகிலாவிற்கு இன்று அது ரசிக்கவில்லை - மனம் மரத்துக் கிடந்தது.

''ஆக உங்களுக்கும் அந்த துளசியைப் பிடிச்சிருக் குது?''

குற்றஞ் சுமத்தும் தொனியில் மெள்ள கேட்டாள்.

''பிரச்சினை வேற அகி. நம்ப மகனுக்கு அவளைப் பிடிச்சிருக்குது - மேலும் அந்த பிரியத்துக்கு விதை போட் டதும் நீதான்...''

''ஆனா முளைச்சது செடியில்லையே - களை! ஆக அதைப் பிடுங்கிட வேணாமா?''

''துளசி நறுமணமான, மிக விசேஷமான ஒரு செடி, அகிலா. அது எந்த சூழலிலும் நாறுவதில்லை. அதே போல இந்தப் பெண்ணின் பிறப்பு எப்படியோ - நல்ல படியே வளர்ந்திருக்கா. துளசி தன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக்கும் - அதுதான் இந்திய வீடுகளில் அதற்கு மாடம் அமைத்து கருத்தாய் வளர்ப்பது...''

''எனக்கும் அந்த ரகத் தகவல்கள் தெரியும். அது தாமரைக்கு ஈடான பவித்ரமான செடி - அது இருக்கு மிடத்தை கொசு அண்டாது...''

''ஆக சிக்கூன் - குன்யாவின் ஆபத்தில்லை. உடம் பிற்கு மட்டுமில்லாத அதை முகருபவரின் மனதிற்கும் புத்துணர்வும் ஆரோக்கியமும் தரும்... அதே போல துளசியும் நம் வீட்டிற்கும்...''

''அந்தத் தன்மைகள் எல்லாம் இந்தத் துளசிப் பெண் ணிற்கும் இருக்கும்னு ஏன் நினைக்கறீங்க?''

'வெடுக்'கென கேட்டாள் அகிலா.



''சரி - அவளை ஒதுக்க வேண்டாங்கறேன்... நான் போய் டாக்டர் வேதன்புவை சந்திச்சு, துளசியைப் பற்றி பேசினால் என்ன?''

''ஐயையோ - வேறு வினையே வேண்டாம்! உடனே அவர் அவளை நம்பத் தலையில் கட்டிடுவார்!''

ராஜேந்திரன் திகைத்து விட்டார் -

பத்தே நாட்களுக்கு முன்பு வரை அந்தப் பெண் துளசியை, அப்படிக் கொண்டாடிய அகிலா இன்று ஏனிப் படி அலறி ஒதுங்குகிறாள்?

''மரபணுக்கள்... ஜீன்ஸ் பற்றி கவலைப்படறேன்னு நினைக்கிறேன் அகி. யாருக்குப் பிறந்து, எதனால் கைவிடப் பட்டவளோன்ற அச்சம்... ம்ம்? ஒரு வேளை டாக்டர், பெண் பிறக்காத தன் குறை தீர, தன் உறவுக்கார குழந்தையையே எடுத்து வளர்த்திருக்கலாம்...''

''அப்படீன்னா அவளை ஒரு இளவரசி போலில்லையா வளர்த்திருக்கணும்? இப்பவோ படு சாதாரண புடவை, நகை, பஸ் பயணம்னு மட்டமாய் நடத்துறாங்களே?''

முன்பு 'என்னவொரு எளிமை' என்று அகிலா வியந்ததே இப்போது 'சாதாரணம்', 'மட்டம்' என்று திரிந்த மாயத்தில் கணவரின் வாயடைத்தது!

இனியும் மகனுக்காய் மனைவியிடம் பரிந்து பேசுவ தில் பிரயோஜனம் இல்லை என்று முடிவெடுத்தாலும் வேறு ஒருவரிடம் இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசத் தான் செய்தார்...

கைகளை நிதானமும் கவனமுமாய் கழுவித் துடைத்த பின்பு தட்டிலிருந்த சான்ட்விச்சை எடுத்துக் கொண்டார் டாக்டர் வேதன்பு. பின்பு தன் எதிரே அமர்ந்திருந்த புதிய நபரை ஆழப் பார்த்து, முறுவலித்தார் -

''ஸாரி - நீங்க பெர்ஸனலாய் பேசணும் என்றதால்தான் இந்த லஞ்ச் - நேரத்தை நாம பேச தேர்ந்தெடுத்தேன் - மற்றபடி தனித்து பேச, சமயம் வாய்க்காது, மிஸ்டர் ராஜேந்திரன்...''

''பரவால்ல டாக்டர்... கேட்ட இன்றே நேரம் ஒதுக்கி தந்தீங்களே ரொம்ப தாங்க்ஸ்...''

''துளசியைப் பற்றி பேசணும்னீங்களே - பிறகு தாமதிப்பேனா?''

ஒரு குழந்தை போல புன்னகைத்த அந்த புகழ்பெற்ற மருத்துவரை சற்று வியந்து பார்த்த பிஸினஸ்மேன் கேட்டார் -

''காலை எட்டிலிருந்து ஹாஸ்பிடலில்தான் இருக்கீங்க - மதியம் இவ்வளவுதான் உங்க சாப்பாடா?''

''மதியம் பன்னிரெண்டிற்கு இது. மூன்று மணிக்கு சூடாய் கீரை வடையும் காபியும். சாதம் குழம்பு, ரசம்னு சாப்பிட்டால் மூளையோடு உடம்பும் மந்தமாயிடும்... நம்மை நம்பி வர்ர நோயாளிகளைக் கவனமாய் குணப் படுத்தணுமே... ப்ளீஸ் - ஒரு சான்ட்விச்சேனும் எடுத்துக் கோங்க...''

''தாங்க்ஸ்'' - மரியாதை நிமித்தம் ஒரு முக்கோண ரொட்டித் துண்டை எடுத்துக் கொண்ட ராஜேந்திரன் தன்னையும் தன் குடும்பத்தையும் அறிமுகப்படுத்திக்



கொண்டார். சில நாட்களுக்கு முன்பு நிகழ்ந்த மல்லி காவின் நிச்சயதார்த்தத்தில் தொடங்கி, அங்கு தன் மனைவி டாக்டரின் மகளான துளசியை சந்தித்தது - அதைத் தொடர்ந்த .ணர்வு போராட்டங்களைச் சொல்லி முடித்தார்.

அவர் சொல்லாமல் விட்ட விவரங்களும் உண்டு -

'பெயரே விநோதமாயிருக்கேன்னு நான் ஆரம்பத்தி லேயே சந்தேகப்பட்டிருக்கணும். அந்தத் துளசி - என்ன ஜாதி, மொழி, மதமோ... முக்கியமாய் பெற்றவங்களே அவளை ஒதுக்கணும்னால் அவ தப்பான முறையில்தான் பிறந்திருக்கணும்... போயும் போயும் அப்படிப்பட்ட ஒருத்தியா நம்ப குடும்பத்தின் மூத்த மருமகளாய் வர்ரது?'

என்ற அகிலாவின் புலம்பல்கள் பலவற்றை 'எடிட்' பண்ணி விட்டார்!

'வாழ்வின் 10% உனக்கு என்ன நடக்கிறது என்பதில் அடங்கியிருக்கிறது - மிச்ச 90% அதை நீ எப்படி கையாள்கிறாய் என்பதில் இருக்கிறது!' என்ற முதுமொழி அகிலாவிற்கும் தெரியும்தான்... ஆனால் பாவம் சமீபமாய் அவள் வாழ்வில் நடந்த சில சம்பவங்களில் அவளால் தெளிவாய் சிந்தித்து சரியாய் கையாளமுடியவில்லை... முதலில் எகிறிக் குதித்து சீக்கிரமே துவண்டும் போனாள் -

ராஜேந்திரனும் குறுக்கிட்டிருக்க மாட்டார் - ஆனால் அவரை இங்கேத் துரத்தியிருந்தது சில கவிதை வரிகள்!

ஆங்கிலப் பத்திரிகையில் வரும் குறுக்கெழுத்து போட்டியை மிக சுவாரஸ்யமாய் நிரப்புபவர், அன்று வார்த்தைக்காய் அல்லாடி தேடி, மகன் திலீபனின் அறையி

லிருந்த அகராதியை எடுத்தார்... எடுத்தவரின் கண்கள் மகனின் கையெழுத்தில் கிறுக்கப்பட்டிருந்த சில வரிகளிலும் பட்டுத் தொலைத்தன!

**'நீ வெறும் வீணைதான்**

**நான் விரும்புவது**

**உனக்குள் ஒளிந்திருக்கும்**

**ராகங்களை...!'**

**'உன்னை முதலில் பார்த்தது சும்மாதான்**

**பிறகு சும்மா சும்மா பார்க்க வேண்டியிருந்தது!'**

சுருங்கிய தன் நெற்றியைத் தேய்த்தபடி யோசித்தார் - முதல் கவிதை அப்துல் ரஹ்மானினது... ஆனால் அக் காதல் வரிகளை திலீபன் தான் எழுதி அழகு பார்க்க வேண்டியதேன்?

தவிர, இரண்டாவது வழிசல் வரிகள் தன் பயலின் சொந்த சரக்கா? காதல் வரிகளைக் கிறுக்குமளவு திலீபனின் மனசு இளகிவிட்டதா? பெற்றவருக்கு ஒரு புறம் சிரிப்பாகவும் மறுபுறம் கவலையாயும் இருக்க, உடனே டாக்டர். வேதன்புவை சந்திக்க முடிவெடுத்து விட்டார்!

இனியும் இந்த வகை நோயை முற்ற விடக் கூடாதே என்கிற பதைப்பில்!

நோயாளிகளின் பல குறைகளை நுட்பமாய் புரிந்து கொள்ளும் மருத்துவர் இந்தப் பிரச்சினையையும் சரியாகவே உள்ளிழுத்துக் கொண்டார்.

புன்னகை மாறாமலேயே செருமிக் கொண்டவர் பேசினார் -



"துளசி என்பதற்கு அர்த்தம் 'ஒப்பற்ற ஒன்று' என்பது தான். அது அவளுக்கு ரொம்பப் பொருத்தமான பெயருந்தான் - ஆனால் அவள் எங்களுக்குப் பிறந்தவள் இல்லை என்பதில் உங்களுக்குச் சற்று நெருடல், சில சங்கடமான சந்தேகங்கள் எல்லாம்... இல்லையா ?"

மிக நாசுக்காய் குழப்ப பந்தின் நுனி நூலைப் பற்றி விட்டவரை நன்றியோடு பார்த்தார் ராஜேந்திரன்!

"துளசிக்கே தெரியாத சில உண்மைகளை வெளிப் படுத்தும் சமயம் வந்திடுச்சுன்னு நினைக்கிறேன் மிஸ்டர். ராஜேந்திரன். துளசி எங்க மகளில்லை - சரிதான். ஆனா அவ எங்களை பெரியப்பா, பெரியம்மான்னு அழைப்பது முறைதான்..."

"அதாவது துளசி... உங்க உறவுப் பெண்..."

"என் மனைவியின் தங்கையின் மகள்!"

"ஓ... அப்ப ஏனிந்த ரகசியம்?" முகம் மலர உற்சாகமாய் பேச ஆரம்பித்த ராஜேந்திரன் பொறுக்கும்படி கைகாட்டிய டாக்டர் தொடர்ந்தார் -

"ஆனா துளசி பிறந்தபோது அவ தாய்க்கு திருமணமாகலை. கேவலப் பேச்சு கேட்டபடி, கண்ணீரோடுதான் அவ தன் கர்ப்பத்தைச் சுமந்தா... அதுதான் ரகசியத்திற்கான காரணம்."

புன்னகை தொலைந்த முகத்தோடு டாக்டர் சொல்ல, ராஜேந்திரன் வாயடைத்து உட்கார்ந்திருந்தார்!

# 11

"'சிலர் உண்மையைப் பொக்கிஷமாய் போற்றுகின்றனர் - ஆகவே அதை மிக சிக்கனமாகவே பயன்படுத்துகின்றனர்' - பொய் பற்றிய வேடிக்கை மொழியை கேலியாய் கேட்டு சிரித்தாலும் நானும் அந்தத் தப்பைச் செய்ததுண்டு மிஸ்டர். ராஜேந்திரன். துளசி பற்றிய முழு உண்மையை யாரிடமும், ஏன் அவளிடமே நான் இந்நாள் வரைச் சொன்னதில்லை..."

"ஏன்... எதற்காய் துளிசியிடமேயிருந்து மறைக்கணும்? - விவரம் புரியற வயசு அவளுக்கு... தவிர புத்திசாலிப் பொண்ணு..."

முதலில் குழம்பிய ராஜேந்திரன் இப்போது திகைப்பிலிருந்து மீண்டு, விளக்கங்களுக்கான வினாக்களைக் கேட்கத் தொடங்கியிருந்தார்.

"சரிதான். ஆனால் அது என் மனைவி விஜயாவிற்கு பிடிக்கலையே. அவளது சம்மதமில்லாமல் அதை வெளிப்படுத்துவது எனக்கு முறையானதாய் படலை. ஆனால் துளசியைப் பிடித்து, ஏறக்குறைய அவளைப் பெண் கேட்குமளவில் வந்திருக்கும் உங்களிடம் எல்லாவற்றையும் சொல்றதுதான் முறைன்னு படுது..."

"என்னை விட, திலீபனின் - என் மகனின் நோக்கம், விருப்பம் இதில் முக்கியம்... அவன் துளசி வளர்ப்புப் பெண்ணுங்கறதை ஒரு குறையாய் நினைக்கலை.."

"தேங்க் காட்... ஆனா முழு விவரத்தையும் உங்க மகனிடமும் சொல்லுங்க - பிறகு முடிவெடுங்க.."



கனைத்துக் கொண்டவர் தொடர துளசியின் பிறப்பின் கதை ஆரம்பமானது -

'என் மாமனார் தேயிலை எஸ்டேட்டில் ஜி.எம்.மாக பணியாற்றினவர் - செல்வமும் செல்வாக்குமான பதவினாலும் தனிமையான வாழ்க்கை. அவருக்கு விஜயா, வினிதான்னு ரெண்டே பெண்கள். இளவயசிலேயே பெண்களின் தாயார் இறந்துட, பெண்களை பிரபல பள்ளி, கல்லூரிகளில் படிப்பிற்காய் சேர்த்தார் மாமா - ஹாஸ்டல்களில் தங்கி அவங்க படிச்சு முடிச்சதும், விஜயாவிற்கு திருமணம் என்னோடு நிச்சயமாச்சு. விஜி என்னோடு சென்னைக்கு வந்துட, இளையவளுக்குப் பொழுது நகரலை... இப்போது போல டி.வி., இன்டர்நெட்னு பொழுது போக்கு சாதனங்கள் இல்லாத காலம்."

"ம்ம்... அது இருப்பதைப் பற்றி அலுத்துக்கறோம். இல்லாததும் கொடுமையாய் இருந்திருக்கும் போல..."

"எஸ்டேட்டின் இளைய நிர்வாகியோடு வினிதா நெருங்கிப் பழகியிருக்கிறாள் - பெரியவர் அதைத் தப்பாய் எடுத்துக்கலை - ஆக தனிமையும் இளமையும் அவர்களுக்குப் பகையாயிடுச்சு... உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் பக்குவமில்லாமல்..."

புரிகிறது என்பதாய் தலையாட்டினார் ராஜேந்திரன்.

"வழிகாட்ட, உணர்வுகளுக்கு அணைகட்ட பெற்றவள் இல்லாத வினிதா, அவனையே கல்யாணம் செய்து கொண்டு எஸ்டேட்டிலேயே தொடர்ந்து வாழலாம்னு முடிவெடுத்த தைரியத்தில்... வரம்பு மீறிட்டாள்! ஆனால் வினிதா கர்ப்பமானதும், பயல் நடுங்கிட்டான்... ஆரம்ப த்ரில்... பிறகு திகிலாயிடுச்சு...! அவனுக்குப் பிறகு தான்

தன் பெற்றோரைப் பற்றி, அவர்களின் சம்மதம் பற்றி யெல்லாம் சந்தேகங்கள்... ஆக அதில் பயந்தவன் ஊரை விட்டே ஓடிட்டான்...''

''ஐயையோ...''

''மகள் கர்ப்பிணி என்பதை வெகு தாமதமாய், அதுவும் அவளே வந்து சொல்லவும்தான் அந்த அப்பா உணர்ந் தார்...

'எப்படியாவது அவரைத் தேடி வரவழைங்கப்பா' என்று வினிதா கெஞ்ச,

'கோழைப் பயல் - உன்னைக் கட்டியணைச்சவனுக்கு, கைப்பிடிச்சு எம்முன்னே வரும் தைரியமில்லையா? அந்தப் பொறுக்கியை நான் ஏன் தேடி பொறுக்கி வரணும்? கருவைக் கலைச்சிரு'ன்னு மிஞ்சினார்!

விஷயம் எங்களை எட்டிய போது வினிதாவுக்கு ஆறு மாத கர்ப்பம்! அதுவரை தன் அக்காவிடம் கூட அவள் ஏதும் சொல்லலை... அவர்களுக்கிடையே அதிக நெருக்க மில்லை... தங்கை தன்னிடம் மூச்சு விடாததில் விஜ யாக்குக் கோபம். ஏழாம் மாதத்தில் கருவைக் கலைப்பது முடியாது - பெரிய உயிருக்கும் ஆபத்துன்னு நான் எடுத்துச் சொன்னேன் - வினிதாவை சென்னைக்குக் கூட்டி வரலாம்னு நான் அபிப்ராயப்பட்டதை விஜயா ஏற்றுக்கலை... நம்ப குடும்பத்திற்கு களங்கம்னு... யுஸி... அவ கொஞ்சம் கௌரவம் பார்ப்பா...'' - வருத்தமாய் தலையசைத்தார் டாக்டர்.

சம்பந்தி அம்மாக்களுக்குள் இதில் நல்ல ஒற்றுமை எனப் பெருமூச்சோடு நினைத்துக் கொண்டார் ராஜேந் திரன். மனதின் சஞ்சலம் கூடியது.



''ஆக, முறையான கவனிப்பில்லாமல், மருத்துவ உதவியில்லாமல் எஸ்டேட்டில் பிரசவித்த வினிதா இறந் துட்டா...''

''கடவுளே... ஒரு இளம் பெண்ணுக்கு கடும் சோதனை தான் வாழ்க்கை...''

''வாழ்க்கையைக் குறை சொல்லுவதற்கில்லையே... அதை நாம சரியானபடி வாழலை - அவ்வளவுதான். கடவுளுக்கு அஞ்சுவதுதானே ஞானம்? அஞ்சி நேர் வழியில் நடந்தால் இதுமாதிரியான சஞ்சலங்களைத் தவிர்த்திடலாம்... பச்சைக் குழந்தையை என்னால் வளர்க்க முடியாதுன்னு கைவிரிச்சுட்டார் என் மாமனார்... அவர் ரிடையர் ஆகி, ஓய்ந்து போயிருந்தார் - தன்னாலும் முடியாதுன்னு விஜயாவும் மறுத்துட்டா... ஆனால்...''

உதடு கடித்தபடி சற்று மௌனித்த மருத்துவர், தொடர்ந் தார் -

''எனக்கு ஒரு பெண் குழந்தை வேணுமென்ற ஆசை.... பேச்சும் சிரிப்பும், பரிவுமான ஒரு பெண்குழந்தையில் லாமல் ஒரு குடும்பம் பூர்த்திப்படாதுன்னு ஒரு எண் ணம்...''

அது சரிதான் என்பது போல மற்றவரும் பலக்க தலையாட்டினார் -

''எனக்கும் அதே ஆசை, குறை எல்லாமுண்டு - வர்ற மருமகள்கள் - எனக்கு மகள்கள் - அவ்வளவுதான்.''

''உண்மை. ஆனால் ஒரு பெண்ணைக் குழந்தை பருவத்திலிருந்து வளர்க்கணும்னால், அதில் தாய்க்குத் தானே பொறுப்பு அதிகம்? வினிதாவின் மகளை நல்லபடி

வளர்க்க, என் மனைவி சம்மதிக்கலைன்னா ஏதும் சாத்தியமில்லையே... ஆக நான் ஏதும் கருத்து சொல்லலை... ஆனால் என் நோக்கமறிந்தோ என்னவோ... அந்தக் குழந்தை... மூணே மாதப் பச்சை மண்... ஒரு நாள் எங்க தோட்டத்தில் விடப்பட்டிருந்தது - அதுவும் துளசிச் செடியின் அடியில்.

"பூச்சிப் பொட்டு அண்டாதுன்னு அங்கே விடப்பட்டிருக்கலாம்... ஆனால் அது உங்க ஸிஸ்டர் - இன் - லா... அதாவது வினிதாவின் மகள்ன்றது என்ன நிச்சயம்?"

"வினிதாவிற்குப் பிரியமான பச்சைப் பட்டுப் புடவையில் பொதியப்பட்டிருந்தாள் குழந்தை! விஜயா உடனே அவங்கப்பாவிற்கு போன் போட்டு திட்டினாள் - குழந்தையை ஒரு விசுவாசமான வேலையாள் மூலம் சென்னைக்கு அனுப்பியதை ஒத்துக் கொண்ட மாமா -

'அது உன்னிடம் அடைக்கலமாகிட்ட சிசு. என்னால் அதன் தாயையே கருத்தாய் பேணி கரை சேர்க்க முடியாத போது, இச்சின்ன தளிரையும் நாசமாக்கணுமா - வேண்டாம்'னு அழுதார்."

"கேட்க கஷ்டமாயிருக்குது - ஆக இந்த ரகசியத்துடனேயே துளசி வளர்ந்துட்டா?"

"ஆனா... இந்த உண்மை தன் கௌரவத்தைக் குலைச்சிடும்ன்ற பயத்தில் விஜி, துளசிக்கு எளிய துணிமணிதான் தந்தாள் - வேலைக்காரர்களும் கண்டு பிடிச்சிடக் கூடாதுன்ற ஜாக்கிரதையில் துளசியை ஓட ஓட வீட்டு வேலையில் விரட்டுவா... ஆக துளசி பாவந்தான்..."



அவ்விளம் பெண்ணிற்கு அனுதாபம் செலுத்துவது போல இரு ஆண்களுமே சில விநாடிகள் மௌனித்திருந்தனர்!

"உங்க மகன்கள் எப்படி? தங்கைன்ற வாஞ்சையுண்டா?"

"மூத்தவனுக்கு இயல்பிலேயே இளகிய மனம். இளையவனுக்கு முரட்டு சுபாவம். ஆனா துளசி யாரையும் அனுசரிச்சு போயிடுவா - அது அந்த பிஞ்சிற்கு கர்த்தர் தந்த ஒரு நிதானம், பக்குவம்."

"அவ உங்க வீட்டில் வளர்ந்ததே பெரிய நன்மையில்லையா? பாசமும் பத்திரமுமான ஒரு கூடு... கண்ணியமான பின்னணியுள்ள ஒரு குடும்பத்தின் ஒரு அங்கமாயிருப்பதே பெரிய பேறு."

"ஒரு நல்ல பையனாய் பார்த்து, அவளுக்குத் துணையாக்கிவிட்டால் என் மனசு நிறைஞ்சிடும்."

"புரியுது - எனக்கும் அது நிறைவுதான்.. ஆனா என் வைஃப் அகிலாவிற்குத்தான்..." இழுத்தார் ராஜேந்திரன் பரிதாப முழியுடன்!

"புரியுது... அதாவது உங்க வீட்டிலும் கொஞ்சம் கௌரவம் பார்க்கறாங்க?" இருவரும் சற்று சங்கடமும் கசப்புமாய் புன்னகைத்தனர்.

"ஆனா நான் இங்கே வந்தது... என் மகன் திலீபனுக்கு துளசியை ரொம்பப் பிடிச்சிருச்சோன்ற சந்தேகத்தால்... அதுதானே முக்கியம்?"

"நான் மருத்துவர் என்பதால் சொல்றேன் - டோபமைன் என்கிற ரசாயனம் மூளையில் சுரக்கும் அமிலத்தின்

விளைவே... இந்தக் காதல்! இப்படி ஊறும் காதல் உணர்வு தொடர்ந்து நிலைப்பதில்லை.. ஆனால் காதலின் ஆரம்ப குஷி மறைந்த பிறகும் வாழ்க்கைத் தொடருமே...? ஆக உங்க மகனுக்கு எடுத்து சொல்லுங்க... அவன் யோசிச்சு முடிவெடுக்கட்டும்...''

''நல்லது டாக்டர்... இப்ப உங்க மாமனார்...?''

''துளசிக்கு ஐந்து வயசியிருக்கையில் அவர் இறந் தாச்சு... தன் சொத்துக்களை விற்று, மொத்தத்தையும் பேத்தியின் பேரில் எழுதி வச்சிட்டார்... இதுவும் கூட துளசி உட்பட யாருக்கும் தெரியாத மற்றொரு உண்மை... சட்டுன்னு உங்களிடம் ஏனோ சொல்லிட்டேன்... ப்ளீஸ்...''

''இல்லை... திலீபனுக்குக் கூட இப்ப நான் அதைச் சொல்லப் போறதில்லை... அவனது முடிவை காசு தீர்மானிக்கக் கூடாது...!''

''க்ரேட்.... இப்படி ஒரு குடும்பம் கிடைச்சால் துளசி அதிர்ஷ்டக்காரி. நான் அதை வெளிப்படுத்தாதற்கு, பண ஆசையுள்ள ஒருவன் எம்பொண்ணை காசிற்காய் மட்டுமே கல்யாணம் செய்யும் அவலம் நேர வேண் டாமேன்னுதான்... ஆனால் இது உங்க மனைவியின் மனம் இதனால் மாறக் கூடுமானால்...''

சங்கடமான மௌனம் இருவரிடையே சில கணங்கள் நின்றது.

''பெண்களின் நிலைமை பரிதாபமானதுன்னு சற்று முன்பு கூட ஒரு யோசனை என்னில்... இப்போ புரியுது பணம் கூட அவளுக்குச் சாதகமில்லை... பாதகந்தான்...



ல்ல... துளிசியின் சொத்தைப் பற்றி யாரிடமும், அகிலாவிடமும் நான் சொல்லப் போறதில்லை...''

டாக்டரின் முகம் மேலும் மலர்ந்தது.

நிம்மதி தந்த மலர்ச்சி அது.

''துளசியை அவளுக்காகவே அகிலாவும் ஏற்றுக்கொள் ளணும் - மறுத்தால் விட்டுடலாம்.''

ராஜேந்திரன் தீர்மானமாய் சொல்ல, எழுந்த டாக்டர் வேதன்பு எதிரேயிருந்தவரின் கைகளை உணர்வுமிக, பற்றிக் கொண்டார்.

''சந்தோஷம். எம்மனசில் புது நம்பிக்கையோடு நிம்மதியும் வந்தாச்சு மிஸ்டர். ராஜேந்திரன். எங்க துளசி, உங்க வீட்டு மருமகளாய் மணம் பரப்பணும்னு இப்பவே கடவுளிடம் 'பெட்டிஷன்' போட ஆரம்பிச்சுட்டேன்...''

''தாங்க்ஸ் டாக்டர். எல்லார் மனசும் பக்குவப்பட நாம கொஞ்சம் காத்திருக்கத்தான் வேணும்...''

''ஏன்னா அது கடவுளால் மட்டுமே சாத்தியம்!''

பிரிந்த இருவரின் மனங்களுக்குள்ளேயும் சந்தோஷ மும் சஞ்சலமுமான எண்ணங்கள் சமமாய்...!

## 12

'சிறுவயதில் அம்மா நிலாவைக்
காட்டியதும்
உள்ளே பால்சோறு இறங்கியது போல
நேற்று உன்னைக் காட்டியதும்
என்னுள் புது நேசம் இறங்கி விட்டதே!'

தான் எழுதியதைத் தானே ரசித்து சிரித்துக் கொண் டான் திலீபன்! வழக்கமாய் அவன் ரசித்து பருகும் காபி இன்று ஆடைகட்டிக் காத்திருந்தது! பைஜாமா ஜிப்பாவில் கட்டிலில் வெவ்வேறு கோணங்களில் உருண்டவனின் உள்ளே விதவிதமான காதல் வரிகள் ஓடின!

இப்படி சில வரிகளைத் தான் கிறுக்கக் கூடும் என்ற வன் சில நாட்கள் முன்பு வரை நினைத்ததே இல்லை...!

'காதல் - மணல் கடிகாரம் போல...

நெஞ்சு நிரம்ப நிரம்ப, மூளை காலியாகிப் போகும்' என்பது சரிதான்! துளசியைக் கண்டதிலிருந்து மனசு கட்டுப்பாடிழந்து முட்டாளாகித்தான் போனது!

இனமறியாத ஒரு புது உணர்வு - சில நேரம் இனிப் பாயும் பல வேளைகளில் முள்ளாகவும் அவனை வதைத் தெடுத்தது!

முதலில் பூரிப்பாய் துளசியைத் தனக்குக் காட்டிய அம்மாவே பிறகு முறுக்கிக் கொண்டதுதான் முள்ளுக் கான காரணம்.

'பாறைகள் இல்லாவிட்டால் நதிகளுக்கு சங்கீதமில்லை' யாமே? அதே போல இந்த புது ஈர்ப்பு, தடைகளால்தான் மேலும் இறுகியதோ... சர்க்கரைப் பாகு போல ஆற ஆற, இறுகுகிறதோ?

'முட்டாளே - முதலில் துளசி உன்னை விரும்புகிறாளா என்பதைத் தெரிந்து கொள்' - புத்தி அவனை எச்சரித்தது.

அது தெரியாவிடினும், அப்பா தன் கட்சி என்பது தெரிந்தது. ஆனால், அவர், அம்மாவிடம் தனக்காய்



அடித்துப் பேசத் தயங்குவதும் தெளிவு. ஆக வேறு பக்கமாய் உதவியை நாட வேண்டியதுதான் - இப்படி திலீபன் முடிவெடுக்க, அவனது பெரியம்மா மகளான மல்லிகா அந்த உதவியைத் தர துடிப்பாயிருந்தாள்!

இன்னும் ஒரே ஒரு பரீட்சை மட்டுமே - பிரிவு ஏக்கத்துடன் தாங்கள் துள்ளித் திரிந்த கல்லூரியை ஏக்கமாய் சுற்றி வந்திருந்தனர் படிப்பை முடித்த மாண விகள்.

வீடு கிளம்பிய துளசியைத் தேடி பிடித்து வழிமறித் தாள் மல்லிகா "என்ன அவசரம் துளசி? கேண்டீன்ல ஒரு காபி குடிக்கலாம் வா..."

"ல்ல மல்லி - படிக்கணும் - இன்னும் ஒரு எக்ஸாம் இருக்கே...?"

"அதற்காய் படிக்க, முழுசாய் ரெண்டு நாளுமிருக்கே - பிறகென்ன?"

"அதில்லை..." துளசி தடுமாறினாள்.

'நீ உன் திலீபண்ணாவின் பேச்சை எடுப்பாய் என்று அஞ்சியே விலகுகிறேன்' என்று வெளிப்படையாய் சொல்ல முடியாதே!

ஆனால் மல்லிகா விடவில்லை.

"இந்த பேபி பிங்க் ஸல்வார் உனக்கு ரொம்பப் பொருத்தம் துளசி - பெரிய ரோஜாப் பூ போலிருக்கே. சரி இந்த 'கோக்'கையாவது ஷேர் பண்ணிக்கலாம்..."

மல்லிகா நீட்டிய பாட்டிலிலிருந்து சற்று பருகியவளை மல்லிகா சொன்னது விக்க வைத்தது -

''எங்க திலீபண்ணாவுக்கு சதா உன் பேச்சும் நினைப் புந்தான் துளசி... அகிலா சித்தி அநாவசியமாய் யோசித் தாலும்.. அண்ணன் அதை எல்லாம் கண்டுக்கறதா யில்லை...''

''பெரியவங்களுக்குப் பிடிக்காத விஷயத்தைப் பற்றி நாம பேச வேண்டாமே, மல்லி.''

''புரியலையே. அவங்க குடும்பத்துக்குப் பெரியவரான ராஜேந்திரன் சித்தப்பாவிற்கும் உன்னை ரொம்ப பிடிச்சுப் போச்சே...''

''ஆனா உங்க சித்திக்கு...'' முடிக்கத் தெரியாமல் கையிலிருந்த பாட்டிலையே பார்த்து நின்றாள் துளசி.

''ஆரம்பத்தில் உன்னைக் கண்டு பரவசமானதே அவங்கதானே - நினைவில்லை? தன் நகைகளைக் கூட உனக்குப் போட்டு ஆர்ப்பாட்டம் பண்ணினாங்களே? இப்போ உப்பு சப்பில்லாத ஒரு விஷயத்திற்காய் யோசிக் கறாங்க...''

''அவங்களை குற்றம் சொல்ல முடியாது...''

''குற்றம் உன்னுடையதும் இல்லையே துளசி? பிள்ளைகள் சில நேரம் பெற்றவர்களின் பாவத்தை சுமக்க நேர்ந்திருது...''

மல்லிகா சொல்ல, கேட்டவளின் முகம் சிவந்தது -

சமீபமாய் தன் பிறப்பு பற்றி தெரிய வந்த மேலும் சில உண்மைகள் அவளை மிக குறுக வைத்திருந்தன -

தன்னை புகலிடம் தந்து வளர்த்த பெரியம்மாவின் சொந்த தங்கையின் மகளே தான், என்பது ஒரு விதத்தில்



ஆறுதல் என்றால், தன் தாய்க்கு தான் முறையான உறவில் பிறந்த பெண்ணல்ல என்பது துளசியை அவ மானத்தில் முக்கி எடுத்தது.

துளசிச் செடியின் கீழே கிடந்தவளை ஏன் கண்டெடுத் தார்கள்? யார் கண்ணிலும் படாமல் தான் செத்தொழிந் திருந்தால் இன்று இந்த அவல நிலை இல்லை... ஆனால் இந்த கழிவிரக்கம் சரியல்ல என்பது உணர்ந்து சுதாரித்தாள் -

கடவுளின் சித்தமின்றி எதுவும் நடப்பதில்லை.

இப்படி ஒரு கண்ணியமும் பாதுகாப்புமான குடும்பத் தில் தான் வளர்ந்தது அவரின் கிருபையேயன்றி வேறென்ன?

போதுமான உணவு, உடை, தரமான கல்வி, பெரிப் பாவிடமிருந்து தேவையான பரிவு, பெரியம்மா கற்றுத் தந்த வீட்டு வேலைகள், கட்டுப்பாடு... இத்தனை இருந்ததே...

மிகத் திருப்தியான வாழ்வுதான்... இதுவே போது மென்ற நிறைவில்தான் வாழ்ந்து வந்தாள்... அன்று திலீபனை சந்தித்து அவன் பேசக் கேட்கும் வரையில்...!

சில நாட்களுக்கு முன்பும் இதே போலத்தான் ஒரு மாலை நேரம் மல்லிகா இவளை வழிமறித்தாள் -

'துளசி - என் நிச்சயதார்த்த போட்டோஸ் எல்லாம் வந்தாச்சுப்பா... நீயும் பல ஸ்நாப்ஸில் ஜோராய் விழுந் திருக்கே...'

'ஐயோ... ஏன்?'

'ஏன்னா?'

'நேராய் நிற்காமல் - விழுந்திருக்கறதாய் சொன்னியே?'

'போடீ... இந்த ஓட்டை ஜோக்கிற்கெல்லாம் எங்க அகிலா சித்திதான் சிரிக்கணும் - அவங்க அப்படியே உன் விசிறி ஆயிட்டாங்க தெரியுமா?'

'தெரியும் - என் நகைகளை வாங்க அவங்க வீட்டிற்குப் போனப்ப பலத்த காற்று... அதுல தெரிஞ்சுகிட்டேன்...!'

'ம்ம்... ஓஹோ விசிறி, காற்றுன்னு அம்மா மறுபடி ஓட்டை ஜோக்கா...?'

'இனிமே இல்லை - ஒரு நாள் ஆல்பத்தைக் கொண்டு வந்து காட்டேன் மல்லி...'

'கொண்டே வந்திருக்கேனே - காரில் இருக்குது - வா, பார்த்தபடியே உன்னை வீட்டில் கொண்டு போய் இறக்கிடறேன்.'

'ரைட்' - என்று உற்சாகமாய் காரில் ஏறிய துளசிக்கு காரின் ஓட்டுனரின் இருக்கையில் பார்த்த போது கூட ஏதும் வித்தியாசமாய் படவில்லை. அவனைத் தோழியின் நிச்சயதார்த்தத்தின் போது சந்தித்தது நினைவிலிருந்ததால், ஒரு சின்ன முறுவலை அவனுக்குத் தந்து விட்டு படங்களை ஆர்வமாய் பார்க்கலானாள் -

காரை இடையே நிறுத்திய மல்லிகா -

'சார்ட் பேப்பர், பென் வாங்கணும். நீ காரிலேயே இரு துளசி - ரெண்டே நிமிஷத்துல வந்துடறேன்' என்று இறங்கிக் கொள்ள, அந்த நேரத்தை திலீபன் தனக்கு சாதகமாக்கிக் கொண்டான்.



துளசியைப் பேர் சொல்லி அழைத்து, அவளது முகம் பார்த்து அவன் பேசிய, சில நொடிகள் அவளது நிம்மதியைக் குலைத்து விட்டன!

மிக வசீகரமான ஒரு ஆண், தெளிவாய் -

'நான் உன்னை விரும்புகிறேன் - திருமணம் செய்து வாழுமளவிற்கு' என்று சொன்னால் ஒரு இளம் பெண்ணால் அதைச் சாதாரணமாய் எடுத்துக் கொள்ள முடியுமா - என்ன?

வியர்த்து வெலவெலத்துப் போனாள்...!

'இன்ஃபாக்ட் நம் கல்யாணப் பேச்சை ஆரம்பிச்சது எங்கம்மா... ஆனா உன்னைப் பார்த்த பிறகு எனக்கும் கூட அதில் சுவாரஸ்யம்தான்னு வையேன்... ஆனால் உன் சம்மதம் தெரியாமல் தொடர வேண்டாம்னு தான்...'

முகம் வெளுத்து, நடுங்கும் விரல்களை இறுகக் கோர்த்து சிலையாய் உட்கார்ந்திருந்தவளைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது போலும்.

'உன்னை அவசரப்படுத்தலை... கட்டாயப்படுத்தலை துளசி... யோசிச்சு பதில் சொல்லு - சரிதானே?' புன்னகையோடு அன்று பேச்சை முடித்துக் கொண்டான்.

ஆனால் அதன் பின்பு திலீபனின் தந்தை, தன்னை வந்து சந்தித்தது பற்றி வேதன்பு பெரியப்பா இவளிடம் பூடகமாய் தெரிவித்திருந்தார். துளசியின் பிறப்பு பற்றி மேலும் சில உண்மைகளை அவர் சொன்னதும் அப்போதுதான்... கல்லூரியில் மல்லிகாவின் கேலி வேறு விஷயத்தை மேலும் பிட்டு வைத்தது...

அதுவரை தெளிந்திருந்த துளசியின் மன ஓடையில் இன்ப சலசலப்பு.

உள்ளான துளசியிலிருந்து நேசம் நறுமணமாய் கிளம்பி, புது கிறுகிறுப்பூட்டியது!

அந்த போதையில் பார்த்த இடமெல்லாம் திலீபனின் முகம் தெரிந்தது!

அவனது புன்சிரிப்பு பூங்காற்றாய் மோதி சிலிர்க்க செய்தது!

ஆனால் அந்நிலை நீடிக்கவில்லை. தான் வளர்ப்பு மகள் எனத் தெரிந்த திலீபனின் தாய் தன்னை வெறுத்ததும் அவள் காதை எட்ட, வெந்நீர் பட்ட மலராய் வெந்து வாடினாள்.

அன்று அவளை வீட்டில் இறக்கி விட திலீபனின் பெற்றோர் வந்த போது - அகிலா ஆன்ட்டியின் முகத்தில் முதலிலிருந்த வரவேற்பு முடிவில் இல்லையே...

அவசரமும் அவதியுமாய் தன்னுள் திலீபனின் உருவம் ஆழப்பதியாமலிருக்க அவள் அழிக்க முனைந்து கொண்டிருக்கும் நிலையில், மல்லிகா ஏன் இந்தப் பேச்சைத் தொடருகிறாள் என்ற பதைப்பு.

''சொல்லு துளசி - அண்ணனுக்கு உன்னைப் பிடிச்சது போல உனக்கும் அவரைப் பிடிச்சிருக்குதானே? அவர் நல்ல குணசாலி, எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது - நல்ல படிப்பும் உழைப்பும் உண்டு - அதற்கெல்லாம் நான் காரன்ட்டி. உன் பதில் என்ன? திலீபண்ணா அதை அறிய ரொம்ப ஆவலாய் இருக்கார்...''



''ஸாரி.. மல்லி... எனக்கு அவரை பிடிக்கலை...'' சற்று திணறினாலும் தீர்மானமாய் சொல்லிவிட்டு விலகி நடக்கலானாள் துளசி!

## 13

**'ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்**

**ஆசை விடவிட ஆனந்தம் ஆமே'**

பழந்தமிழ் பாடல் இப்படி அழகாய் அறிவுறுத்தியதை, புதுமொழி வேறு விதமாய் சொன்னது -

'கெட்ட ஆசைகள் சமையலறையை நாடிவரும் கோழி குஞ்சைப் போல' - என்று!

தன்னுள் இருப்பது கெட்ட ஆசையா? - துளசி குழம்பினாள். தன் தகுதிக்கு மீறிய ஆசைதான்... ஆனால் திலீபனை தான் கண்டு ஆசைப்படவில்லையே..? அவர் தானே இவளைத் தன் வாழ்க்கை துணையாக்க ஆவலாயிருக்கிறார்...

தனிமை அவளை மேலும் குழப்பியது. மற்றொரு ஹாஸ்பிடலின் திறப்பு விழாவிற்காய் பெரியம்மாவுடன் பெரியப்பா போயிருக்க, வீடு ஒரு விநோத அமைதியுடன் அவளை மட்டும் சுமந்திருந்தது - விஜய், வினய் அண்ணன்மார் மாலை நேரங்களை ஒருநாளும் வீட்டில் வீணாக்குவதில்லை - அவர்களது கூற்றுப்படி!

ஆக சூழலை சாதகமாக்கிக் கொண்டு அவளுக்குள் வியாபித்திருந்தான் - திலீபன்!

எப்படி ஏன் தன்னுள் புகுந்தான் அவன்?

முதன்முறை அவன் பேசியது படமாய் அவளுள் பதிந்திருந்தது -

அவன் 'உனை விரும்புகிறேன்' என்று சொல்ல, திகைத்தாலும், ஒளிக்காமல் சொல்லத்தான் செய்தாள் -

'நான் டாக்டரின் சொந்த மகளல்ல....'

'தெரியும் - மல்லி சொன்னா - அதை ஒரு தகவலாய் எடுத்துக் கொண்டேனேத் தவிர, தடங்கலாய் அல்ல!'

'ஆனால் குடும்பத்தில் பெரியவங்க உண்டு - அவங்களுக்கு அது தவறாகவே படும்...'

'அந்த செய்தியைப் பெருந்தன்மையாய் எடுத்துகிட்டால்தான் அவங்க பெரியவங்க... எங்கம்மாக்கு அது ஜீரணிக்க முடியாத ஒரு நெருடல்தான் - ஆனால் பிறகு சரியாகிடும் - அதாவது நம்ப கல்யாணத்திற்குப் பிறகு.'

எத்தனைத் துணிவான பேச்சு!

அந்தத் துணிவும் தெளிவும்தான் அவனுக்காய் தன் மனக் கதவைத் திறக்க செய்தனவோ?

அந்த நாளிற்குப் பிறகு மனதுள் சதா சலனங்கள்!

மரம் சும்மா நின்றாலும் காற்று அதை விடுகிறதா என்ன?

சீண்டி சிலுப்புகிறதே!

அது இன்பமான சிலும்பலாய் இராதபடி அவன் தாய்க்கு நெருடல்தான் என்று அவனே சொன்னது முள்வேலி இட்டது.



இப்படி சிந்தனைகளோடு அல்லாடியவளை டெலிபோன் மணி சத்தமாய் அழைத்தது -

"ஹலோ...?"

மறுமுனையில் கேட்ட ஆணின் குரல் திலீபனுடையது எனவும் முகம் வெளுத்தாள்... ஆனால் அந்த வெளுப்பு சீக்கிரமே இதயப் படபடப்பில் சிவக்கவும் செய்தது.

"துளசி, போனில் பேசுவது நேரில் பேசுறதை விட உனக்கு வசதியென்பதால் கூப்பிட்டேன். தவிர உன் பெரியப்பா, பெரியம்மாவை ஒரு பங்ஃஷனில் பார்த்ததாய் எனக்குத் தகவல் வந்தது - ஆக எந்த இடையூறும் இல்லாமல் நீ உன் அபிப்ராயத்தை எல்லாம் சொல்லலாம்..."

"என்ன... எது பற்றிய அபிப்...ராயம்?"

"என் நோக்கத்தை முன்பே உனக்குத் தெரிவிச்சுட்டேன் - உன் விருப்பத்தை யோசிச்சு தெரிவின்னேன்... இப்ப சொல்றியா?"

"மல்லி... மல்லிகாட்ட சொன்னேனே..." தடுமாறினாள்.

"அது எனக்கு உண்மைன்னு படலை. இப்ப என்னிடம் யோசித்து நிதானமாய் சொல்லு, துளசி."

அவனது குரலின் குழைவு அவளைத் தாக்கியது - ஆனாலும் மனதைக் கடினமாக்கினாள் -

"அது உண்மைதான்... எனக்கு சம்மதமில்லை."

மறுபக்க மௌனம் அவனது அதிர்ச்சியை தெரிவித்தது.

"நாம அதிகமாய் பழகலை... ஆனால் பழக பழக ரொம்பப் பிடிக்கும்னு படுது... என்னைப் பிடிக்காததற்கு ஏதும் காரணம்...?"

"பிடிக்கும் பிடிக்காதுன்ற மேலோட்டமான விருப்பத்தை விட, நாம பெரியவங்களின் நோக்கம், ஆசைக்கு உட்படுவது முக்கியம்னு படுது."

"ஓஹோ - அப்ப எங்கம்மாவின் தயக்கம்தான் உன் மறுப்புக்குக் காரணம் - ம்ம்?"

"ஆமா - உங்களைப் பெற்று, ஆளாக்கிய அவர்களின் ஆசீர்வாதம், பூரண திருப்தி இல்லாத ஏதும் சிறக்காது. ஆக நாம இனி இதுபற்றி பேச வேண்டாம்... ப்ளீஸ்."

தன் குரலில் குழைவை, கெஞ்சலைத் தவிர்த்தவள், இணைப்பையும் துண்டித்தாள். 'இது மரியாதையில்லை' - என்று புத்தி முரண்டினாலும், அவன் மறுபடி தன்னை அழைக்காதபடி போன் ரிஸீவரை விலக்கி வைத்தாள்.

நெஞ்சம் பாரமாகி நொந்தது - அவ்வேதனையைக் குறைக்க முயலுவது போல கண்கள் சொரிந்தன.

எத்தனை நேரம் அந்த உப்பு நீரில் கரைந்திருந்தாளோ....

பரீட்சை முடிந்து விட்டதால், இனி புத்தியை எதிலும் மும்முரமாய் ஈடுபடுத்தவும் வழியில்லை... வரும் நாட்களை எப்படிக் கழிப்பது?



இப்படி கண்ணீரில் கரைப்பதா...? எதிர்காலம் சூன்யமாய் தோன்றி பயங்காட்டினது.

வாசலின் அழைப்பு மணியின் அலறலில் பதைத்து எழுந்தாள். முறைப்படி ரிஸீவரை வைத்தவள், முகம் கழுவ நேரமின்றி, முந்தானையில் முகம் துடைத்தபடி வாசலுக்கு ஓடினால் - தாமதமானால் பெரியம்மாவிற்கு கோபம் வரும்.

ஆனால் வந்து வாசற்படியில் நின்றிருந்தது... அகிலா!

அழுது வீங்கிய துளசியின் விழிகள் அச்சத்துடன் வந்தவளை ஏறிட்டன.

"வா... வாங்க ஆன்ட்டி."

"வந்துட்டேம்மா - விவரம் புரிஞ்ச பிறகு இனி காலந்தாழ்த்தக் கூடாதுன்னு உடனே வந்துட்டேன்..."

புரியாமல் நின்றாள் இளையவள்.

தான் வாசலை மறித்தாற்போல நிற்பது புரிய, விலகி வரவேற்றாள் -

"உள்ளே வாங்க ஆன்ட்டி... பெரியம்மாவும் பெரியப்பாவும் சீக்கிரம் வந்திருவாங்க... உக்காருங்க...."

அகிலாவின் முகமும் இயல்பாயில்லை.

"கொஞ்சம் தண்ணீ வேணும்மா... அப்படியே கிளம்பினேனா..."

"இதோ."

தண்ணீர் டம்ளரோடு, ஒரு குவளை பழரசமும் வந்தது -

நீரைப் பருகி ஆசுவாசப்படுத்திய அகிலா, நிதானமாய் பேசலானாள் -

''ஸாரி துளசி - இரட்டிப்பாய் எனக்கு நீ மன்னிப்பு தரணும். முதலில் உன்னைப் புரிஞ்சு கொள்ளாததற்கு - பானை சோற்றுக்கு ஒரு பருக்கைதானே பதம்? நம்ப முதல் சந்திப்பிலேயே அது புரிஞ்சும் உன்னை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் எனக்கில்லாமல் போனதற்கு. அடுத்த ஸாரி - கொஞ்சம் முன்பு நீ போனில் பேசினதை ஒட்டுக் கேட்டதற்கு.''

துளசியைத் தன்னருகே அமர்த்தியவள் பேச்சைத் தொடர்ந்தாள் - ''எங்க வீட்டில் மாடியிலும் கீழுமாய் ஒரே தொடர்புள்ள போன் உண்டு - எக்ஸ்டென்ஷன் முறை. அரை மணி நேரத்திற்கு முன் திலீபன் பேசுவது தெரியாமல் நான் ஒரு பிரண்டிடம் பேச போனை எடுத்தால் உன் குரல் கேட்டது. போன் ரிங் பண்ணலைங்கறதால திலீபன் தான் உன்னை கூப்பிட்டிருக்கணும்னு புரிஞ்சுது. உடனே நான் இணைப்பைத் துண்டிச்சிருக்கணும். ஆனால் திலீபன் உன்னை எதற்கு அழைச்சான், நீ என்ன பேசறேன்ற திகைப்பு முதலில்... பிறகு ஆத்திரங்கலந்த ஆர்வம் - ஆக கேட்டேன். ரொம்ப சுருக்கமாய் நீ பேசினதில் உன் பண்பு மறுபடி தெரிஞ்சது... அதில் எனக்கான பாடமும் இருந்துச்சு துளசி. திலீபன் அன்பான, அற்புதமான பயல்... அவன் மனைவியாக வாழப் போறவளுக்கு ஒரு குறைவும் இராது - இதை மல்லியும் உங்கிட்ட சொல்லியிருக்கணும் - ஒரு கவர்ச்சியான இளைஞன் தன் காதலைச் சொன்னால் எந்தப் பெண்ணுக்கும் சலனமேற்படும்... அதுவும் கண்ணியமாய் கல்யாணம் செய்துக்கலாம்னு ப்ரபோஸ் பண்ணினால் மனம் இளகிடும். ஆனால் என் வறட்டு கௌரவத்தை உணர்ந்த நீ, உன் எதிர்கால வாழ்வை, வளத்தை எனக்காய் விட்டுத் தர தயாராயிருந்தே...''



''ல்ல... ஆன்ட்டி... வந்து... அப்படியெல்லாம் ஏதுமில்லை...''

''ஓஹோ... என் மகனை விரும்பாமல்தான் இப்படி முகம் வீங்கற அளவு அழுதியா?''

குறும்பாய் புன்னகைத்தாள் அகிலா.

''ல்ல... பரீட்சைக்குப் படிச்சதில்...''

''விழுந்து விழுந்து படிச்சதில் இப்படியுமா வீங்கும்?''

இப்போது துளசிக்குமே சிரிப்பு வந்தது.

''போதும்டீ செல்லம் - எனக்குப் பூரண சம்மதம். நீங்க நல்லபடி வாழ என் ஆசி பூரணமாய் உண்டு - சரிதானே? இனி எப்போதும் நீ சிரிச்சபடி இருக்கணும்... ஏன்னா அப்பதான் எம்பையனும் சந்தோஷமாயிருப்பான். இத்தனை குணமான பெண்ணைத் தவற விட்டுட்டால் நாந்தான் முட்டாள். இத்தனை பண்பான மருமகளை இனி எப்படித் தேடினாலும் கிடைக்க மாட்டான்னு பட, உடனே திலீபனைக் காரை எடுக்கச் சொல்லி உன்னைப் பார்க்க வந்து சேர்ந்துட்டேன்...''

''அப்ப... அவரும்...?'' அழுது சோர்ந்த துளசியின் விழிகள் பிரகாசத்துடன் வாசலுக்குத் தாவ, அகிலா சிரித்தாள் - மனம் நிறைந்த சிரிப்பு அது.

''அடடா... சம்மதம் இல்லைன்ன பெண்ணைப் பாருங்கப்பா! இனி பேச வேண்டாம்னு உத்தரவு போட்ட எம்மருமகளின் ஆசை இப்ப தெரிஞ்சு போச்சே...''

''ல்லம்மா... அது வந்து.''

''நல்லவேளை கல்லூரி எக்ஸாம்ஸ் முடிஞ்சுது. என்னை அறியாமலேயே நான் வச்ச தேர்விலும் நீ அமர்க் களமாய் பாஸாயிட்டே துளசி. பெரியவங்களிடம் இத் தனை மரியாதையுள்ள பெண்ணை இக்காலத்துல பார்க்கறதே அபூர்வம்...''

வாசலிலிருந்து குரல் வந்தது - ''ஆமாமா - இப்படி -

'என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ'ன்னு கெஞ்சற மாப்பிள்ளைப் பையனும் கூட ரொம்ப அபூர்வம்தான்...''

திலீபன் பேசியபடி நுழைய,

''நான் சொல்ல வந்தது சீக்கிரமே நிச்சயதார்த்தத்தை வச்சுக்கலாம்னு...''

''நான் கல்யாணம் பண்ணிக்கோன்ல கேட்டேன்... இப்ப முகத்தில இருக்கற சிரிப்பு சம்மதம்ங்குது... பிறகேன் நிச்சயதார்த்தமெல்லாம்?''

திலீபன் சீண்ட, வெட்க மிகுதியால் செய்வதறியாது திகைத்த துளசி, அருகிலிருந்த தன் வருங்கால மாமி யாரின் பின் பதுங்கிக் கொண்டாள். ஒண்டிய சின்னவளை ஆதரவாய் அணைத்த அகிலா, அவள் நெற்றியில் முத்தமிட, அங்கு நேசத்தின் நறுமணம் இதமாய் பரவியது...